# வாழ்க்கைத்தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்

## 7 ஆந் தரம்

### ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி



சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்

## தரம் 07

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
2008

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்**

**தரம் - 07**
**ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி**

முதற் பதிப்பு 2007

© தேசிய கல்வி நிறுவகம்

**சமூக விஞ்ஞானத்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**

***அச்சு :***

***அச்சகம்***
தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

புதிய நூற்றாண்டில் ஏற்படுத்தப்படும் இக்கலைத்திட்ட மறுசீரமைப்பானது தற்போது பாடசாலைகளில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு வழி முறையாகக் கருதப்பட முடியும். இக்கலைத்திட்டமானது இன்றைய இளஞ் சந்ததியினர் எதிர்நோக்கியுள்ள தனிப்பட்ட இயலாமைகளிலிருந்து அவர்களை விடுவிக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் கல்வி முறையினை நோக்கின் இற்றைக்கு பல வருடங்களுக்கு முன் இலங்கையானது கல்வித் துறையிலே மிகவும் முதன்மை நிலையிலிருந்தது. ஆனால் தற்போது ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பின்னடைந்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எதிர்காலத்தைக் கருத்திற் கொள்ளாது நிகழ்காலத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு சீர்த்திருத்தங்களை மீண்டும் மீண்டும் முன்வைத்தமை இப்பின்னடைவுக்காக காரணிகளுள் ஒன்றாகும்.

இவ்வாறான நிலையிலிருந்து விடுபடும் நோக்கில் தேசிய கல்வி நிறுவகத்தின் அதிகாரிகள் தெளிவானதொரு தொலைநோக்கின் அடிப்படையில் கலைத்திட்டத்தில் மறுசீரமைப்பை மேற்கொள்ள முன்வந்துள்ளனர். புதிய கலைத்திட்டத்தின் நோக்கமானது மாணவர் சமூகத்தின் தேடலையும் கற்றலையும் ஊக்குவிப்பதுடன் மாணவரின் தேர்ச்சிகளை மேம்படுத்துவதுமாகும். இந்நோக்கத்தை அடைவதற்கு ஆசிரியரின் வகிபாகத்தில் முழுமையான மாற்றம் ஏற்படுவது அத்தியாவசியமானது. இப்புதிய கலைத்திட்டமானது தற்போது நிலவும் ஆசிரியர் மையக் கல்வியிலிருந்து மாணவர்மையக் கல்விக்கும் தேர்ச்சிமையக் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் இட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஆசிரியர் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் தயாராகுதல் வேண்டும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியரை அவ்வாறானதொரு முறைக்கு இட்டுச் செல்வதற்குப் பெருமளவு பங்களிப்புச் செய்யும் என நம்புகிறேன்.

அறிவுரைப்பு வழிகாட்டியிலுள்ள வழிகாட்டல்களை நன்கு பின்பற்றுவதனூடாக வெற்றிகரமான ஆசிரியராக மிளிர்வதற்கான ஆற்றல் உங்களுக்குக் கிடைக்கும். மேலும் கற்பித்தலின் போது மாணவர்களைக் கணிப்பிடுவதற்கும் இது உங்களுக்கு உதவும். தேடலும் தர உள்ளீடுகளும் அடங்கிய வழிகாட்டலானது மாணவர்களுக்கு உதவும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு அதிபர்களுக்கு நேரசூசியைத் தயாரிக்கும் போதும் அருமையான வளங்களைப் பகிர்ந்தளிக்கும் போதும் வெளிவாரி கண்காணிப்புகளின் போதும் இவ்வழிகாட்டல்கள் பெரிதும் உதவும்.

இவ் அறிவுரைப்பு வழிகாட்டியானது விதிக்கப்பட்ட ஒன்றன்று. ஆசிரியர்களுக்கு ஆக்கத் திறனுடன் பொருத்தமான பல்வேறு செயற்பாடுகளையும் சுயமாக உருவாக்கிக் கற்பிக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வறிவுரைப்பு வழிகாட்டியிலுள்ள செயற்பாடுகள் மாதிரிகளாகும். பிரதேச வேறுபாடுகளுக்கேற்ப ஆசிரியர்கள் சுயமாக செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள முடியும்.

இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் உதவிய கல்வியியலாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வெளிவாரியான உதவிகளை வழங்கியவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***பேராசிரியர் ஜே.டபிள்யூ.விக்ரமசிங்ஹ***
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# அறிமுகம்

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப, 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்த்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில், குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும் அமைந்திருந்தமையால் அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச் செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்த்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில், அவ்வப் பாடங்களில் மாணவர் அடைந்துகொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங் காணப்பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்கின்ற அதே நேரம் அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றின் உருவாக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற, ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்துகொள்வதுடன், அதில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

இந்நூலில் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில், புதிய கற்றல்-கற்பித்தல் செயன்முறை ஒன்று விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச் செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், புத்தகங்களை வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், இயலுமெனில் இணையத் தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றற் கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்ப முடியும். இதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தகத்தினை உசாத்துணை நூலாகக் கொள்ள முடியும். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களுக்கு சென்றடையச் செய்வது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுகள் மூலம் போஷிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு, இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை வழிகாட்டியாகக் கொள்ளவும். இதனூடாக புத்தாக்கத்திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் புதிய வகுப்பறைக் கற்றல்-கற்பித்தற் செயன்முறையின் போது மாணவர்கள் எப்போதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால், அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர், சில சந்தர்ப்பங்களில் எதிர்கொள்கின்ற க்'டங்கள்-



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இடையூறுகளை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை, மேலும் பலப்படுத்தக் கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல்-கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

***விமல் சியம்பலாகொட***
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# வாழ்க்கைத் தேர்ச்சிகள் (பாகம் I)

## ஆலோசனைக் குழு

பேராசிரியர் ஜே.டபிள்யூ.விக்கிரமசிங்ஹ - பணிப்பாளர் நாயகம் - தே.க.நி
திரு.விமல் சியம்பலாகொட - உதவிப்பணிப்பாளர் நாயகம் - தே.க.நி

## மேற்பார்வை

கலாநிதி. உ. நவரத்தினம் - பணிப்பாளர் - சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி

## இணைப்பாளர்

திரு. எம்.கே. கிங்ஸ்லி பிரியந்த - செயற்றிட்டத்தலைவர் - தே.க.நி
திரு.ஏ.எல்.எஸ். அபேவிக்கிரம - செயற்றிட்டத்தலைவர் - தே.க.நி

## எழுத்தாளர் குழு

உள்வாரி:

கலாநிதி எச்.பீ.ஏ லலிதா பட்டுவிட்டகே - பிரதம செயற்றிட்ட அதிகாரி- தே.க.நி
திரு.எம்.கே. கிங்ஸ்லி பிரியந்த - செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி
திரு. பந்துல தயாரத்ன - பிரதம செயற்றிட்ட அதிகாரி- தே.க.நி
செல்வி. ஏ.கே. விதானகே - பிரதம செயற்றிட்ட அதிகாரி- தே.க.நி
செல்வி. மங்கலிகா வீரசிங்ஹ - பிரதம செயற்றிட்ட அதிகாரி- தே.க.நி
திருமதி.எம்.பீ.ஆர். தனவர்த்தன - பிரதான செயற்றிட்ட அதிகாரி தே.க.நி
திருமதி.டீ.எச்.சீ.என். தர்மபால - செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி
திரு.ஏ.எல்.எஸ். அபேவிக்கிரம - செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி
திரு.எஸ். கருணாகரன் - உதவிச் செயற்றிட்ட அதிகாரி தே.க.நி
திரு.எச்.எஸ்.பீ. டயஸ் - உதவிச் செயற்றிட்ட அதிகாரி தே.க.நி

வெளிவாரி:

திருமதி ஐராங்கனி ரணசூரிய - ஆசிரியர் ஆலோசகர், பிலியந்தலை வலயம்
திருமதி டபிள்யு.ஏ.கே. தர்சனி - ஆசிரியர் ஆலோசகர், ஹோமாகமை வலயம்
திருமதி யூ.ஏ.சந்திரா குணதிலக்க - ஆசிரியர் ஆலோசகர், களனி வலயம்
திரு. ஜே.எம்.எம். ஜயசுந்தர - ஆசிரியர் ஆலோசகர், நிக்கவரெட்டிய வலயம்
திரு.எம்.ஏ.ஏ.பீ. மல்லவராரச்சி - ஆசிரியர் ஆலோசகர், நிக்கவரெட்டிய வலயம்
திருமதி. ஜே.எம். சுமணசந்திரலதா - ஆசிரியர் ஆலோசகர், களனி வலயம்

## கணனி வடிவமைப்பு

செல்வி. எம்.என்.எப் றிஹ்னா நயீம் - தேசிய கல்வி நிறுவகம்

## அட்டைப்பட வடிவமைப்பும் சித்திரமும்

ரவீந்திர தேனுவர - உதவிச் செயற்றிட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம்

## ஏனைய உதவிகள்

செல்வி ஏ.எல்.எஸ்.பீ. அத்தபத்து - தேசிய கல்வி நிறுவகம்
திருமதி ீரானி சமரக்கொடி - தேசிய கல்வி நிறுவகம்
திருமதி தில்ஹானி பெரேரா - தேசிய கல்வி நிறுவகம்
திரு. ஆர்.எம். ரூபசிங்க - தேசிய கல்வி நிறுவகம்

# குடியுரிமைக்கல்வி (பாகம் II)

## ஆலோசனைக் குழு

பேராசிரியர் ஜே.டபிள்யூ.விக்கிரமசிங்ஹ - பணிப்பாளர் நாயகம் - தே.க.நி
திரு.விமல் சியம்பலாகொட - உதவிப்பணிப்பாளர் நாயகம் - தே.க.நி

## மேற்பார்வை

கலாநிதி உ. நவரத்தினம் - பணிப்பாளர் - சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி

## இணைப்பாளர்

திரு.ஏ.எல்.எஸ். அபேவிக்கிரம - செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி

## எழுத்தாளர் குழு

1. திரு.பீ.எல்.ஆர். ரோஹன குமார - பிரதம செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி
2. திரு.எம்.எச்.எம். ஹஸன் - பிரதம செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி
3. திரு.ஏ.எல்.எஸ். அபேவிக்கிரம - செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி
4. திரு.எம்.கே.கே. பிரியந்த - செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி
5. திரு.எஸ். கருணாகரன் - உதவிச் செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி
6. திரு.ஸீ.எஸ்.ஜயசிங்ஹ - ஆசிரியர் நிலைய முகாமையாளர் ஹொரண வலயம்
7. திருமதி ஏ.எம்.பீ.அபேசிங்ஹ - உதவி ஆசிரியை, தெல்தெனிய தேசிய பாடசாலை
8. திரு.டபிள்யூ.எம்.டி.பீ.சப்புவித - உதவி ஆசிரியர் புனித தோமஸ் தேசிய பாடசாலை, மாத்தளை
9. திருமதி எஸ்.பீ.கனேகொட - உதவி ஆசிரியை சவுத்லண்ட் மகளிர் வித்தியாலயம், காலி
10. செல்வி எஸ்.எம்.பீ.கே. சமரசிங்ஹ - உதவி ஆசிரியை வத்தேகம மகளிர் வித்தியாலயம், கண்டி
11. டபிள்யூ.எம்.டபிள்யூ.பண்டார - உதவி ஆசிரியர் , பதுளை தேசிய பாடசாலை, பதுளை
12. திருமதி எஸ்.பீ.பேமாவதி - உதவி ஆசிரியை பிற்றபத்தர ம.வி, மாத்தறை.
13. திருமதி எம்.எம்.ஜீ.ஸீ.ரத்நாயக்க - உதவி ஆசிரியை பெண்கள் உயர்பாடசாலை,கண்டி
14. திருமதி பீ.பீ.மாலிக்கா - ஆசிரிய ஆலோசகர் ஹம்பாந்தோட்டை வலயம்

## தமிழ் மொழிவளப் பங்களிப்பு

திரு.எம்.எச்.எம். ஹஸன் - பிரதம செயற்றிட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம்
திரு.என். சிதம்பரநாதன் - முன்னாள் பணிப்பாளர் - தேசிய கல்வி நிறுவகம்
திருமதி.எஸ்.பாலசுந்தரம் - முன்னாள் பிரதி ஆணையாளர்- இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## கணனி வடிவமைப்பு

செல்வி. எம்.என்.எப் நிஹ்னா நயீம் - தேசிய கல்வி நிறுவகம்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# உள்ளடக்கம்

பக்கம்


- அறிமுகம் 01
- பாடநோக்கம் 02
- விரிவான பாடத்திட்டம் 5-11
- பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் 12-13
- கற்றல் - கற்பித்தல் முறையியல்
  - அறிமுகம் 14-18
  - மாதிரிச் செயற்பாடுகள் 19-175
- கணிப்பீடும் மதிப்பீடும் 176-180
- கற்றல் - கற்பித்தல் நீடிப்புக் கருவிகள் 181-187

## 1.0 அறிமுகம்

வாழ்க்கைத்தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் எனும் பாடம் 2008 இல் 7 ஆந்தரத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. புதிய பாடத்திட்டம் பிரதானமாக இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி வாழ்க்கைத்தேர்ச்சிகள் பாடத்திட்டமாகும். அப்பகுதி பிரதானமான ஐந்து தேர்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. சுய விளக்கத்துடன் செயற்படுதல், ஆளுமை வளர்ச்சிக்காக ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விழுமியங்களுக்கு மதிப்பளித்து முன்மாதிரியாகத் தொழிற்படுதல், வாழ்க்கைச் சந்தர்ப்பங்களையும் வாழ்க்கை தோற்றப்பாடுகளையும் கண்டறிவதற்கும் விளைதிறனுடைய கற்றலுக்காகவும் தரவுகளையும் தகவல்களையும் பயன்படுத்தல், நல்ல ஆளிடைத் தொடர்புகளைப் பேணல் போன்ற அம்சங்கள் தொடர்பான தேர்ச்சிகளை விருத்தி செய்வதில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

பாடத்திட்டத்தின் இரண்டாம் பகுதி குடியுரிமைக்கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. குடும்ப அங்கத்தவர்களிடையே நல்வாழ்வுக்கான இடைத்தொடர்புகளினூடாக அவர்களது உரிமைகள், கடமைகள், பொறுப்புக்களை விளங்கி வாழப்பழகுதல், மக்கட் சமூகத்தினுள் காணப்படும் இடைத்தொடர்புகளை இனங்காணல், பிரசை என்ற வகையில் இடைத்தொடர்புகளை இனங்காணல், பிரசை என்ற வகையில் கடமைகளையும் பொறுப்புக்களையும் ஆற்றுதல், ஏனையோருக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு உரிமைகளை அனுபவித்தல், பண்பாட்டு அருஞ்செல்வங்களை மதித்தல், ஏனைய பண்பாடுகளை மதித்தல், பண்பாட்டு அருஞ்செல்வங்கைள பெருமையுடன் காத்தல், தமது பண்பாட்டின் தனித்துவத்தைக் காத்தல் தேசிய ஒற்றுமையை உருவாக்குதல் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. எதிர்கால இளஞ்சந்ததியினரை மானுடப் பண்புகளும் தேர்ச்சிகளும் நிரம்பப் பெற்ற, சமூகத்துக்குப் பயன்தரத்தக்க நல்ல பிரசைகளை உருவாக்குவதே இப்பாடத்திட்டம் முன்வைக்கப்படுவதன் நோக்கமாகும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 2.0 பாட நோக்கம் (பாகம் ஒன்று)

- தமது ஆற்றல்களையும், திறன்களையும், பலவீனங்களையும் அறிந்து கெர்ணடு எதிர்கால இலட்சியங்களைக் கட்டியெழுப்புதல்.
- நாளாந்தச் செயற்பாடுகளை மிகுந்த திட்டமிடலுடனும் ஒழுங்கமைப்புடனும் மேற்கொள்ளல்.
- மனவெழுச்சிகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதுடன் மனஅழுத்தத்தைக் கறைத்துக் கொள்ளல்.
- ஆளுமை விருத்திக்காக விளையாட்டு, வினோத அம்சங்கள், அழகியல் சார்ந்த செற்பாடுகளில் ஈடுபட்டு ஓய்வைப் பயனுள்ளதாகக் கழிப்பார்.
- சிறந்த ஆளிடைத்தொடர்புகளைப் பேணி பரிவுணர்வுடன் செயற்படுவார்.
- பயனுறுதியுள்ள தொடர்பாடலில் ஈடுபடுவார்.
- நாளாந்தச் செயற்பாடுகளில் உடன்பாடான (நேரான) மனப்பாங்குகளுடன் செயற்படுதல்.
- விமர்சன ரீதியாகவும் ஆக்கபூர்வமாகவும் தொழிற்படுதல்.
- தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வதுடன் தலைமைக்கு மதிப்பளித்தல்.
- பயனுறுதியுள்ள முடிவுகளை மேற்கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.
- இடர்முகாமைத்துவத்திற்குப் பங்களிப்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களை இழிவளவாக்குவதில் பங்களிப்புச் செய்தல்.
- தனிப்பட்ட, சமூக முரண்பாடுகளை இழிவளவாக்குதல்.

## பாட நோக்கம் (பாகம் இரண்டு)

- பல்வகைமையான சமூகத்தில் ஒற்றுமையாக வாழ்வது தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்ளல்.
- மனிதப் பண்புகளையும் விழுமியங்களையும் பாதுகாத்து சிறந்த பிரசைகளாக்குதல்.
- சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் மதிப்பளிக்கும் பிரசையாக சமூகத்திற்குப் பங்களிப்புச் செய்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- தனியாள், சமூகச் செயற்பாடகளின் போது பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்படல்.
- இலங்கை, உலகின் ஆட்சி முறைகள் தொடர்பாக விளங்கிக் கொள்ளல்.
- தொடர்ச்சியாக மாற்றமடைந்துவரும் உலகில் எதிர்பாராததும், பிரதிகூலமானதுமான சந்தர்ப்பங்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தேவையான ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.
- அன்னியோன்யமாகவும் பொறுப்புர்டனும் கூடிய வகைகூறலுடனும் சமூகமொபன்றைக் கட்டியெழுப்புதல்.
- சமூகத்தின் சீரான இயங்கு நிலைக்காக கழகங்களையும் அமைப்புகளையும் பயன்படுத்துதல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# விரிவான பாடத்திட்டம்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 3.0 பாடத்திட்டம்

### 7 ஆந் தரம் வாழ்க்கைத்தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் (பாகம் ஒன்று)

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 7.1 சுய விளக்கத்துடன் செயற்படுவார். | 7.1.1 தனித்துவத்தை உறுதிப்படுத்தி, சுய மதிப்பை விருத்தி செய்து கொள்வார். | • தம்மைப்பற்றிய மதிப்பை உருவாக்கிக் கொள்வதன் முக்கியத்துவம்<br>• தமது தனித்துவமும் மதிப்பும் தம்மிலேயே தங்கியுள்ளது.<br>• நன்மதிப்பையும் தனித்துவத்தையும் எப்போதும் காத்தல். | 06 |
| | 7.1.2 வாழ்க்கையின் வெற்றிக்கு உவப்பான சக்திகளை உரியவாறு பயன்படுத்துவார். | • சமூகத்தில் காணப்படும் உவப்பான உவப்பற்ற சக்திகள்.<br>• பல்வேறு சக்திகள் காரணமாக சமூகத்தில் காணப்படும் பிரதிகூலங்களை அணுகிநோக்கல்.<br>• உவப்பான சக்திகளை வாழ்க்கை யுடன் இணைத்துக் கொள்ளுதலும் உவப்பற்ற சக்திகளில் இருந்து விலகி இருத்தலும். | |
| | 7.1.3 சரியான வாழ்க்கை நோக்கத்தின் பால் தமது வாழ்க்கையை நெறிப் படுத்துவார். | • வெற்றிகரமான வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோள் இருக்க வேண்டியதன் அவசியம்.<br>• ஒரு நோக்கத்தின்பால் தமது செயல் களை முன்னுரிமைப்படி நெறிப் படுத்தல்.<br>• கவர்ச்சிகரமான பல்வேறு பொருள் களை இனங்காணலும் தமக்குப் பொருத்தமானவற்றில் மாத்திரம் கவனஞ்செலுத்துதலும். | |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 7.2 ஆளுமை விருத்திக்காக ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவார் | 7.2.1 விளையாட்டு, பொழுதுபோக்குகள் போன்றவற்றில் ஈடுபடுவார். | • வேலையின் வெவ்வேறு இயல்புகளை இனங்காண்பார்.<br>- நீங்கள் செய்வது யாது?<br>- அதனை எவ்வாறு செய்வது?<br>- நீங்கள் ஏன் அதனைச் செய்கிறீர்கள்?<br>• ஓய்வுநேரங்களில் கட்டுப்பாட்டுடன் ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடுதல்.<br>• ஓய்வு நேரத்தைப் பயனுடையவாறு பயன்படுத்துதல். | 06 |
| | 7.2.2 அழகியல் செயற்பாடுகளினூடாக ஆளுமைச் சமனிலையை உருவாக்கிக் கொள்வார். | • அழகியல் தொழிற்பாடுகளின் பெறுமானம்<br>- களிப்பு<br>- நயப்பு<br>- மனவெழுச்சி வெளிப்பாடு<br>- வாழ்க்கையை விளங்கிக் கொள்ளல் | |
| 7.3 விழுமியங்களை மதித்து முன்மாதிரியாகச் செயற்படுவார். | 7.3.1 வெற்றிகரமான வாழ்க்கைக்கு விழுமியங்களைத் துணையாகக் கொள்வார். | • சமூகத்தின் நல்வாழ்வுக்கு விழுமியங்களின் இன்றியமையாமை<br>• தாம் பேண வேண்டிய, மதிக்க வேண்டிய விழுமியங்கள்<br>• தனியாள் விருத்திக்காக விழுமியங்களைப் பயன்படுத்தல் | 06 |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 7.4 வாழ்க்கைச் சந்தர்ப்பங்களையும் தோற்றப்பாடுகளையும் கண்டறிவதற்கும் வினைதிறனான கற்றலுக்கும் தகவல்களையும் தரவுகளையும் பயன்படுத்துவார். | 7.4.1 வெவ்வேறு மூலகங்களில் இருந்து கிடைக்கும் தகவல்களை ஆய்ந்தறிந்து பயன்படுத்துவார். | • வாழ்க்கைத் தேவைகள், ஏனைய தேவைகளுக்காக தரவுகள், தகவல்களின் முக்கியத்துவமும் தகுதியும்<br>• பல்வேறு தரவு, தகவல் சேகரிப்பு முறைகள்<br>• தரவுகளையும் தகவல்களையும் ஒழுங்கமைத்தலும் முன்வைத்தலும் | 06 |
| | 7.4.2 வாழ்க்கையின் சவால் மிக்க சந்தர்ப்பங்களின் போது ஆக்கப்பூர்வமான சிந்தனையுடன் செயற்படுவார். | • காண்பவை, கேட்டவை ஆகியவற்றின்பால் வெவ்வேறு கோணங்களில் நோக்குவார்.<br>• சம்பவங்களுக்கும் விடயங்களுக்கும் இடையிலான தொடர்புகளை இனங்கண்டு அவற்றுக்கு புதிய சந்தர்ப்பங்களை முன்வைப்பார்.<br>• வாழ்க்கைச் சந்தர்ப்பங்களிலும் சவால்களின் போதும் சாதுரியமாகவும் ஆய்ந்தோய்ந்தும் செயற்படுவார். | |
| 7.5 நல்ல ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார். | 7.5.1 வெற்றிகரமான வாழ்க்கைக்கு நல்ல ஆளிடைத்தொடர்புகளைப் பயன்படுத்துவார். | • தனியாக வாழும் போது ஒருவர் எதிர் நோக்கும் பிரச்சினைகள்<br>• பலரின் பங்களிப்பினூடாக உருவாகும் தனியாள் அபிவிருத்தி<br>• வாழ்க்கைப் பயணத்தை இலகுபடுத்தும் நல்ல ஆளிடைத் தொடர்புகள்<br>• நல்ல ஆளிடைத்தொடர்புகளைப் பேணும் முறைகள், உத்திகள் | 06 |
| | 7.5.2 முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும் தீர்ப்பதற்கும் நல்ல ஆளிடைத் தொடர்புகளைப் பயன்படுத்துவர். | • முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்கள்<br>• நல்ல ஆளிடைத் தொடர்புகள் மூலம் முரண்பாடுகளை இழிவளவாக்கிக் கொள்ளும் நுட்பமுறைகள் | |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 7 ஆம் தரம் வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் (பாகம் II)

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 7.1 கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதனூடாக குடும்ப அங்கத்தவர்களிடையே சிறந்த இடைத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவார். | 7.1.1 சமூகத்தின் மிகச்சிறியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான அலகாகக் கருதப்படும். குடும்பத்தில் சிறந்த உறுப்பினராக நிலையான குடும்ப அலகொன்றை கட்டியெழுப்ப முன்வருவார். | குடும்பம்<br>• அணுக்குடும்பம்<br>• கருக்குடும்பம் | 10 |
| | 7.1.2 குடும்பம் மற்றும் அயலவர் இடையே அன்னியொன்னியமான தொடர்புகளையும் ஒன்றிய வாழ்வையும் மேற்கொள்ள பழகுவார். | குடும்ப உறுப்பினர்களும் உறவினர்களும்<br>• தமது நெறுங்கிய உறவினர்களை அறிந்து கொள்வதற்காக பயன்படுத்தும் சொற்கள்.<br>• பல்வேறு பிரதேசங்களில் உறவினர்களை விளிப்பதற்காக பயன்படுத்தும் சொற்கள்.<br>• குடும்பத்தில் நடைமுறையிலுள்ள பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள்<br>- பழக்கவழக்கங்கள்.<br>- சம்பிரதாயங்கள் | |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| | 7.1.3 குடும்பத்தின் உறுப்பினர் என்ற வகையில் தமது உரிமைகளை அனுபவித்து கடமைகளை நிறைவேற்றி ஒழுக்கத்துக்கு அடிப்பணிந்து வாழ்வதற்குத் தேவையான மனிதப்பண்புகளை விருத்தி செய்து கொள்வார். | • குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள், கடமைகள், பொறுப்புக்கள்<br>• தமது குடும்பத்திலும் அயலவர்களுக்கிடையேயும் நிலவும் தொடர்புகள்.<br>• குடும்பமொனறில் உருவாகும் சிறந்த பிரசையொருவருக்கு இருக்க வேண்டிய குணவியல்புகள். | |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 7.2 மக்கள் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் தமது உரிமைகளை அறிந்து கொள்வதுடன் கடமைகளையும் பொறுப்பக்களையும் நிறைவேற்ற முன்வருவார். | 7.2.1 மக்கள் சமூகத்திடையே நிலவும் இடைத் தொடர்புகளை விசாரித்தறிவார். | எமது மக்கள் சமூகம்<br>• சமூகத்தை அறிமுகஞ் செய்தல்.<br>• மக்கள் சமூகத்திடையே நிலவும் இடைத் தொடர்புகள் | 10 |
| | 7.2.2 உரிமைகள், கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றுவார். | • சமூகத்தில் காணப்படும் விரும்பத்தக்க, விரும்பத்தகாத சக்திகள்<br>• கடமைகளும் பொறுப்புக்களும் நடைமுறைப்படுத்தப்படும் விதம் | |
| | 7.2.3 மக்கள் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் சட்ட வரம்புகளுக்க உட்பட்ட வகையில் தமது உரிமைகளை அனுபவிப்பதற்குப் பழகுவார். | • சட்ட வரம்புகளுக்குள் உரிமைகளை அனுபவித்தல். அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளுக் கேற்ற வகையில்<br>• குடும்பமொன்றில் உறுவாகும் சிறந்த பிரசையொருவருக்க இருக்க வேண்டிய குணவியல்புகள். | |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| 7.3 தற்கால பன்மைச் சமூகத்தில் தமது கலாசாரத்தை பாதுகாத்துக் கொண்டு ஏனையோரின் கலாசாரத்துக்கு மதிப்பளித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுத்துவதற்கு பங்களிப்புச் செய்வார். | 7.3.1 தமது கலாசார உரிமைகளை மதித்து ஏனையோரின் கலாசாரங்களுக்க மதிப்பளிப்பதற்குத் தேவையான திறன்களை விருத்தி செய்து கொள்வார்.<br><br>7.3.2 தமது கலாசாரத் தனித்துவத்தை பாதுகாத்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கு முக்கியத்துவம் வகிப்பார். | எமது கலாசாரம்<br>• கலாசாரத்தை வரைவிலக்கணஞ் செய்தல்<br>• பல்கலாசாரத்துக்குரிய விசேட இயல்பகள்<br>• சகல கலாசாரங்களிலும் காணக்கூடிய பொதுவான அம்சங்கள்<br><br>• தேசிய தனித்துவமும் தேசிய ஒற்றுமையும்<br>• தேசிய கீதமும் தேசிய கொடியும் தேசிய இலட்சினையும்<br>• தேசிய மலரும் தேசிய மரமும்<br>• சிறந்த பிரசையொருவருக்கு இருக்க வேண்டிய விழுமியங்கள். | 10 |

# பாடசாலைக் கொள்கையும் பாடசாலை வேலைத்திட்டமும் (வாழ்க்கைத்தேர்ச்சிகள்)

"வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுனிமைக்கல்வியும்" பாடத்தைப் பாடசாழைலயில ் கற்பிக்கும் போது வகுப்பறைக்கு மட்டுப்படுத்தப்படாது தேவையான எல்லாச்ச சந்தர்ப்பங்களிலும் வெளி செயற்பாடுகளிலும் மாணவரை ஈடுபடுத்தல் முக்கியமாகும்.

பாட இணைச் செயற்பாடுகளிலும் வகுப்பறைக்கு வெளியேயான செநுற்பாடுகளிலும் மாணவரை ஈடுபடுத்தலானது பல்வேறு துறைகளைச் சேர்ந்த திறன்களை அவர்களிடத்தே விருத்தி செய்வதற்குப் பெரிதும் துணையாக அமையும். முடிவெடுத்தல், தலைமைத்துவம், பங்களிப்பு, ஒழுங்கமைப்பு, திட்டமிடல் போன்ற பல்வேறு செயற்பாடுகளின் போது முடியுமான உல்லாச் சந்தர்ப்பஙகளிலும் மாணவரின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். விசேடமாக பாடசாலையில் செயற்படுகின்ற மறைந்த கலைத்திட்டத்தினைச் செயற்படுத்தும்போது அதிபர் உட்பட எல்லா நிர்வாகத் தலைவர்களும் பிள்ளைகளும் வாழ்க்கைத்தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்குப் பொருத்தமான செயற்றிட்டங்களைச் செயற்படுத:துவதில் கவனம் செலுத்தல் பயன்மிக்கதாக அமையும்.

இதற்கு மேலதிகமாக பல்வேறு சமூக நலன்புரிச் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்ததக் கூடியமாவறு பாடசாலைக் கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் நவின மயப்படுத்தல் அவசியமாகும். விசேடமாக ஆசிரியர் பெற்றோர், சமூக வேலைத்திட்டங்களில் மாணவரின் பங்களிப்பையும் வழிகாட்டலையும் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் பாடசாலை கொள்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். மேலும் பாடசாலையில் எனது நல்ல வேலை நூல் எனும் நாட்குறிப்பேடு ஒன்றை ஒவ்வொரு மாணவனும் பேண வழிப்படுத்தப்படல் வேண்டும். இதனை இடைக்கிடையெ பரீட்சிப்பதன் மூலம் மாணவரிடத்தே இதனை வலியுறுத்தல் முக்கியமானதாகும்.

விசேடமாக வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் எண்ணக்கருக்களை வாழ்க்கை தேர்ச்சி பாட ஆசிரியர் மட்டுமன்றி ஏனைய ஆசிரியரும் அபிவிருத்தி செய்தல் பாடசாலை கொள்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். அவர்களது ஒத்துழைப்பையும் இதற்காகப் பெறல் பொருத்தமானது. அவ்வாறே இப்பாடத்துடன் தொடர்புடைய சேவைகளைப் பெறக்கூடிய வெளி வளவாளர்கள் நிறுவனங்கள் போன்றவற்றின் பங்களிப்பைக் கூடியளவு பெற முனைய வேண்டும். வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியே பல்வேறு சந்தர்ப்பங்களினூடாக வாழ்க்கைத் தேர்ச்சிகள் வெளிக்காட்டுப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பாடத்தைக் கற்பதன் விளைவாக பாடசாலையீ ஒழுக்க்ம் தொடர்பான பிரச்சினைகள் குறைவடைதல், மாணவர் மகிழ்வுடன் கற்கும் ஓரிடம் உருவாதல் போன்ற மகிழ்ச்சிகரமான சூழல் உருவாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# பாடசாலைக் கொள்கையும் பாடசாலை வேலைத்திட்டமும் (குடியுரிமைக்கல்வி)

மனித இனத்திற்கு சமத்துவமாக சேவையாற்றவே பாடசாலை உள்ளது. உலக மக்கள் பற்றிய விளக்கத்தை வளர்க்கவும் மனித வாழக்கைக்கும் மனித இனத்திற்கும் கௌரவமளிக்கவும் பாடசாலையிலேயே கற்பிக்கப்படுகின்றது. மேலும் நல்ல மனப்பாங்கினையும் நல்ல நடத்தையும் கொண்ட ஆட்களை உருவாக்குவதும் பாடசாலையில் பொறுப்பாகும். ஒற்றுமையாகவும் ஒன்று சேர்ந்தும் முயற்சிகளிலீடுபடுவதன் மூலமாக மாத்திரமே மனித இனம் அபிவிருத்தியடைய முடியும். இதற்கான அடிப்படை பாடசாலையினூடாகவே ஏற்படுத்தப்படுகின்றது. ஆகவே குடியுரிமைக்கல்வி எனும் பாடம் பாடசாலைகளில் கட்டாயமாகக் கற்க வேண்டிய பாடமாக உள்ளது.

பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தை நன்கு பயனுறுதியுள்ள கற்றல் அனுபவங்களாக மாற்றுவதற்காக எல்லா மாணவரும் பங்கேற்கக்கூடிய, பிரதேசத்திற்குப் பொருத்தமான வருடாந்த வேலைத்திட்டத்தை தயாரித்தல் பாடசாலை அதிகாரிகளின் பொறுப்பாகும். வருட ஆரம்பத்திலேயே செய்முறையாகச் செயற்படுத்தக் கூடிய செயற்றிட்டமொன்றைத் தயாரித்தல் பயனுள்ளதாகும். அவ்வாறான வேலைத்திட்டத்தில் உள்ளடக்கக்கூடிய பாட இணைச் செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- கள வேலைத்திட்டங்களையும் கல்விச் சுற்றுலாக்களையும் ஒழுங்கு செய்தல்.
- சிறிய அளவான ஆய்வுச் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல்.
- பொது அறிவு வேலைத்திட்டங்கள், பேச்சுப்போட்டிகள், விவாதங்கள் கண்காட்சிகள் போன்றவற்றை நடாத்துதல்.
- சுவர்ப்பத்திரிகைகள், பருவவெளியீடுகளை வெளியிடல்.
- பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள வேறு நிறுவனங்களுடன் ஒன்று சேர்ந்து செயற்படல்.
- தேசிய, சர்வதேச நிறுவனங்களுடன் சேர்ந்து செயற்படல்.
- வளவாளர்களின் பங்களிப்புடன் செயலமர்வை நடாத்துதல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# கற்றல் கற்பித்தல் முறையியல்

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த கடத்தும் வகிபங்கு (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட பரிமாற்ற வகிபங்கு (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படுகின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்திசார் மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

கடத்தும் வகிபங்கில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே காணப்படுவார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, பரிமாற்றல் வகிபங்கின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர்- மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கருத்துநிலை விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு

வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு நிலைமாற்றல் வகிபங்கு (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள விரிவான பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகள் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி (தொடர்புறுத்தும் படி) ‘ஈடுபடுத்தும் படி’ (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் பரிமாற்றல் வகிபங்கின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சைகைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல்/ படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், மின் அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல்/ பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள்/ கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations) கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் வரவேற்கத்தக்கதாகும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கண்டறியும் விடயங்களுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்குப் பாட விடயங்களைக் கண்டறிந்து கொள்வதற்கு (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டாகும். பாட அலகுடன் தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான இறுதிப் பெறுபேற்றைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். இதனால் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்த விடயங்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டறிந்தவற்றை விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்தவற்றையுயும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விரிவாக்கிக் கொள்வதற்கு (Eleboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப்படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை நிலைமாற்றல் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரவேசத்தின்போது பரிமாற்றல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது. புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது நிலைமாற்ற வகிபங்குக்கு மேலதிகமாக கடத்தும் வகிபங்கிலும், பரிமாற்றல் வகிபங்கிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

# கற்றல் கற்பித்தல் முறையியல் (வாழ்க்கைத் தேர்ச்சிகள்)

வாழ்க்கை தேர்ச்சிகளையும் குடியுரிமைக்கல்வியையும் கற்பிக்கம் பாடத்திட்டத்தை செயற்படுத்தும்போது ஆசிரியரின் கற்பித்தலை விட மாணவரின் கற்றலுக்கே முக்கியமாக இடமளிக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது. இப்பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கும் நபரன் அபிவிருத்தி மூலம் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதாயின் பிள்ளைகளினுள் தேர்ச்சிகளை விருத்தி செய்தல் வேண்டும். அவ்வாறான ஆற்றலை வளர்க்க கற்றல் கற்பித்தல் சூழல் ஒன்றை நிர்மாணித்தல் மிக முக்கியமாகும்.

புதிய பாடப் புலத்தினுள் கற்றல் கற்பித்தல் உத்திகள், மிக நெகிழ்ச்சியுடன் கூடியனவாக இருத்தல் வேண்டும். விரிவுரைகள், கலந்துரையாடலிலும் பார்க்க நடைமுறை சமூகத்திற்கு மிகவும் உசிதமான உயிர்ப்புள்ள வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுத் தரல் பொருத்தமானது.

விசேடமாக ஒத்தாசையுடன் கூடிய குழு முறை மூலம் கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், பிள்ளைகளினுள் சமூகத் திறன்களை வளர்க்க எதிர்ப்பார்க்கப்படுகின்றது. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின்போது வகுப்பறை பாடசாலை சமூகம், பாடசாலை சூழல், அயற் சூழல், அயல் சமூக நிறுவனங்களை உயிர்ப்புள்ள கற்றல் அனுபவங்களைப் பெறப் பயன்படுத்துவார்.

இவ்வாறான கற்றல் கற்பித்தல் சூழலினுள் அவதானிப்பு நிகழ்வுக் கற்கை, விளையாட்டு, பங்கேற்று நடித்தல், நேர்காணல், ஆய்வு, கண்டறிக்கை, சுயகற்கை செய்து பார்த்தல், சிந்தனைக் கிளர்வு கலந்துரையாடல், கண்காட்சி, செயற்றிட்டம், களக்கற்கை போன்ற கற்றல் கற்பித்தல் முறைகளை விருப்பிற்கேற்றவாறு பயன்படுத்தலாம்.

மேற்படி கற்றல் கற்பித்தல் முறையியலை நிலைமாற்றும் ஆசிரிய வகிபாகத்தின்போது இலகுவில் பயன்படுத்தலாம், இதன்படி இவ்வெல்லா கற்றல் கற்பித்தல் முறையியலையும் பயன்படுத்தும் படிகளை, கண்டாய்வுகளை விளக்குதல், விரிவாக்கம், மதிப்பீட்டுக்கு உட்படுத்ல் போன்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத்தியபடி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை கருத்துள்ளதாக்கலாம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# கற்றல் கற்பித்தல் முறையியல் (குடியுரிமைக்கல்வி)

நெடுங்காலமாக வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயன்முறையின் முக்கிய இடத்தை எடுக்கும் விரிவுரை முறையை மேலும் முக்கிய ஒரு கற்பித்தல் உத்தியாகப் பயன்படுத்த இங்கு வலியுறுத்தப்படமாட்டாது. இங்கு மாணவர் போட்டிச் சூழலுக்கு இட்டுச் செல்லப்படுவதற்குப் பதிலாக கூட்டுணர்வு, வேலையுலகுக்குத் தேவையான தேர்ச்சிகள் ஆகியவற்றை விருத்தி செய்யத்தக்க மகிழ்ச்சிகரமான ஒரு கற்றல் சூழலை ஏற்படுத்தத்தக்க சுய கற்றலைத் தூண்டும் கற்றல் முறைகளின்பால் எமது கவனம் ஈர்க்கப்படல் வேண்டும். குடியுரிமைக்கல்விப் பாடத்தின் இறுதியான நோக்கம் மானுடப் பண்புகளைக் கொண்ட அமைதியாக கூடி வாழத்தக் எதிர்கால சந்ததியை உருவாக்குவதாகும். இதற்கு செயன்முறைச் செயற்பாடுகள் இன்றியமையாதவை. எனவே பாட விடயங்களைக் கற்பிப்பதற்கு மேலாக செயன்முறை அனுபவங்களைக் கற்றல்-கற்பித்தல், மதிப்பீடு ஆகிய சுயநிர்மாண வகுப்பறை செயன்முறையை ஒழுங்கு முறையை ஒழுங்குசெய்தல் தொடர்புகளைப் பேணுவதால் மாணவரின் சமூகத்திறன்கள் விருத்தியையும் சனநாயகப் பெறுமானங்களுடன் தொடர்புடைய நடத்தைக் கோலங்கள் விருத்தியடையத்தக்கவாறு கற்றல் நிகழ்வுகளினூடாக அனுபவங்களை விருத்தி செய்வதற்காக வகுப்பறைக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துவதற்கு அச்செயற்பாடுகளை மாணவரது வயது மட்டத்திற்குப் பொருத்தமானவாறு ஒழுங்கமைத்துக் கொள்வதற்குமாக ஆசிரியர்கள் நன்கு திட்டமிட்டச் செயற்படுத்தல் வேண்டும்.

விடயங்களைக் கற்பிப்பதை விடுத்து சுயமாகக் கற்றல், தகவல் சேகரித்து அவற்றைப் பகுப்பாய்தல், குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், திறமை விருத்திக்கு ஏதுவாகும் வகையில் தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல் ஏனையோரின் கருத்துக்களைச் சகித்தல், ஒழுக்கமாகவும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளல் போன்ற பண்புகளை மாணவரிடத்தில் விருத்தி செய்வதற்கு, செயன்முறைச் செயற்பாடுகள் இன்றியமையாதவை. இதற்காக வகுப்பறையினுள்ளும் அதற்கு வெளியேயும் ஆசிரியரது வழிகாட்டல் அவசியமானது. பின்வரும் கற்றல்-கற்பித்தல் முறைகள் குடியுரிமைக் கல்விப்பாடத்தைக் கற்பிப்பதற்கு விதந்துரைக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்களை அமர்வுகளுடாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அவதானித்தல்
ஆராய்வு
நேர்காணல் மூலம் தகவல் சேகரித்தல்
தகவல்களைப் பகுத்தாய்தல்
களவேலை
சிறுவர் பாராளுமன்றம், நலன்புரிச்சங்கம், சிரமதான பாசறை, உழைப்பின் மகத்துவப் பாசறை, மானவர் படையணி, சாரணர் பாசறை
நோயாளருக்குப் பணிவிடை செய்தல், அனர்த்த முகாமை
பல்வேறு சங்கங்கள், கழகங்கள், சமூக நலனோம்பல், சூழலைக் கற்றல், பண்டைப் பெருமை மிக்க வளங்களைக் காத்தல்
செயற்றிட்டங்கள், தேடியாய்ந்து கற்றல் முறை, கண்காட்சிகள்
பிரச்சினைத் தீர்த்தல் முறை, வினாவிடை முறை, சுவர்ப்புதினத்தாள்
வகுப்பறையில் நடைமுறைப்படுத்தும் கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளோடு மேற்படி கற்றல் கற்பித்தல் உத்திகளைத் தருணத்திற்கேற்றவாறு பயன்படுத்தும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு.

# வாழ்க்கைத்தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## பகுதி I - வாழ்க்கைத்தேர்ச்சிகள்

## வாழ்க்கைத் தேர்ச்சிகள் - பகுதி 1

## 1.0 சுய விளக்கத்துடன் செயற்படுவார்.

### அறிமுகம்

ஒவ்வொரு தனியாளும் அவருக்கேயுரித்தான தனித்துவத்தைக் கொண்டவராவார் என்பதையும் அத்தனித்துவத்தின் ஊடாக வெளிக்காட்டப்படும் மதிப்பையும் தன்மதிப்பையும் காப்பார் என்பதையும் எடுத்தகாட்ட எதிர்பார்க்கப்படுகின்றது. சமூகத்தில் காணப்படுகின்ற உவப்பற்ற விளைவுகளை ஏற்படுத்துகின்ற உவப்பற்ற சக்திகளை இனங்கண்டு அவற்றில் இருந்து விலகி இருப்பதற்கும் நல்ல சக்திகளைத் துணையாக்க கொள்ளும் பல்வேறு கவர்ச்சிகரமானவற்றுள் இருந்து பொருத்தமானவற்றை மாத்திரம் தெரிவு செய்து கொண்டு சரியான வாழ்க்கைக் குறிக்கோளின் பால் வாழ்க்கையை நெறிப்படுத்துவதும் இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

### 1.1 தனித்துவத்தை உறுதிப்படுத்தி, சுய மதிப்பை விருத்தி செய்து கொள்வார்.

**விடய உள்ளடக்கம்**

- தமக்கென குறிப்பான தனித்துவம் உண்டு என்பதை திட்டப்படுத்திக் கொள்ளல் (உலகில் எந்த ஒருவரும் முற்றுமுழுதாக தமக்கு ஒப்பாகமாட்டார்)
- தாம் ஓர் ஆன்மீக விலங்கு (சுய விளக்கம் வேறு எந்தப்பிராணிக்கும் கிடையாது)
- தமது சுய மதிப்புக்காகத் தம்மிடமுள்ள பண்புகளைத் தாமே இனங்காணல் (தம்மிடத்தே காணப்படும் சிறப்பான குணப்பண்புகளை இனங்காண்பதன் முக்கியத்துவம்)
- ஏனையோர் எடுத்துக்காட்டுகின்ற எமது சுயமதிப்புக்கு காரணமாகின்ற பண்புகளை இனங்காணல்.
- ஏனையோரால் எடுத்துக்காட்டப்படுகின்ற தமது சுயமதிப்புக்குப் பங்கம் விளைவிக்கின்ற பண்புகளை இனங்காணல்.
- இனங்கண்ட விருத்தி செய்து கொள்ள வேண்டிய பண்புகளைச் செழுமைப்படுத்தல் (தம்மிடத்தே இன்னமும் பூரணமாக விருத்தியடைந்திராத நற்பண்புகளை விருத்தி செய்து கொள்ளல்)
- தனித்துவமும் தன்மதிப்பும் காக்கப்படும் வகையில் செயற்படுதல். (தமது நற்பண்புகளை நிலையாகப் பேணி வருதல்)

### 1.2 வாழ்க்கையின் வெற்றிக்கு உவப்பான சக்திகளை உரியவாறு பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்**

- சமூகத்தில் காணப்படும் உவப்பான சக்திகளை இனங்காணல் (வீடு, பாடசாலை, கோயில், பள்ளிவாசல், தேவாலயம், பன்சலை மூலம் கிடைக்கும் நல்லன குறித்துக் கவனஞ் செலுத்துதல், நல்ல நிகழ்ச்சிகளை இனங்காணல்)
- சமூகத்தில் காணப்படும் தீய சக்திகளை இனங்காணல் (சிகரற்று, போதைப்பொருள்கள், மதுபானம், ஆபாசப் புத்தகங்கள், பொருத்தமற்ற ஊடக நிகழ்ச்சிகள் போன்றவற்றை தீயவை என இனங்காணல்)
- தீய சக்திகளின் பிடியில் அகப்பட்டோரை மீட்டெடுப்பதில் பங்களிப்புச் செய்தல்.
- உகப்பான சக்திகளை வாழ்க்கைத் துணையாகக் கொள்ளல்.

## 1.3 சரியான வாழ்க்கை நோக்கதின்பால் தமது வாழ்க்கையை நெறிப்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்**

- வெற்றிகரமாக வாழ்வதற்கு குறிக்கோள்கள் இருத்தல் வேண்டும்.
- அக்குறிக்கோள்கள் நல்லவையாக இருத்தல் வேண்டும்.
- அக்குறிக்கோளின் பால் செல்லும் வழிமுறையை முன்னுரிமைப்படி நெறிப்படுத்தல்.
  - குறிக்கோள்களைக் குறித்துக்கொள்ளல் அல்லது எழுதிக்கொள்ளல்
  - மீண்டும் வாசித்தலும் திருத்தியமைத்தலும்
  - நிறைவு செய்துகொள்வதற்காக குறித்த இலக்குகளை உருவாக்கிக் கொள்ளல்
  - அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படல்
  - திடசங்கற்பத்துடன் குறிக்கோள்களை அடைவதற்காக இறுதி இலக்கை நாடிச் செயற்படல்
- தம்பால் வரும் பல்வேறு கவர்ச்சிகரமாவற்றை இனங்காணல், (இலத்திரனியல் ஊடகம், அச்சு ஊடகம், சந்தை, பல்வேறு தனியாட்கள், சமூகக் குழுக்கள்)
- கவர்ச்சிகரமாகவுள்ளவற்றில் தமது வாழ்க்கைக்குப் பொருத்தமானவற்றின் பால் மாத்திரம் கவனஞ் செலுத்துதல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 1.0** : சுய விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : தனித்துவத்தைப் பேணியபடி ஆத்ம சக்தியை அபிவிருத்தி செய்து கொள்வார்.

**செயற்பாடு 7.1.1** : "நாடு போற்றும் நபராகுங்கள்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 1.1.1.1 இலுள்ள நடத்தைகளைக் காட்டும் படங்கள்
- பேனாக்கள்
- எழுது தாள்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 1.1.1.1** :

- இணைப்பு 1.1.1.1 இலுள்ள படங்களை மாணவரிடம் காட்டுங்கள்.
- அதில் காட்டப்பட்டுள்ள நபர்களை இனங்காண அடிப்படையாக அமையும் விடயங்களை கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - அவர்களிடமுள்ள பல்வேறு திறமைகள் காரணமாக அவர்களை வி'ேடமாக இனங்காண முடிந்தது.
> - அந்த ஆற்றல்களின் அடிப்படையில் அடையாளம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
> - எல்லா நகர்களிடமும் மறைந்த ஆற்றல்களும் திறமைகளும் உள்ளன.
> - சிறு பராயம் முதலே பல்வேறு திறமைகளையும் ஆற்றல்களையும் ஏற்படுத்திக் கொள்ளவும்.
> - அவற்றை வளர்த்துக்கொள்ளவும் செயற்பட வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 1.1.1.2** :

- மாணவர்களை 4 குழுக்களாக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் எழுதுதாள் ஒன்று வீதம் வழங்கவும்.
- அதில் தனது பெயரை எழுதுமாறு கூறுங்கள்.
- பெயர் எழுதப்பட்ட தாள்களை குழுவினர் மத்தியல் பரிமாற்றிக் கொண்டு தனது நண்பனின் அல்லது நண்பியின் ஆற்றல்கள் திறமைகள் பற்றி தாம் அறிந்து வைத்துள்ளவை பற்றி எழுதிக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

(15 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 1.1.1.3 :

- எழுதி முடித்த தாள்களிலிருந்து தத்தமது தாள்களை எடுத்துக் கொள்ளுமாறு கூறுங்கள்.
- உங்கள் நண்பன் அல்லது நண்பி உங்களைப்பற்றி எழுதியுள்ளவற்றை வாசிக்கும் போது உங்கள் மனதில் ஏற்படும் எண்ணங்கள் யாவை?
- அவ்வாறு உங்கள் மனதில் ஏன் மகிழ்ச்சி ஏற்பட்டது?
- அப்பண்புகளையும் ஆற்றல்களையும் பாதுகாக்கவும் வளர்க்கவும் செய்ய வேண்டியவை யாவை? என வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- யாவரும் நல்ல பழக்கவழங்கங்களையும் பண்புகளையும் தம்முள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- அவ்வாறாயின் தாம் வரவேற்கப்படுவர்.
- அதன் மூலம் தனித்துவமும் சுயநம்பிக்கையும் கட்டியமெுப்பப்படும்.
- அப்பண்புகளையும் திறமைகளையும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(15 நிமிடங்கள்)


**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தனித்துவத்தையும் சக்தியையும் கட்டியெழுப்பக் கூடிய விதத்தை கூறுவார்.
- தம்மைப்பற்றிய தனித்துவத்தையும் சுய கௌரவத்தையும் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்வார்.
- தனது தனித்துவத்தையும் கௌரவத்தையும் தம்மிடம் பேணி வைத்திருக்க வேண்டுமென்பதை பற்றி இனங்காண்பார்.
- தனது திறமைகளையும் பண்புகளையும் வளர்த்துக்கொண்டு தனித்துவத்தையும் சுய கௌரவத்தையும் கட்டியெழுப்புவர்.
- தனித்துவமும் சுய கௌரவமும் உள்ளவராக சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயனுள்ள வேலைகளிலீடுபடுவார்.


## இணைப்பு 7.3.4.1



செனரத் பரனவிதாரன அவர்கள்



ஆதர் சி. கிளாக் அவர்கள்




திரு. முத்தையா முரளிதரன்



பண்டித டபிள்யூ.டீ. அமரதேவ அவர்கள்



திருமதி சுசந்திகா ஜயசிங்க



செல்வி மயூமி ரஹீம்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 1.0** : சுய விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : வாழ்க்கையின் வெற்றிக்கு உகப்பான சக்திகளை உரியவாறு பயன்படுத்துவார்.

**செயற்பாடு 1.2.1** : "நல்வழியா தீய வழியா?"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 1.2.1.1 இலுள்ள பத்திரிகை தலைப்பு (நீங்களே தயார்படுத்திக் கொள்ளுங்கள்)
- இணைப்பு 1.2.1.2 தீய வழி செல்லாதே மகனே என்ற பாடலின் மொழிபெயர்ப்பை சமர்ப்பிக்க.
- பேனாக்கள்
- எழுது தாள்கள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 1.2.1.1** :

- முன்பயிற்சி பெற்ற மாணவன் மூலம் இணைப்பு 1.2.1.1 இலுள்ள பத்திரிகைத் தலைப்பை வாசிக்கச் செய்யுங்கள்
- அவ்வாறான பிரசாரம் மூலம் ஏற்படும் அனுகூலமானதும் அனுகூலமற்றதுமான விளைவுகளை கேட்டறிந்து பாடப் பிரவேசத்திலீடுபடுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - சமூகத்தில் அனுகூலமான அனுகூலமற்ற சக்திகள் செயற்படுகின்றன.
> - அனுகூலமான சக்திகள் நபர்களை நல்வழிப்படுத்துகின்றன. அனுகூலமற்ற சக்திகள் நபர்களைத் தீய வழியில் செலுத்துகின்றன.

(10 நிமிடங்கள்)

**படி 1.2.1.2** :

- மாணவர்களை 5 குழுக்களாக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் எழுதுதாள், பேனா போன்றவற்றை வழங்கவும்.
- பாடலிலுள்ள அனுகூலமான அனுகூலமற்ற சக்திகளை தனித்தனியாக இனங்காண வாய்ப்பு வழங்குங்கள்.
- அனுகூலமான சக்திகளை அண்மிக்கவும் அனுகூலமற்ற சக்திகளிலிருந்து விலகவும் செய்ய வேண்டியன பற்றி கருத்துக் கூறுங்கள்.

(15 நிமிடங்கள்)

படி 1.2.1.3 :

- தமது கண்டாய்வுகளை வகுப்பில் சமர்ப்பிக்க குழுக்களுக்கு வாய்ப்பு வழங்குங்கள்.
- தமது குழுவுக்குக் கிடைத்த இரண்டு கவிதைகளையும் திறமையான மாணவன் ஒருவன் மூலம் பாடச் செய்யுங்கள்.
- அப்பாடல்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற அனுகூலமான அனுகூலமற்ற சக்திகள் பற்றி ஏனைய குழுக்களின் கருத்தினைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • சிக்கலான சமூகத்தினுள் அனுகூலமானதும் அனுகூலமற்றதுமான சக்திகள் பலவற்றை காணப்படுகின்றன.<br>• இங்கு பல்வேறு ஊடகங்களின் செல்வாக்கும் செயற்படுகின்றன.<br>• விமர்சன ரீதியான சிந்தனை மூலம் அனுகூலமான அனுகூலமற்ற சக்திகளை இனங்கண்டு செயற்படல் முக்கியமாகும். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- அயற் சமூகத்திலுள்ள அனுகூலமான அல்லது அனுகூலமற்ற சக்திகளைப் பெயரிடுவார்.
- அனுகூலமான சக்திகளை வாழ்க்கையுடன் தொர்புபடுத்திக் கொள்வதன் மூலம் வாழ்க்கை ஒளிமயமாகும் என ஏற்றுக் கொள்வார்.
- அனுகூலமான அனுகூலமற்ற சக்திகளை வேறுபடுத்திக் காட்டுவார்.
- அனுகூலமற்ற சக்திகளிடமிருந்து விலகி நடப்பார்.
- அனுகூலமான சக்திகளை வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்வார்.

**பின்தொடர்வேலை**

- அனுகூலமான சக்திகளினால் வாழ்க்கையை ஒளிமயமாக்கிக் கொண்ட நபர்பற்றிய கதைகள், வாய் வழிக்கதைகள் அல்லது உங்கள் அனுபவத்தின் துணையுடன் சிறுகதையொன்றை எழுதுங்கள்.

**தேர்ச்சி 1.0** : சுய விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : சரியான வாழ்க்கை நோக்கத்தின் பால் தமது வாழ்க்கையை நெறிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.2.2** : "முட்செடியில் பூத்த மலராகுங்கள்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :
- 
- 

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 1.2.2.1** :
- இணைப்பு 1.2.2.1 இல் அடங்கும் பாடலை செவிமடுக்க அல்லது பாடச் செய்யுங்கள்.
- அதன் மூலம் வெளிக்கொணரப்படும் கருத்தைப் பற்றிய மாணவரின் துலங்கலைக் கேட்பதன் மூலம் பாடத்தினுள் பிரவேசியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - சமூகத்தில் அனுகூலமான சக்திகளும் அனுகூலமற்ற சக்திகளும் செயற்படுகின்றன.
> - அனுகூலமற்ற சக்திகளுக்கு ஆளாவதால் தீய விளைவுகள் ஏற்படுகின்றன.
> - அனுகூலமான சக்திகளுடன் சேருவதனால், நல்ல பெறுபேறுகள் கிடைக்கின்றன.

(10 நிமிடங்கள்)

**படி 1.2.2.2** :
- மாணவர்களை 4 குழுக்களாக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் எழுதுதாள், பேனா போன்றவற்றை வழங்கவும்.
- இணைப்பு 1.2.2.2 இன் வேலைப்படிவங்களை குழுக்களுக்கு விநியோகித்து அவற்றை செயற்பாட்டிலீடுபடுத்துங்கள்

(15 நிமிடங்கள்)

**படி 1.2.2.3** :
- குழுக்களின் அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்கச் செய்யுங்கள்.
- ஏனைய குழுக்களின் அபிவிருத்திசார் ஆலோசனைகளை கேட்டறியுங்கள். குறைநிரப்பு செய்யுங்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - சமூகத்தில் நிலவும் அனுகூலமான அனுகூலமற்ற சக்திகளிற்கு உட்படுவதால் பெறும் பெறுபேறுகள் நல்லவையாகவோ தீயவையாகவோ அமையக் கூடும்.
> - அனுகூலமற்ற சக்திகளுக்கு உட்படுவதால் தம்முள் பின்னடைவு ஏற்படும்.
> - அனுகூலமான சக்திகளுக்கு உட்படுவதால் வாழ்க்கை முன்னேற்றமடையும்.
> - அனுகூலமான அல்லது அனுகூலமற்ற சக்திகளை இனங்கண்டு அனுகூலமான சக்திகளை தமது வாழ்வுடன் இணைத்துக் கொள்ளவும் அனுகூலமற்ற சக்திகளை வாழ்விலிருந்து விலக்கிவைக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
> - சமூகத்தின் சிக்கல் தன்மையினால் அனுகூலமற்ற சக்திகளின் செயற்பாடு அதிகரித்துள்ளமையால், விமர்சன ரீதியாகவும், ஆக்கபூர்வமாகவும் செயற்படல் முக்கியமாகும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- அனுகூலமான சக்திகளையும் அனுகூலமற்ற சக்திகளையும் எழுதிக்காட்டுவார்.
- அனுகூலமான சக்திகளுடன் இணைவதன் மூலம் கிடைக்கும் நற்பலன்களை மதிப்பார்.
- அனுகூலமற்ற சக்திகளுடன் இணைந்து கொள்வதன் மூலம் கிடைக்கும் தீய விளைவுகள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுங்கள்.
- அனுகூலமான சக்திகளின் மூலம் வாழ்க்கையைச் சீர்ப்படுத்திக் கொள்ள ஊக்கம் பெறுவார்.
- அனுகூலமற்ற சகத்திகளுக்கு உட்பட்டவர்களை அதிலிருந்து மீட்கச் செயற்படுவார்.

**பின்தொடர்வேலை**

- தீய சக்திகளுக்கு உட்பட்டமையால் அழிந்து போன ஒருவரை அதிலிருந்து மீட்பதைக் காட்டும் நாடகமொன்றை வகுப்பில் நடித்துக்காட்டுங்கள்.

## இணைப்பு 1.2.2.1

தம்பியே தீயோரை நண்பனாக ஏற்காதே
தங்கையே தகாதவற்றை செய்யப்பழகாதே
போகம்பறை சிறைக்கு வர நினையாதே
எனது துயிரே நீ எதிரியிடமும் போகாதே

தளதா மாளிகை மணியோசை கேட்குதே
பாவங்களை நினைத்து கண்கள் குளமாகுதே
ஆயிரமாயிரம் முறை பிறந்து இறக்கின்றேனே
தாகத்திற்கும் நான் அருந்துவது கண்ணீரே.

தீயோரின் வார்த்தை தேவ வாக்கானதே
தீயோரின் நட்பு சனி வடிவெடுத்ததே
நான் சென்ற பாதை தவறானதே
அப்பாதையின் முடிவு தூக்குமேடையானதே

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 1.2.2.2

பின்வரும் செய்தியில் வரும் நபர்கள் முன்னொரு காலத்தில் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் கற்ற திறமையான மாணவர்களாவார்கள். அவர்களது தற்கால நிலை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| சுதாகர் | மனோகர் |
|---|---|
| • கல்வியை வெற்றிகரமாக முடித்துள்ளான்<br>• நிரந்தர வருமானம் உள்ளது<br>• நல்ல தேகாரோக்கியம் உடையவர்<br>• சமூக சேவைகளில் முன்னிற்கின்றான்<br>• சமூகத்தின் மதிப்பைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்கின்றான்<br>• குடும்ப வாழ்க்கை வெற்றிகரமாயமைந்து உள்ளது | • இடைநடுவில் கல்வி நிறுத்தப்பட்டுள்ளது.<br>• நிலையான வருமானமில்லை.<br>• உடல் நிலை சீரற்றது<br>• சமூக நல வேலைகளில் பங்குபற்றத் தயக்கமுடையவன்.<br>• சண்டை சச்சரவுகள் மத்தியல் விரக்தியுடன் வாழ்கின்றான்<br>• குடும்ப வாழ்க்கை தோல்வியடைந்துள்ளது. |

**தேர்ச்சி 1.0** : சுய விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :

**செயற்பாடு 1.3.1** : "தெரிந்து செல்வார், சரியான வழியில் செல்வார்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 1.3.1.1 இல் அடங்கும் கூற்று.
- இணைப்பு 1.3.1.2 இல் அடங்கும் குறிப்பின் பிரதிகள் (மாணவரின் எண்ணிக்கைக்குத் தேவையானவாறு)

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 1.3.1.1** :

- இணைப்பு 1.3.1.1 இல் அடங்கும் வாக்கியத்தை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- அதிலடங்கியுள்ள கருத்துமற்ற மாணவரிடம் கேட்டவாறு பாடப்பிரவேசத்திலீடுபடுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - பயணத்தின்போது செல்லும் இடம் பற்றிய நோக்கத்துடன் பயணத்தை ஆரம்பித்தல் முக்கியமாகும்.
> - அதன்படி வாழ்க்கைப் பயணத்தையும் நோக்கத்துடன் ஆரம்பித்தல் வேண்டும்.
> - நோக்கத்துடன் ஆரம்பிக்கும் பயணம் வெற்றியடையும்.

(10 நிமிடங்கள்)

**படி 1.2.2.2** :

- இணைப்பு 1.3.1.2 ஐ குழுக்களின் மத்தியில் வினியோகியுங்கள். எழுதுதாள், பேனா போன்றவற்றை பெற்றுக்கொடுங்கள்.
- மாணவரை அவர்களுக்கான செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.

(10 நிமிடங்கள்)

**படி 1.2.2.3** :

- மாணவர்களின் கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்கச் செய்யுங்கள்.
- விருத்திகரமான அபிவிருத்திசார் கருத்துக்களை முன்வைப்பதன் மூலம் குறைநிரப்பு செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- வாழ்க்கை வெற்றிகரமானதாக அமைய நோக்கமொன்று இருத்தல் அவசியமாகும்.
- நோக்கமுடைய வாழ்க்கை கருத்துள்ளது. அதனூடாக எதிர்பார்க்கும் இலக்கை அடையலாம்.
- நோக்கத்தையடையும் பெரும் அர்ப்பணிப்பும், திடசித்தமும் அவசியமாகும்.
- நோக்கத்தை அடைய குறித்த சில நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.
- முக்கியத்துவத்தினடிப்படையில் அவற்றை இனங்கண்டு அதற்கேற்ப செயற்பட வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- ஒவ்வொருவரினதும் வாழ்க்கை நோக்கங்கள் வித்தியாசமானவை என்பதை இனங்காண்பார்.
- வாழ்க்கை நோக்கம் இருப்பதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.
- தனது வாழ்வின் நோக்கத்தைக் கட்டியெழுப்புவார்.
- வாழ்க்கையின் நோக்கத்தை அடைவதற்கான நடடிவக்கைகளைப் பின்பற்றுவார்.
- தான் பழகும் நண்பர்களுக்கு சரியான வாழ்க்கை நோக்கத்தைக் கட்டியெழுப்ப உதவுவார்.

**பின்தொடர்வேலை**


- தமது வாழ்வின் நோக்கத்தைக் குறித்துக் கொண்டு அவற்றை அண்மிப்பதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை எழுதிக்காட்டுவார். நாள்தோறும் அவற்றைப் பின்பற்றியபடி தொடர்ச்சியாக முன்னேற்றத்தை குறித்துக் கொள்வார்.

## இணைப்பு 1.3.1.1

தெரிந்து சென்றால் கதிர்காமம் செல்வோம்
தெரியாமற் சென்றால் வழிதவறுவோம்

# இணைப்பு 1.3.1.2

உங்கள் எதிர்கால வாழ்க்கை நோக்கங்கள் பற்றி சிந்தித்துப் பார்ப்பதற்கு தரப்பட்ட ஒரு சந்தர்ப்பம் கீழே கட்டப்பட்டுள்ளது. நன்கு சிந்தித்து உங்கள் எதிர்கால நோக்கங்களை வட்டத்தினுள் எழுதுங்கள்.




உங்கள் வாழ்க்கை நோக்கத்தின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப (1,2,3,4 என இலக்கமிடுங்கள்) வட்டத்திலுள்ள வெட்டுக்கோட்டின் மீது நோக்கத்தை அடைய நீங்கள் செய்ய வேண்டியன பற்றி எழுதிக்காட்டுங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 1.0** : சுய விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :

**செயற்பாடு 1.3.2** : "தாங்கிக் கூடிய வாழ்க்கை முறை"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 1.3.2.1 இலக்க பாடல்
- இணைப்பு 1.3.2.2 இல் கண்டாய்வு அறிவுறுத்தற்படிவம்
- டிமை தாள், மார்க்கர்பேனா
- எழுதுதாள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 1.3.1.1** :

- இணைப்பு 1.3.2.1 இல் அடங்கும் பாடலை பொருத்தமான மாணவன் மூலம் பாடச் செய்யுங்கள்.
- தின்பண்டம், அழகிய விளையாட்டுப்பொம்மை ஆகியவற்றைக் காணும் பிள்ளை தூரப் பார்த்தப்படி செல்வது ஏன்? என்று மாணவரிடம் வினவுங்கள்.
- பாடலின் கருத்தை நயப்பதில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - கவர்ச்சிகரமான பலவற்றை இனங்காண்பதன் மூலம் அழகியல் இரசனை வளர்ச்சியடையும்.
> - நயக்கும் ஆற்றலை வளர்ப்பதன் மூலம் மன அழுத்தங்களை கட்டுப்படுத்தும் முறையொன்றைப் பயில முடியும்.
> - எமது பொருளாதார திறன், பயனுள்ளதன்மை போன்ற காரணிகளின் அடிப்படையில், விலை கொடுத்து வாங்குதல் அல்லது பெற்றுக்கொள்ளல் போன்றவை பற்றி தீர்மானிக்க வேண்டும்.
> - ஆசைகளுக்கு அல்லது போக்குகளுக்கு அல்லது அழுத்தங்களுக்கு அடிமையாகி முடிவெடுக்கக் கூடாது.

(10 நிமிடங்கள்)

**படி 1.3.1.2** :

- எல்லா மாணவர்களுக்கும் இணைப்பு 1.3.2.2, எழுதுதாள் போன்றவற்றை வழங்குங்கள்.
- குழுக்களுக்கு டிமை கடதாசி, மாக்கர் பேனா போன்றவற்றை வழங்குங்கள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- கண்டாய்வின் ஆரம்பப்பகுதி சுய விளக்கமாகும். அதனைத் தனித்தனியாகச் செய்ய வேண்டும் என விளக்கமளியுங்கள். அதற்காக மாணவரை ஈடுபடுத்துங்கள் இணைப்பு 1.3.2.2 ஐப் பயன்படுத்துங்கள்.
- கண்டாய்வின் இரண்டாம் கட்டம், குழுச் செயற்பாடாகும். மாணவரை குழுவாக்கி செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- கண்டாய்வை இரண்டு வகையாக சமர்ப்பிக்கலாம்.
  - நூல் இழுத்தல் அல்லது சுவரில் ஒட்டுவதன் மூலம் (தனியாள் செயற்பாடு)
  - குழுவாக சமர்ப்பிப்பதற்காக மாணவரைத் தயார்ப்படுத்துங்கள்.

(10 நிமிடங்கள்)

**படி 1.3.1.3** :

- தனித்தனியாக எழுதிய தாள்களை (நூலில் தொங்கவிடல் அல்லது சுவரில் ஒட்டுதல்) காட்சிப்படுத்தச் செய்யுங்கள்.
- குழுவாக சமர்ப்பிக்கத் தயார்ப்படுத்துங்கள்.
- குறுகிய காலத்தில் பெற எதிர்பார்த்தவை அல்லது எதிர்பார்க்காதவை அதற்கான காரணம் ஆகியவற்றை சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.
- முதலில் குறை நிரப்பு செய்ய குழுவின் அங்கத்தவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் விருத்திசார் ஆலோசனைகளை கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - தொழில் முன்னேற்றத்துடன் பொருட்களின் உற்பத்தி அதிகரித்துள்ளது.
> - நம்மை கவரத்தக்க பல்வேறு பொருட்களினால் சந்தை நிரம்பி வழிகின்றது.
> - எம்மை கவரும் எல்லாப்பொருட்களையும் விலைக்கு வாங்க எமது வருமானம் போதாது. உள்ள வருமானத்தில் அனைத்தையும் வாங்குவது சிரமமானது.
> - ஆகவே எம்மை கவரும் பொருட்களுள் நாம் விலை கொடுத்து வாங்க வேண்டியன யாவை? என்பது பற்றி எமது வருமானம், பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும்.
> - தேர்ந்தெடுக்கும் போது எமது உணவர்வுக்குப் பதிலாக புத்திக்கும் அல்லது அறிவுக்கும் இடம்கொடுக்க வேண்டும்.
> - முதலில் இது சிரமமானதாக அமையுமாயினும் படிப்படியாக தேவையானவற்றை மாத்திரம் தேர்ந்தெடுத்தல் இலகுவாகும்.
> - எம்மைக்கவரும் பொருட்களுள் பயனுள்ளவற்றை இனங்காணப் பயிலல் முக்கியமாகும்.

(10 நிமிடம்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தம்மைக் கவருவனவற்றைப் பெயரிடுவார்.
- தாம் விரும்பும் யாவும் பொருத்தமற்றவையான அமையக் கூடும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- தாம் விரும்பியவற்றில் பொருத்தமானவற்றை மாத்திரம் தெரிவு செய்யும் முனைப்பைக் காட்டுவார்கள்.
- பயனுடைய அல்லது பயனற்ற, பெறுமதிமிக்க, பெறுமதியற்றவற்றை வேறுபடுத்திக்காட்டுவார்.
- தமது அன்பர்களையும் சகபாடிகளையும் பயன்மிக்க பெறுமதியினைத் தெரிவு செய்யத் தூண்டுவார்.

## இணைப்பு 1.3.2.2

# கண்டாய்வு அறிவுறுத்தல்கள்

***தாங்கக் கூடிய வாழ்க்கை முறை***

## முதலாவது செயற்பாடு தனியாள் செயற்பாடாகும்.

- தமது விருப்பத்தின்படி தரப்பட்டுள்ள ஒரு தாளை நான்காக மடித்து, தாளின் இரண்டு பக்கத்திலும் ஒரு கட்டத்தினுள் பின்வரும் தகவலை குறித்துக் கொள்ளுங்கள்.
- தமக்கு விருப்பமான உணவு
- தனக்கு விருப்பமான பானம்
- தனக்கு விருப்பமான ஆடை ஆபரணம்
- தான் விரும்பமான விளையாட்டுப் பொம்மை
- தான் விருப்பமான புத்தங்கள்
- தனக்கு விருப்பமான புத்தகங்கள்
- தனக்கு விருப்பமான பத்திரிகை
- தனக்கு விருப்பமான வானொலி நிகழ்ச்சி
- தனக்கு விருப்பமான தொலைக்காட்சி நிகழ்ச்சி

பின்வருவனவற்றைப் பெற உங்களுக்கு குறுகிய காலம் எடுத்திருப்பின், (ஒரு நாள், ஒரு கிழமை, ஒரு மாதம்) அவற்றை " √ " அடையாளமிட்டுக் காட்டுங்கள்.
குறுகிய காலத்தில் பெறக் கூடியதாயின் அவற்றைப் பெறும் விதத்தைச் சிந்தித்துப் பாருங்கள்.

குறுகிய காலத்தில் பெற முடியாதெனக் கருதியவை தொடர்பாக ஏன் அவ்வாறு கருதினீர்கள் எனச் சிந்தித்துப் பாருங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இரண்டாவது செயற்பாடு

- கண்டாய்வின் இரண்டாம் கட்டத்தில் உங்களது குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
- மேற்படி நான்கு குழுக்களையும் பின்வருமாறு அமைத்துக் கொள்ளுங்கள்
- குழு - தமக்கு விரும்பியவை
- உணவும் புத்தகங்களும்
- பானமும் பத்திரிகைகளும்
- ஆடையணிகளும் வானொலி நிகழ்ச்சிகளும்
- விளையாட்டுப் பொம்மைகளும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும்

- உங்கள் கருத்துக்களை குழுவின் தலைப்பிற்கேற்ப பொருத்தமான ஒரு சமர்ப்பித்தலுக்காக தொகுத்தளியுங்கள்.

ஆளுமையை விருத்தி செய்துகொள்வதற்காக ஓய்வு நேரத்தை உபயோகிப்பார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# 2.0 ஆளுமை விருத்திக்காக ஓய்வைப் பயன்படுத்துவார்.

## அறிமுகம்

எந்த வயதைச்சேர்ந்த நபராயினும் அவர் ஒரு தொழிலில் ஈடுபடுபவராயிருப்பார். தமது வாழ்க்கையை நடாத்த தேவையான வருமானத்தைப் பெற இவ்வாறு தொழிலிலீடுபட நேரிடுகின்றது. தொடர்ச்சியாக தொழிலிலீடுபடுவதால் உடல் உள ரீதியாக நபரினுள் ஏற்படுகின்ற களைப்பைப் போக்கிக்கொள்ளவும், புதிய உத்வேகத்துடன் வேலையைத் தொடரவும், ஓய்வு அவசியமாகின்றது. ஓய்வு நேரத்தைப் பயனுள்ளவாறு கழிப்பது பற்றி அறிந்திருப்பதனாலும், அதனால் பெறும் பயன்பற்றி தெரிந்து வைத்திப்பதனாலும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளவாறு கழிக்க முடியும்.

அன்றாட வேலைகளைத்திட்டமிடும் போது ஓய்வு பற்றி அக்கறை செலுத்துதல் அவசியமாகின்றது. ஓய்வு நேரத்தை விளையாட்டு மற்றம் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளிலோ அழகியல் ரீதியிலான செயற்பாடுகளிலோ ஈடுபட முடியும். பயனுள்ள ஓய்வின் மூலம் ஆளுமை வளர்சசிக்காக ஓய்வு நேரத்தை உபயோகிக்க கூடிய விதம் பற்றி நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

**தேர்ச்சி மட்டம்** :-

2.1 விளையாட்டு அல்லது ஓய்வு நேரப்பொழுதுபோக்குகளிலீடுபடுவார்.

- வேலையொன்றின் பல்வேறு பண்புகள்
  - செய்யும் வேலை பற்றிய தெளிவான விள்க்கமிருத்தல்
  - அதற்காகச் சீரான திட்டமொன்றை அமைத்துக் கொள்ளல்
  - திட்டத்தை அமுலாக்குவது எவ்வாறு, அதற்குள்ள வசதிகளும் தேவைகளும் யாவை போன்றவற்றை இனங்காணல்.
- செய்யும் வேலை மூலம் அடையும் பயன் பற்றிய விளக்கம்
  - தனக்கும் ஏனையோருக்கும் கிடைக்கும் பயன்கள்.
- ஓய்வு நேரத்தில் ஈடுபடும் விளையாட்டு மற்றும் பொழுது போக்குகள் அவை புதிய அனுபவங்களாயின் அவற்றில் கட்டுப்பாட்டுடன் ஈடுபடல்.
  - அவ்வேலைகளினால் தனக்குத் திருப்தி ஏற்படலும் ஏனையோருக்கு சிரமங்கள் ஏற்படாமல் இருத்தலும்.
- ஓய்வு கிடைக்கும் எந்த நேரத்தையும் பயனுள்ளவாறு கழித்தல் முக்கியமாகும்.

**தேர்ச்சி மட்டம்** :-

2.2 அழகியல் செயற்பாடுகள்மூலம் சமநிலையான ஆளுமையை வளர்த்துக் கொள்வார்.

- பொழுதுபோக்கும் நயத்தலும்
  - தனக்கும் ஏனையோருக்கும் தீங்காயமையாத பொழுது போக்குகளைத் தேர்ந்தெடுத்தல்.
  - உடல் மற்றும் உள ஆரோக்கியத்திற்கு தீங்காயமையாத விதத்தில் நயத்தல்
- உள எழுச்சி வெளிப்பாடுகள்
  - தனது உள எழுச்சிகளை ஆக்கபூர்வமாக வெளியிடு வதற்காக அழகியல் செயற்பாடுகளிலீடுபடலும் அதனூடாகப் பெறும் வாழ்க்கை பற்றிய விளக்கமும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 2.0** : ஆளுமை வளர்ச்சிக்காக ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள் போன்றவற்றில் ஈடுபடுவார்.

**செயற்பாடு** : "நிம்மதியான கரு களம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 2.1.1 - பலூன் சித்திரம்
- இணைப்பு 2.1.2 - பொதிகள்
- இணைப்பு 2.1.3 - விளையாட்டுக்கான வழிகாட்டல்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 2.1.1** :

- இணைப்பு 2.1.1 ஐ மாணவர் மத்தியில் விநியோகியுங்கள்.
- மாணவரைச் செயற்பாட்டிலீடுபடுத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - ஓய்வு நேரத்தைப் பயனுள்ளவாறு கழிப்பதற்காக ஈடுபடக்கூடிய விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்குகள் பல உண்டு.
> - அவ்வாறானவற்றைத் தேர்ந்தெடுத்து நாமும் அவற்றிலீடுபட வேண்டும்.
> - பயனுள்ள ஓய்வு மற்றும் பொழுது போக்குகளில் ஈடுபடுவதனால் உடல் அல்லது உள ஆரோக்கிய நிலை மேம்படும்.
> - விளையாட்டின் மூலம், மகிழ்ச்சி, அறிவு, தலைமைத்துவம், ஆளுமைப் பண்புகள் போன்றவை வளர்ச்சியடையும்.

(10 நிமிடங்கள்)

**படி 2.1.2** :

- வகுப்பு மாணவரை விளையாட்டுத் திடல் போன்ற இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- இணைப்பு 2.1.2 இல் குறிப்பிட்டுள்ள வியைாட்டில் மாணவரை ஈடுபடுத்துங்கள்

(10 நிமிடங்கள்)

**படி 2.1.3** :

- இணைப்பு 2.1.3 ஐ மாணவருக்குப் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவரைச் செயற்பாடுகளிலீடுபடுத்துங்கள்.
- மாணவர் முன்வைக்கும் விடயங்களுக்குகேற்ப கலந்துரையாடலை வழிப்படுத்துங்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - அன்றாட வாழ்வில் கிடைக்கும் ஓய்வைப் பயனுள்ளவாறு உபயோகித்தல் வேண்டும்.
> - ஓய்வைக் கழிப்பதற்காக விளையாட்டுக்களை உபயோகிக்கலாம்.
> - விளையாட்டுகள் காரணமாக உடல், உள ரீதியான வளர்ச்சி ஏற்படுகின்றது.
> - விளையாட்டின் மூலம் வெற்றி, தோல்வியை சகித்து ஏற்றுக் கொள்ளல், முடிவெடுக்கும் ஆற்றல், ஆக்க பூர்வமான தன்மை ஆகியன ஏற்படும்.
> - கிடைக்கும் ஓய்வைப் பயனுள்ளவாறு கழிப்பதனால் அறிவு, மகிழ்ச்சி, பொழுதுபோக்கு ஆகியன கிடைக்கும்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- விளையாட்டிலீடுபடுவதனால் கிடைக்கும் பயன்களைப் பெயரிடுவார்.
- ஓய்வைக் கழிக்கும் மிகச் சிறந்த முறை விளையாட்டுக்களில் ஈடுபடுதல் எனக் கூறுவார்.
- விளையாட்டுக்களிலீடுபடுவார்.
- வெற்றியை அல்லது தோல்வியை சகித்துக் கொள்வார்.
- அன்றாட வேலைகளில் ஒத்துழைப்புடன் ஈடுபடுவார்.
- பாடசாலை, மாவட்ட, மாகாண விளையாட்டுக்குழுக்களில் பங்கேற்பார்.

## இணைப்பு 2.1.1

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள படத்தில் காணப்படுகின்ற பலூன்களில் ஓய்வு நேரத்தை கழிப்பதற்காக நீங்கள் ஈடுபடக்கூடிய விளையாட்டுக்களை எழுதுங்கள்



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 2.1.2

- கீழே தரப்பட்டுள்ள இரண்டு படங்களிலும் ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காக நீங்கள் பயன்படுத்தும் விளையாட்டுக்களை, உள்ளக விளையாட்டுக்கள் வெளிக்கள விளையாட்டுக்கள் எனப் பாகுபடுத்திக் குறிப்பிடுங்கள்.

**விளையாட்டுக்கள்**

**உள்ளக விளையாட்டுக்கள்** | **வெளிக்கள விளையாட்டுக்கள்**





## இணைப்பு 2.1.3

- மாணவரை விளையாட்டுத்திடலுக்கு அல்லது சுயாதீனமான ஓரிடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவரை வட்டமான குழுக்களாக்குங்கள்.
- பின்வரும் விளையாட்டில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- விளையாட்டின் சட்டதிட்டங்களை மாணவருக்கு விளக்குங்கள்.

**சட்டதிட்டங்கள்.**

1. ஒன்று, இரண்டு, மூன்று என கணிப்பிட அறிவுறுத்துக.
2. ஏழு ஒன்று கூறாது அதற்குப் பதிலாக 'ஜபொஸ்' என்று கூறவும்.
3. ஏழு, ஏழின் மடங்கு, ஏழுடன் கூடிய இலக்கங்களுக்குப் பதிலாக 'ஜபொஸ்' என்று கூறவும்.
   உதா: 7, 14, 21 அல்லது 17, 27 என்ற இலக்கத்திற்காக
4. இவ்வாறு கூறும் மாணவர்களை விளையாட்டிலிருந்து அகற்றிவிட்டு மீண்டும் 1, 2 என்று எண்ண ஆரம்பியுங்கள்.
5. இவ்வாறு இறுதி வரை விளையாட்டிலீடுபடுங்கள்.

விளையாட்டினிறுதியில் பின்வரும் வினாக்களை மாணவரிடம் வினவுங்கள்.

வினா 1. நீங்கள் என்ன செய்தீர்கள்?
2. எந்த வேலைகளுக்காக விளையாட்டை உபயோகிக்க முடியும்.
ஓய்வைப் பயனுள்ளதாக்க, பொழுதுபோக்குக்காக மாணவர்களிடம் கிடைக்கும் விடைகளுள் ஓய்வை பயனுள்ளதாக்க என்றும் விடையை வலியுறுத்துங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 2.0** : ஆளுமை வளர்ச்சிக்காக ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : அழகியல் செயற்பாடுகளினூடாக ஆளுமைச் சமனிலையை உருவாக்கிக் கொள்வார்.

**செயற்பாடு** : "ஓய்வை வளப்படுத்தும் கருத்துள்ள பொழுதுபோக்கு"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 2.1.2.1 - பாடநூலின் துணையுடன் சொற்களைத் தேடல்
- இணைப்பு 2.1.2.2 - பிள்ளையும் கண்ணாடியும் (நடிப்பு)
- இணைப்பு 2.1.2.3 - பெண்/ ஆண்/ பூக்கள்/ பழங்கள்/ விலங்குகள்/ நகரம் எழுதுதல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 2.1.2.1** :

- ஓய்வு எனும் சொல்லைக் கரும்பலைகையில் எழுதுங்கள்.
- அது தொடர்பான மாணவரின் துலங்கலை விசாரிப்பதன் மூலம் அவர்களுள் சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்துங்கள்.
- வெளிக்கொணரப்படும் எல்லா கருத்துக்களையும் கரும்பலகையில் எழுதுங்கள்.
- அக்கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- உடல், உள நயப்பிற்காக ஆற்றப்படும் பல்வேறு பயனுள்ள செயற்பாடுகள் பொழுது போக்குகள் என அழைக்கப்படுகின்றது.
- ஒவ்வொருவரினதும் பொழுதுபோக்குகள் வித்தியாசமானவையாகும்.
- கட்டாயமாக ஒருவரின் பொழுது போக்கு அவருக்கோ ஏனையோருக்கோ பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையக் கூடாது.
- ஒத்த பொழுதுபோக்கு உள்ளவர்கள் ஒன்றாகச் செயற்பட முடியும்.
- தமது பொழுதுபோக்கிலிருந்து வேறுபட்ட பொழுது போக்குடையவரிடமிருந்து தமக்கு தெரியாதவற்றைக் கற்றுக் கொள்ள முடியும்.

(08 நிமிடங்கள்)

படி 2.1.2.2 :

- எல்லா மாணவரையும் பொருத்தமானவாறு சில குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 2.1.2.1 இலுள்ள வேலைப்படிவத்தை குழுவிற்கு ஒன்று வீதம் பகிர்ந்தளித்து அச்செயற்பாட்டிற்கு 5 நிமிடங்கள் ஒதுக்கிக் கொடுங்கள்.
- இணைப்பு 2.1.2.2 வேலைப்படிவத்தை குழுவிற்கு ஒன்று வீதம் பகிர்ந்தளித்து அச்செயற்பாட்டிற்கு 5 நிமிடங்கள் ஒதுக்கிக் கொடுங்கள்.
- இணைப்பு 2.1.2.3 இன்வேலைப்படிவத்தை குழுவிற்கு ஒன்று வீதம் பகிர்ந்தளித்து அச்செயற்பாட்டிற்கும் 5 நிமிடங்கள் ஒதுக்கிக் கொடுங்கள்.
- மேற்படி மூன்று செயற்பாட்டின் மூலமும் தாம் பெற்ற உணர்வுகளையும் அந்தந்த செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் பயன்களையும், பற்றி குழுவாகி ஒன்று சேர்ந்து கலந்துரையாடுவதற்காக 5 நிமிடங்கள் ஒதுக்குங்கள்.

(20 நிமிடங்கள்)

படி 2.1.2.3 :

- குழுக்கள் தேடியாராய்ந்தவற்றை வகுப்பில் சமர்ப்பிக்க வாய்ப்பளிக்குக.
- மாணவர்கள் முன்னர் கூறியுள்ள பொழுதுபோக்குகளின் பயன்களைப் பற்றி கூறவும் மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.
- மாணவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • பொழுது போக்குகளிலீடுபடுவதன் மூலம் வாழ்க்கையின் ஒரே மாதிரியான தன்மையிலிருந்து விடுபடலாம். |
| • பொழுதுபோக்குகளிலீடுபடுவதன் மூலம் அறிவு, திறன், நட்பு, ஒத்துழைப்பு போன்றவற்றை விருத்தி செய்து கொள்ளலாம். |
| • பாடசாலையின் கற்றல் வளங்களின் துணையுடனும் பொழுதுபோக்குகளை உருவாக்கலாம். |
| • பயனற்ற பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதால் நேரம், உழைப்பு, வளம் போன்றவை விரயமாகும். |
| • பயனுள்ள பொழுதுபோக்குகள் நீண்ட கால அடிப்படையில் வாழ்வின் வெற்றிக்கு உறுதுணையாகும். |

(12 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- பொழுதுபோக்கு என்பதன் வரைவிலக்கணம் கூறுவர்.
- பயனுள்ள பொழுதுபோக்குகளிலீடுபடுவதால், வாழ்க்கைக்கு பயன்மிக்கதாக அமையும் என்பதை காரணங் கூறி அனுமதிப்பார்.
- ஒத்துழைப்புடன் பொழுதுபோக்குகளிலீடுபடுவர்.
- பயனுள்ள பொழுதுபோக்குகளிலீடுபடுவர்.
- நண்பர்களுடன்சேர்ந்து நல்ல பொழுதுபோக்குகளில் ஈடுபட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வர்.

(5 நிமிடம்)

## இணைப்பு 2.1.2.1

**வேலைப்படிவம் 1**

- உங்கள் குழுவிலுள்ளவர்கள் இருவர் இருவராக வேறாக்குங்கள்.
- உங்கள் வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடநூலை எடுத்து விரும்பிய பல பக்கத்தை புரட்டிக் கொள்ளுங்கள்.
- அதிலுள்ள ஒரு சொல்லை ஒருவர் கூறி அதனை தேடிக் கண்டுபிடிக்குமாறு மற்றவரிடம் கூறுங்கள்.
- மற்றவர் அதனை தேடிக்கண்டு பிடிக்கும் வரை முதலாமவரை ஒன்று, இரண்:டு என 50 வரை எண்ணச் செய்யுங்கள்.
- 50 வரை எண்ணும் வரை மற்றவர்களினால் அதனைக் கண்டுபிடிக்க முடியாது போகுமாயின், சொல்லைக் கூறியவருக்க 50 புள்ளிகள் கிடைக்கும். குறைவான எண்ணிலேயே தேடிப்பிடிப்பாராயின் அவ்வெண் புள்ளியாகக் கிடைக்கும் இருவரினது புள்ளிகளையும் தனித்தனியாக எழுதிக் கொள்ளுங்கள்.
- இவ்வாறு வெவ்வேறு பக்கங்களைப் புரட்டி விளையாட்டில் ஈடுபடுங்கள்
- இருவரும் 5 முறை விளையாடிய பின்னர் இருவரினது மொத்தப்புள்ளிகளையும் காணுங்கள்.

## இணைப்பு 2.1.2.2

**வேலைப்படிவம் 2**

- இருவர் இருவராக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தப்படி நின்று கொள்ளுங்கள்.
- ஒருவரை பிள்ளையாகவும் மற்றவரை கண்ணாடியாகவும் கருதுங்கள்
- பிள்ளையாகச் செயற்படுபவரைக் கண்ணாடிக்கு முன்பதாக நின்று தனக்கு விருப்பமானதைச் செய்யுமாறு கூறுங்கள்.
- கண்ணாடியாக நடிப்பவரும் அதனைச் செய்ய வேண்டும்.
- ஆசிரியர், ஆசிரியை கொடுக்கும் சமிக்ஞைக்கு ஏற்ப இருவரும் மாறி முதலில் போன்று செய்யுங்கள்.

## இணைப்பு 2.1.2.3

**வேலைப்படிவம் 3**

- குழுவிலுள்ள எல்லா மாணவரும் தமது குறிப்பெழுதும் பயிற்சிப் புத்தகத்தின் இரண்டு பக்கங்களைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைத் தயாரித்தல் வேண்டும்.

| ஆண்கள் | பெண்கள் | பூக்கள் | மரக்கறிகள் | பிராணிகள் | நகரங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

- ஒருவர் கூறும் எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துங்கள். (தேவையாயின் அ, ஆ, இ, ஈ என்றவாறு உயிர் எழுத்துக்களைப் பயன்படுத்தலாம்.)
- முதலில் எழுதி முடித்தவர் stop என்று கூறியதும் ஏனையோர் எழுதுவதை நிறுத்தி விட்டு எஞ்சிய கட்டங்களை கீறி விடவும்.
- ஒவ்வொருவரும் தமது விடைகளைச் சமர்ப்பித்தபடி, ஒவ்வொரு சரியான விடைக்கும் 10 புள்ளிகள் ஒதுக்குமாறு கூறுங்கள்.
- ஒரே விடையை இருவர் அல்லது கூடுதலானோர் எழுதியிருப்பார்களாயின் அதற்காக 5 புள்ளிகள் வீதம் ஒதுக்கிக் கொள்ளுங்கள்.
- இவ்வாறு வெவ்வேறு எழுத்துக்களுக்கும் பெயர்கள் எழுதி அட்டவணையைப் பூரணப்படுத்தச் செய்யுங்கள் யாவரினதும் புள்ளிகளைக் கூட்டிப்பாருங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 2.0** : ஆளுமை வளர்ச்சிக்காக ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :

**செயற்பாடு** : "பாடல்களின் இனிமையை இரசிப்போம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 2.2.1.1 - இது ஒரு அழகிய உலகம் பாடல்.
- இணைப்பு 2.2.1.2 - பாடலின் பிரதிகள் போதிய எண்ணிக்கையில்
- இணைப்பு 2.2.1.3
- எழுதுதாள்கள்
- பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 2.2.1.1** :

- வகுப்பிற்கு வெளியிலுள்ள ஓரிடத்திற்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.
- இணைப்பிலுள்ள பாடலை நாடாப்பதியி மூலம் மாணவரைச் செவிமடுக்கச் செய்யுங்கள். தாளயத்துடன் சேர்ந்துபாட மாணவரைத் தூண்டுங்கள்.
- இது தொடர்பாக மாணவரின் கருத்தைக் கேட்டவாறு பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - நல்ல பாடல்களைக் கேட்பதன் மூலம் நல்ல இரசனையைப் பெறலாம்.
> - ஓய்வு நேரத்தைப் பயனுள்ளவாறு கழிக்க பாடல்களை இரசிப்பதில் ஈடுபடலாம்.
> - பாடலிலுள்ள கருத்தைப் புரிந்து கொள்வதன் மூலம் வாழ்க்கைக்கு முன் மாதிரியையும் தக்க செய்தியையும் வழங்க முடியும்.
> - கருத்தாழமும் இனிமையும் கொண்ட பாடல்களை செவிமடுப்பதன் மூலம் மனதில் நிம்மதி ஏற்படும்.

(10 நிமிடங்கள்)

**படி 2.2.1.2** :

- வகுப்பு மாணவரை தக்கவாறு இரண்டு குழுக்களாக்குங்கள்
- ஒவ்வொரு குழுவிற்கும் 2.2.3.2, 2.2.3.3 இற்கான வேலைப்படிவங்களை வழங்குங்கள்.
- மாணவரை குழுச் செயற்பாடுகளிலீடுபடுத்துங்கள்.
- வேலையை இலகுபடுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பையும் வழிகாட்டலையும் வழங்குங்கள்.

(10 நிமிடங்கள்)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 2.2.1.3 :

- தமது ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்வைக்க மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.
- தாம் சமர்ப்பித்த செயற்பாடுகள் தொடர்பான தமது கருத்துக்களைச் சமர்ப்பிக்க மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.
- அறிவு, அனுபவம் ஆகியவற்றைப் பரிமாற்றிக் கொள்ளக் குழுச் செயற்பாடுகளை ஒப்பிட்டுக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களின் பாடல்கள் நடிப்புக்கள் ஆகியவற்றில் காணப்படும் குறைபாடுகளை எடுத்துக்காட்டி அவற்றை மேம்படுத்தக் கூடியவாறு கருத்து கூற வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • ஆக்கச் செயற்பாடுகளின் மூலம் வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களை அழகியல் ரீதியில் அணுக முடியும். |
| • குறுகிய காலத்தினுள் யாவருக்கும் ஆக்கபூர்வமான அனுபவங்களைப் பெற முடியும். |
| • ஆக்கங்களை இரசிக்கப் பயிலுவதன் மூலம் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளவாறு கழிக்கமுடியும். |
| • ஆக்கபூர்வமான பாடலின் மூலம் ஒருவரை சமூகத்தில் பயனுள்ள நபராக மாற்ற முடியும். |
| • பாடல், கவிதை, சித்திரங்கள் ஆகிய எல்லா அழகியல் ஆக்கங்களின் மூலமும் எமது வாழ்க்கையைக் அர்த்தமுள்ளதாக்க முடியும். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- இரசனைக்குப் பொருத்தமான ஆக்கங்களைப் பெயரிடுவார்.
- ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிக்க ஆக்கச் செயற்பாடுகளை உபயோகிக்க முடியும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- பாடலொன்றைப் பாடி நடித்துக்காட்டுவர்.
- சிறந்த ஆக்கங்களைத் தேர்ந்தெடுத்து நண்பர்களுடன் இரசிப்பார்.
- உயர்தர இரசனையுடன் கூடிய பாடலொன்றை, கவிதையை உருவாக்க முற்படுவர்.

(5 நிமிடங்கள்)

**பின்தொடர்வேலை:-**

உங்கள் மனதைக் கவர்ந்த சிறுவர் பாடல் தொகுதியைச் சேகரித்து சிற்றேடொன்றைத் தயாரிக்கவும்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 2.2.1.1

பாடல்

## இணைப்பு 2.2.1.2

**குழு 1 : வேலைப்படிவம் (பாடல்)**

## இணைப்பு 2.2.1.3

**செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள்.**

1. குழு அங்கத்தவர்கள் யாவரும் ஒன்றாகப் பாடலைப்பாடி அதன் கருத்தை விளங்கிக் கொள்ளுங்கள்
2. பாடலின் மூலம் கூறப்படும் நிகழ்வைப் பொருத்தமான அங்க அசைவுகளுடன் ஆடிக் காட்டுங்கள்.
3. சில மாணவர்பாடும்போது ஏனையோர் ஆட வேண்டும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 2.0** : ஆளுமை வளர்ச்சிக்காக ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :

**செயற்பாடு 2.2.2** : "கலையை இரசிப்பதனால் வாழ்வு வளம்பெறும்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 2.2.2.1 - இல் அடங்கும் பாடல்
- இணைப்பு 2.2.2.2 - இற்கான வேலைப்படிவம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 2.2.2.1** :

- மாணவரைச் சுயாதீனமான ஒரு சுற்றாடலுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- இணைப்பு 2.2.2.1 இல் அடங்கும் பாடலை நாடாப்பதியி மூலம் ஒலிபரப்புங்கள். அல்லது பாடக்கூடிய மாணவன் அல்லது சங்கீத ஆசிரியர் மூலம் வகுப்பில் பாடச் செய்யுங்கள்.
- கண்களை மூடிக்கொண்டு அப்பாடலை இரசிக்க மாணவரை வழிப்படுத்துங்கள்.
- இவ்வாறு இரண்டு முறை ரசிக்க வாய்ப்பளியுங்கள்.
- அப்பாடல் தொடர்பாக மாணவருள் ஏற்படும் உணர்வு பற்றி சிந்தனை கிளர்வுச் செயற்பாட்டில் ஈடுபடக் கூடியவாறு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - சோகத்தை ஏற்படுத்தும் பாடலின் மூலமும் வாழ்க்கை பற்றிய ஆழமான விளக்கம் ஏற்படும்.
> - உயர்தரப் பாடலைச் செவி மடுப்பதனாலும் இரசிப்பதனாலும், மனதினுள் புத்துணர்வு ஏற்படும்.
> - பாடலைச் செவிமடுப்பதன் மூலம் மனதிலுள்ள சோகம், கோபம் போன்ற பல்வேறு உணர்வுகள் இல்லாமற் போகும்.
> - கோபம், துக்கம், மகிழ்ச்சி போன்ற உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு உயர்தர ஆக்கங்களைச் செய்ய முடியும்.

(10 நிமிடங்கள்)

**படி 2.2.2.2** :

- வகுப்பு மாணவரை மூன்று குழுக்களாக்குங்கள். அவர்களுக்குக் கடதாசி, பேனாக்கள் போன்றவற்றை வழங்குங்கள்.
- இணைப்பு 2.2.3.2 இலக்க தேடியாய்வு பத்திரங்களைக் குழுக்கள் மத்தியில் பகிர்ந்தளியுங்கள்.
- மாணவரை குழுச் செயற்பாடுகளிலீடுபடுத்துங்கள்.

(10 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 2.2.2.3 :

- தமது ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்வைக்க மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.
- எல்லாச் சமர்ப்பித்தல்களையும் ஒரே முறையில் சமர்ப்பிக்க வாய்ப்பு வழங்குங்கள்.
- பாடலைப் பாடவும், சித்திரம், நடிப்பு பற்றி மதிப்பிடவும் குழுக்களுக்கு வாய்ப்பு வழங்குங்கள்.
- மாணவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்துப் பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

    - ஓய்விலும், பயனுள்ள பொழுது போக்குகளிலும் ஈடுபட்டு வாழ்க்கையை பயனுள்ளதாகக் கழிக்க முடியும்.
    - உள உணர்வுகளை ஆக்கபூர்வமாக வெளியிடுவதன் மூலம் அபூர்வமான இரசனை மிக ஆக்கங்கள் உருவாகின்றன. (சித்திரங்கள், பாடல்கள், கவிதைகள், நாடகங்கள்)
    - கருத்தாழமுள்ள அழகியல் ரீதியான ஆக்கத்தை இரசிப்பதன் மூலம், வாழ்க்கை பற்றிய தெளிவு ஏற்படும்.
    - புத்துணர்வுடன் செயற்பட அழகியற் செயற்பாடுகள் உதவும்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- உள எழுச்சிகளை ஆக்கபூர்வமாக வெளியிடும் முறைகளைக் கூறுவார்.
- அழகியல் செயற்பாடுகளிலீடுபட்டு வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்ள முடியும் என ஏற்றுக் கொள்வார்.
- ஆக்கத்திறன் மூலம் ஏற்படும் அழகியல் தன்மையை வெளிப்படுத்துவார்.
- ஓய்வின்போது கருத்தாழமுள்ளதும், ஆக்கபூர்வமானதுமான அழகியல் செயற்பாடுகளிலீடுபடுவார்.
- தாம் வாழும் சமுகத்தின் அங்கத்தவர்களையும் கருத்தாழமுள்ள அழகியற் செயற்பாடுகளில் பங்கேற்கச் செய்வார்.

பாடல்

## வேலைப்படிவம்

**குழு 1 :**
மேற்படி பாடலில் கூறப்படுவதை எடுத்துக்காட்டும் வகையில் சித்தரம் ஒன்று வரையுங்கள்.

**குழு 2 :**
பாடலுக்கு ஏற்ப அங்க அசைவுகளுடன் கூடிய ஆடலில் ஈடுபடப் பயிற்சி பெற்று தயாராகவிருங்கள்.

**குழு 3 :**
மேற்படி பாடலைப் பாட குழுவைத் தயார்படுத்துங்கள். அதனைச் சமர்ப்பிக்க தயாராகுங்கள். இதற்கு 10 நிமிட நேரம் தரப்படும்.

# 3.0 விழுமியங்களை மதித்து முன்மாதிரியாக நடந்து கொள்வார்.

## அறிமுகம்

ஒவ்வொருவரும் தமது வாழ்வை வெற்றிகரமாக்கிக் கொள்ள முயற்சி செய்வார்கள். அவ்வாறு முயலும் போது பொருளாதார ரீதியில் பெறும் வளர்ச்சியின் மூலம் மாத்திரம் வாழ்வில் வெற்றியடைய முடியாது. வாழ்வில் உண்மையாக வெற்றியடைய நன்நெறிகளை மதிக்கும், பேணும், பின்பற்றும் ஒரு நபராக வாழ வேண்ம். நபரையும் சமூகத்தையும் வாழ்க்கையையும் வளமாக்கும் கருத்தாழமுள்ள நெறிகள், மனித நேயம் என்று கூறுவதும் இதனையேயாகும். நன்னெறியுள்ளவராக வாழும் ஒருவர் சமூகத்தால் பெரிதும் பாராட்டப்படுவார். மக்கள் தமது சமூகத்தில் நிலவும் நன்னெறிகளை இனங்கண்டு அவற்றைப் பின்பற்றி வாழ்வார்களாயின், சமூகத்தின் பெருமதிப்பிற்கு ஆளாவார்கள். இதற்காக சிறுவயது முதலே பயிற்சி அவசியமாகிறது. அதற்காகத் தாம் வாழும் வீட்டில் நன்னெறிகளை இனங்கண்டு பின்பற்றவும் பாடசாலையிலும் வகுப்பறையிலும் தக்க நன்னெறிகளைப் பயிலத் தூண்டுவதும் அவசியம் எனக் கருதப்படுகின்றது. அவ்வாறான நன்னெறிகளை நோக்கமாகக் கொண்ட ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி நடப்பதன்மூலம் கிடைக்கும் பயனை அனுபவித்தவாறு வெற்றிகரமான ஒரு நபராக, முன்மாதிரியாக செயற்படத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்தல் இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**தேர்ச்சி மட்டம் :-**

- வெற்றிகரமான வாழ்க்கைக்காக விழுமியங்களை பின்பற்றுவார். சமூக நல்வாழ்க்கைக்காக விழுமியங்களின் தேவை.
  - விழுமியத்திற்கு வரைவிலக்கணம் கூறுதல். (விழுமியம் என்பது நபர், சமூகம், வாழ்க்கையை வளமாக்கும், கருத்தாழமாக்கும் மானிடப் பண்பாகும். வாழ்க்கையை பயனுள்ளதாக்குவது விழுமியங்களே)
  - விழுமியங்களினூடாக நல்ல சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் விதம்
  - தனிப்பட்ட முறையில் கட்டியெழுப்ப வேண்டிய விழுமியங்கள். (உண்மையாக நடந்துகொள்ளல், நேர்மை, அன்பு, கருணை, சமாதானம், ஒத்துழைப்பு)
  - ஒவ்வொரு விழுமியங்களையும் பின்பற்றுவதன் மூலம் தனக்கும், சமூகத்திற்கும் கிடைக்கும் நற்பலன்கள்.
- எம்மால் பாதுகாக்கவும், மதிக்கப்படவும் வேண்டிய விழுமியங்கள்
  - தான்வாழும் சமூகத்தில் நிலவுகின்ற விழுமியங்களை கண்டாய்தலும், பட்டியற்படுத்தலும்.
  - தாம் பின்பற்றும் விழுமியங்களைப் பரிசோதித்துப் பின்பற்றல்.
  - பொதுச் சொத்துக்கள், சுற்றாடல் தொடர்பான விழுமியங்களை இனங்காணலும் பாதுகாத்தலும்.
- தனியாள் அபிவிருத்திக்காக விழுமியங்களை உபயோகித்தல்.
  - வீட்டில் பின்பற்றப்பட வேண்டிய விழுமியங்கள் (பேச்சுவார்த்தை, பழக்க வழக்கங்கள், நடத்தைகள் ஆகியன)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 3.0 : விழுமியங்களை மதித்து முன்மாதிரியாகச் செயற்படுவார்.**

**தேர்ச்சி மட்டம் :** வெற்றிகரமான நிலவுகைக்காக விழுமியங்களைப் பயன்படுத்துவார்.

**செயற்பாடு 3.1.1 :** "விழுமியங்கள் நிரம்பிய உலகு அழகானது"

**நேரம் :** 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 3.1.1.1 - கவிதை
- இணைப்பு 3.1.1.2 - இற்கான செயற்பாட்டுப்பத்திரம்
- எழுதுதாள்கள்
- பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 3.1.1.1 :**

- இணைப்பு 3.1.1.1 கவிதையைப் பிள்ளைகளைக் கொண்டு பாடச் செய்யுங்கள்.
- அது தொடர்பாகக் கருத்தறியுங்கள்.
- அப்பாடல் தொடர்பாக மாணவரின் துலங்கலைக் கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • பகிர்ந்து கொள்ளல், பரிவுணர்வுடன் செயற்படல். அன்பு, தயை போன்ற உயர் பண்புகள் சமூகத்தின் சீரான நிலவுகைக்குக் காரணமாகும்.<br>• தனதும் ஏனையோரினது நலத்திற்கும் காரணமாகும் மேற்படி உயர் பண்புகள் விழுமியங்கள் எனப்பெயர் பெறும்.<br>• விழுமியங்களை பின்பற்றுவதன் மூலம், சமூகத்திற்கு நன்மையும் தனக்கு ஆத்ம திருப்தியும் கிடைக்கும். |

(10 நிமிடங்கள்)

**படி 3.1.1.2 :**

- வகுப்பு மாணவரை A, B, C, D என நான்கு குழுக்களாக்குங்கள்.
- குழுக்களுக்கு தலைவர்களை நியமிக்கச் செய்யுங்கள்.
- இணைப்பு 3.1.1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தனித்தனியாக நான்கு குழுக்களுக்கும் கையளியுங்கள்.
- கண்டாய்விற்காக (15 நிமிட) அவகாசம் அளியுங்கள்.

(10 நிமிடங்கள்)

**படி 3.1.1.3 :**

- மாணவரை செயற்பாட்டிலீடுபடுத்துங்கள்.
- அவதானித்த விழுமியங்களைக் கரும்பலகையில் நிரற்படுத்த அறிவுரை வழங்குங்கள்.
- எல்லாக் குழுக்களும் தமது ஆடலகளைச் சமர்ப்பித்த பின்னர் அவற்றை விமர்சித்து குறை நிரப்புச் செய்யுங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • விழுமியங்கள் எனப்படுபவை நபரையும் சமூகத்யையும் வளமாக்கும், கருத்தாழமாக்கும் மனிதப் பண்புகளாகும்.<br>• விழுமியங்களைப் பின்பற்றுவதன் மூலம், ஆத்ம திருப்தியும் ஏனையோருக்கு நன்மையும் ஏற்படும்.<br>• விழுமியங்கள் வாழ்க்கையை அழகுபடுத்தி, சமூகத்தின் சீரான நிலவுகைக்கு காரணமாகும்.<br>• விழுமியங்கள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்ற ஒருவரது வாழ்வின் பெரும்பாலான வேலைகள் வெற்றிகரமாக அமையும். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- விழுமியங்கள் என்றால் என்ன எனக் கூறுவார்.
- தனதும் ஏனையோரதும் சீரான வாழ்விற்கு விழுமியங்கள் அவசியம் என ஏற்றுக் கொள்வார்.
- அந்தந்த சந்தர்ப்பத்திற்குத் தேவையான விழுமியங்களைப் பேணுவார்.
- நாளாந்த வேலைகளின் போது விழுமியங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பார்.
- சமூகத்தின் நன்மை கருதி விழுமியம் சார்ந்த வாழ்க்கையைப் பேணுவார்.

**பின்தொடர் வேலைகள்:**

நீங்கள் வெற்றிபெற்ற விளையாட்டுக்குழுவின் தலைவர் எனக் கருதுங்கள். தோல்வியடைந்த குழுவினரை பரிகாசத்திற்கும் அவமானத்திற்கும் ஆளாக்க முற்படும் உங்கள் குழுவின் ஏனைய அங்கத்தவர்களுக்கு விழுமியங்களைப் பேணும் தலைவர் என்ற ரீதியில் உங்களது அறிவுரைகளைப் பட்டியற்படுத்துங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 3.1.1.1

ஓய்வு கிடைத்துவிட்டது
சிறுவர் நாம் ஒன்று சேர்ந்தோம்
உணவுத்தட்டுக்கள் காலியாகின
யாவரது முகத்திலும் மகிழ்ச்சிக்கலை

வகுப்பின் தோழர்
பசியால் சுருண்டு துடிக்கின்றார்.
ஏனையோரின் துக்கம் அறிந்த
இரு கண்கள் பனிக்கின்றன

நெல்லிக்கனியை ஏழுபேர்
பகிர்ந்துண்ட கதை தெரியுமா

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 3.1.1.2

**வேலைப்படிவம் 1**

- நபரிடைத் தொடர்புகளைப் பேணும் போது தேவையான விழுமியங்களைக் காட்டும் வகையில் பங்கேற்று நடித்தல் அல்லது அபிநயத்து காட்டுதல் உங்கள் குழுவிற்கு வழங்கப்பட்ட செயற்பாடாகும். இதற்குத் தேவையான விழுமியங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.
  அந்தப் பட்டியலுடன் மேலும் சிலவற்றை ஒன்று சேருங்கள்.

- பாத்திரமேற்று நடிப்பதற்காக ஒரு குழுவிற்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

நபரிடைத் தொடர்புகளைப் பேணுவதற்குத் தேவையான விழுமியங்கள்,
- மலர்ந்த முகத்துடன் இருத்தல்
- பிரியமான வார்த்தைகளைப் பேசுதல்
- நேர்மை
- பக்கசார்பின்மை
- 
- 
- 

**வேலைப்படிவம் 2**

- சூழலுக்கேற்ப துலங்கலைக் காட்டுவது தொடர்பான விழுமியங்களை வெளிப்படுத்தும் பங்கேற்று நடித்தல் அல்லது அபிநய நடனம் உங்கள் குழுவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள செயற்பாடாகும்.
- சூழலுக்கேற்ப துலங்களைக் காட்டும் விழுமியங்கள் சில கீழே பட்டியலில் காட்டப்பட்டுள்ளன. அவற்றுடன் மேலும் சில விழுமியங்களை ஒன்று சேருங்கள்.
- இதற்காக உங்கள் குழுவினருக்கு 10 நிமிட நேரம் ஒதுக்கப்படும்.

சூழலுக்கேற்ப துலங்கலைக் காட்டுவதுடன் தொடர்புடைய விழுமியங்கள்,

- சூழலை நேசித்தல்
- இயற்கையை மதித்தல்
- பிராணிகளுக்கு அன்பு காட்டுதல்
- சூழலில் வனப்பைப் பேணல்
-
-
-

**வேலைப்படிவம் 3**

- நலமான வாழ்வு வாழ்வதற்குத் தேவையாகும் விழுமியங்கள் பற்றி பாத்திரமேற்று நடித்துக் காட்டுதல். அல்லது அபிநயத்துக்குக் காட்டுதல் உங்கள் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட செயற்பாடாகும்.
- நலமான வாழ்க்கைக்கு ஏதுவாகும் விழுமியங்கள் சில கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதனுடன் மேலும் சிலவற்றை ஒன்று சேருங்கள்.
- இதற்காக உங்கள் குழுவினருக்கு 10 நிமிட நேரம் ஒதுக்கப்படும்.

நலமான வாழ்வுக்கு அவசியமான விழுமியங்கள்,

- உடற்சுத்தம்
- எப்போதும் மகிழ்ச்சியுடனிருத்தல்
- விளையாட்டொன்றில் ஈடுபடல்.
-
-
-

**வேலைப்படிவம் 4**

- வாழ்க்கையை வெற்றிகரமாக்கத் தேவையான விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையில் பாத்திரமேற்று நடித்தல் அல்லது அபிநயம் செய்து காட்டல் உங்களுக்குத் தரப்பட்டுள்ள செயற்பாடாகும்.
- வாழ்க்கையை வெற்றிகரமாக்கத் தேவையான அறநெறிகளின் பட்டியல் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. மேலும் சில விழுமியங்களை எழுதி பட்டியலை நீடியுங்கள்.
- இதற்காக உங்கள் குழுவினருக்கு 10 நிமிட நேரம் ஒதுக்கப்படும்.

வாழ்க்கை வெற்றியடைய உதவும் விழுமியங்கள்,

- பொறுப்புடன் செயற்படல்
- போதும் என்ற மனப்பாங்குடன் செயற்படல்
- அறிவும் தேடியாய்வும்
- நேரந்தவறாமை
-
-
-

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 3.0** : விழுமியங்களுக்கு மதிப்பளித்து முன்மாதிரியாகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : வெற்றிகரமான நிலவுகைக்காக விழுமியங்களைப் பயன்படுத்துவார்.

**செயற்பாடு 3.1.2** : விழுமியங்கள் உயர்வுதரும்.

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 3.1.2.1 சித்திரம்
- இணைப்பு 3.1.2.2
- எழுதுதாள்கள்
- பேனாக்கள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 3.1.2.1** :

- இணைப்பு 3.1.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விழுமியங்கள் அடங்கும் படத்தினை மாணவருக்குச் சமர்ப்பியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - வீடு, பாடசாலை, பன்சலை, கோயில், பள்ளிவாயில் போன்ற புனித இடங்களிலும் பல்வேறு சமூக சந்தர்ப்பங்களிலும் விழுமியத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.
> - மனித நேயத்தினுள் விழுமியங்களைப் பேணுவது கட்டாயமாகும்.
> - மனித நேயத்தைக் காப்பதன் மூலம், ஒரு நல்ல மனிதனாக மாறச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

(10 நிமிடங்கள்)

**படி 3.1.2.2** :

- இணைப்பு 3.1.2.2 தொடர்பாக அட்டவணையொன்றைத் தயாரிக்க மாணவருக்கு அறிவுரை கூறுங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 3.1.2.3** :

- மாணவர் எழுதிய விடயங்களை முன்வைக்கச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துங்கள்.
- அன்றாட வாழ்வில் அவற்றை விழுமியங்களைப் பின்பற்றக் காரணமாகிய பல்வேறு சிறந்த விடயங்களை மதிப்பிடுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- விழுமியங்களினால் தனியாள் அபிவிருத்தி எல்லாப் பருவங்களிலும் ஏற்படும்.
- விழுமியங்களைப் பேணி நடப்பதன் மூலம் சமூகம் சிறப்பாக இயங்கும்.
- நடத்தைகள், பேச்சு வார்த்தை, ஆடை அணிகள் ஆகிய யாவும் விழுமியம் சார்ந்தவையாக பேணப்பட வேண்டும்.
- விழுமியங்கள் பற்றிய சரியான விளக்கத்துடனும் உண்மையான மனப்பாங்குகளுடனும் செயற்பட வேண்டும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- ஒவ்வொரு விழுமியத்தையும் ஏன் பின்பற்ற வேண்டும் என்பது பற்றியும் ஏன் மதிக்க வேண்டும் என்பது பற்றியும் எழுதிக் காட்டுவார்.
- அன்றாட வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் விழுமியங்களைப் போற்றும், பின்பற்றும் நல்ல நபராக மாறுவார்.
- வீட்டிலும் பாடசாலையிலும் சமூகத்திலும் விழுமியங்களைப் போற்றுபவராக நடந்து கொள்வார்.

## இணைப்பு 3.1.2.1

**முதியவர் ஒருவரை குளிப்பாட்டுவதைக் காட்டும் படம்**



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 3.1.2.2

| விழுமியங்கள் | அவற்றை ஏன் பின்பற்ற வேண்டும் என்பதற்கான உங்கள் விளக்கத்தை எழுதுக. |
|---|---|
| 1. பெற்றோருக்கு அன்பு காட்டல்<br>2. ஆசிரியருக்க பணிந்து நடத்தல்<br>3. ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், அவற்றைச் செவி மடுத்தல்<br>4. நேரந்தவறாமை.<br>5. இடத்திற்குப் பொருத்தமாக ஆடை அணிதல் | |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# 4.0 வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களையும், நிகழ்வுகளையும் கண்டாயவும், பயனுள்ள கற்றலுக்கும் தரவுகளையும் தகவல்களையும் பயன்படுத்துவார்.

## அறிமுகம் பாடவேளை 06

யாவரும் தமது வாழ்நாள் முழுவதும் பல்வேறு பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகங்கொடுக்க நேரிடுகின்றது. இது வாழ்வின் யதார்த்தமாகும். ஆகவே வாழ்க்கையென்பது இவ்வாறான பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகங்கொடுத்தலும் அவற்றுக்கு விடைகாணலும் அவற்றை வெற்றி கொள்ளலும் ஆகும். ஒருவரின் வாழ்வில் பிரச்சினைகள் சவால்கள் ஏற்படல் அவரது சக்தியை உரசிப்பார்க்கும் ஒரு நிகழ்வாகும். ஆக்கபூர்வமாகச் சிந்திக்கவும், செயற்படவும் கூடிய ஒருவரினால் தனக்கேற்படும் வாழ்க்கையின் சவால்களையும் பிரச்சினைகளையும் திருப்திகரமான முறையில் தீர்த்துக் கொள்ளவும் முடியும். அதாவது அவற்றுக்கு மகிழ்ச்சிகரமாக முகங்கொடுக்க முடியும். ஆக்க பூர்வமாகச் சிந்திக்கப் பயிலுவதன் மூலம் யாதாயினும் ஒன்றை விமர்சன ரீதியாகச் சிந்திக்கவும், அவற்றுக்குப் பொருத்தமான மாற்றுத்தீர்வுகளை தேடியாராயவும், சிறந்த தீர்வுகளைத் தேர்ந்தெடுக்கவும் சந்தர்ப்பம் கிடைக்கும். வாழ்க்கையின் சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான, நிச்சயமான தீர்வுகள் இல்லை. இருப்பவை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பயன்படுத்தக் கூடிய மிகவும் சிறந்த முறைகளேயாகும். அது நபருக்கு நபர் வேறுபடும்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :-** **பல்வேறு மூலாதாரங்களினூடாகக் கிடைக்கும் தரவுகளையும் தகவல்களையும் விமர்சன ரீதியாக உபயோகிப்பார்.**

- வாழ்க்கைத் தேவைகளுக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும் தரவுகளினதும் தவல்களினதும் முக்கியத்துவமும் பொருத்தப்பாடும்.
  - யாவரது வாழ்விலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதற்கேற்ப பல்வேறு பருவங்களும் அமைகின்றன. குழந்தை, பிள்ளை, கட்டிளமை, இளமை, வயது வந்தோர், நடுத்தர வயதுடையோர், முதியோர் ஆகியன அவையாகும்.
  - அந்தந்த பருவங்களுக்கேற்ப நபர்களின் அறிவு, மனப்பாங்கு, எண்ணக்கரு, தேவைகள் ஆகியவற்றில் வேறுபாடுகள் உள்ளன. இந்நிலை அந்தந்த நபர்களுக்கேற்ப வேறுபடும்.
  - அந்தந்த வாழ்க்கை நிலைமைகளின் போது தேவைகளையும் அவசியமானவற்றையும் பெறுவதற்கும் பல்வேறு நிகழ்வுகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கவும். தம்மிடமுள்ள தகவல்களையும் தரவுகளையும் பயன்படுத்தலாம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**4.2 வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களின்போதும் சவால்களின் போதும் ஆக்க பூர்வமான சிந்தனையுடன் செயற்படுவார்.**

**பாட உள்ளடக்கம்**

- காணும், கேட்கும் விடயங்கள் பற்றி பல்வேறு கோணங்களில் பார்க்கப் பயிலுவர்.
  - சமூகம் என்பது நபரிடைத் தொடர்புகளின் வலையமைப்பாகும்.
  - ஒவ்வொருவருக்கும் இந்த வலை ஒரு தானம் உரித்தாகும். அதற்கேற்ப பல்வேறு தொடர்பாடல் வேலைகளிடுபட நேரிடும்.
  - தொடர்பு வலையமைப்பினுள், நபரின் நடிபங்கு பல வகையாகும். தான் கேட்கும் தாம் காணும், தாம் அனுபவிக்கும், விடயங்களை வரைவிலக்கணம் செய்வது அதனடிப்படையிலாகும்.

**தேர்ச்சி 4.0** : வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களையும் நிகழ்வுகளையும் கண்டாராயவும் பயனுள்ள கற்றலுக்கும் தரவுகளையும் தகவல்களையும் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : பல்வேறு மூலாதாரங்களிலிருந்தும் பெறப்படும் தரவுகளையும் தகவல்களையும் விமர்சன ரீதியாகப் பயன்படுத்துவார்.

**செயற்பாடு 4.1.1** : "எமது அறிவினால் உங்களுக்கு உதவுவோம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 4.1.1.1 - பல்வேறு சந்தர்ப்பங்களைக் காட்டும் படங்கள்
- இணைப்பு 4.1.1.2 - நிகழ்வுக்கற்கை
- டிமை தாள்
- பெல்ட் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 4.1.1.1** :

- இணைப்பு 4.1.1.1 படத்தை வகுப்பில் சமர்ப்பியுங்கள்.
- அப்படங்களின் மூலம் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களைக் கேட்டறியுங்கள்.
- மேற்படி சந்தர்ப்பமொன்றுக்கு உங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுமாயின் நீங்கள் எவ்வாறு செயற்படுவீர்கள் என்றும் சிந்தனை கிளர்ச்சிக் கலந்துரையாடலை நடத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - ஒவ்வொரு களத்திலும் பல்வேறு வாழ்க்கை நிகழ்வுகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் நாம் முகங் கொடுக்கின்றோம்.
> - அவற்றின் போது எம்மிடமுள்ள அறிவையும், பிற காரணிகளையும், உபயோகித்து பல்வேறு முடிவுகளுக்கும் வருகின்றோம்.
> - அதற்காக எமக்குப் பல்வேறு தரவுகளும், தகவல்களும் அவசியமாகின்றன.

(10 நிமிடங்கள்)

**படி 4.1.1.2** :

- மாணவரை குழுக்களாக்குங்கள்.
- இணைப்பு 4.1.1.2 ஐ மாணவர்கள் மத்தியில் விநியோகியுங்கள்.
- அதனடிப்படையில் செயற்பாட்டிலீடுபடுங்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 4.1.1.3 :

- ஆலோசனைகளைச் சமர்ப்பிக்க மாணவருக்கு வாய்ப்பு வழங்குங்கள்.
- அது பற்றி ஏனைய குழுக்களின் கருத்தைக் கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • யாவரிடமும் பல வகையான தகவல்களும் தரவுகளும் உள்ளன.<br>• சிற்சில சமயங்களில் முடிவுகளை எடுப்பதற்கு எம்மிடமுள்ள தகவல்கள் தரவுகள்போதாமற்போகும்.<br>• அதற்காக மற்றவர்களிடமிருந்து உதவிகளையோ தகவல்களையோ தரவுகளையோ பெற நேரிடும்.<br>• நல்ல வழிகாட்டல்கள், சரியான தகவல்கள் மூலம் சரியானதும் உத்தமமானதுமான முடிவுகளைப் பெற முடியும்.<br>• உங்கள் கடந்த கால அனுபவங்களை பல்வேறு வாழ்க்கைப் பிரச்சினைகளின் போது விமர்சன ரீதியாக உபயோகிக்க முடியும். |

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தவல்களினதும் தரவுகளினதும் தேவையை விவரிப்பார்.
- வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது சரியான தரவுகளையும் தகவல்களையும் உபயோகிப்பதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்வார்.
- பல்வேறு தீர்வுகளையும் விதந்துரைத்து முன்வைப்பார்.
- பிழையற்ற தீர்வுகளை எடுப்பார்.
- வாழ்வின் பல்வேறு கட்டங்களின் போது ஏனையோருக்கு உதவுவார்.

# இணைப்பு 4.1.1.1







# இணைப்பு 4.1.1.2

## வேலைப்படிவம்

வீட்டு முற்றத்தின் ஓரத்திலிருந்து, கிணற்றடியிலிருந்து பூனையொன்று திடீர் என வழுக்கி விழுந்துள்ளது. கிணற்றினுள் எட்டிபார்த்த போது பூனை கிணற்றுச் சுவரிலிருந்த ஒரு செடியை பிடித்துத் தொங்கிய படி கத்திக் கொண்டிருக்கக் காணப்பட்டது.

1. உங்கள் குழுவிற்கு மேற்படி சவால் முன்வைக்கப்பட்டதாயின் நீங்கள் செயற்படும் விதத்தை குறிப்பிடுங்கள்.
2. மேற்படி தீர்வுக்கு வர உங்களுக்கு உதவிய தகவல் எது?
3. இவ்வாறான சந்தர்ப்பத்தில் தமது கடந்தகால அனுபவங்களினூடாக முடிவெடுக்கச் செய்யுங்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 4.0** : வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களையும் நிகழ்வுகளையும் கண்டாராயவும் பயனுள்ள கற்றலுக்கும் தரவுகளையும் தகவல்களையும் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : பல்வேறு மூலாதாரங்களிலிருந்தும் பெறப்படும் தரவுகளையும் தகவல்களையும் விமர்சன ரீதியாகப் பயன்படுத்துவார்.

**செயற்பாடு 4.1.2** : "சதி தகவல் தேடுவோம்"

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 4.1.2.1 - இல் காட்டப்பட்டுள்ள சுவரொட்டி
- எழுதுதாள்
- பேனாக்கள்
- தரவுகள், தகவல்கள் அடங்கும் பல்வேறு மூலாதாரங்கள்.

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 4.1.2.1** :

- இணைப்பு 4.1.2.1 ஐ காட்சிப்படுத்துங்கள்.
- அதனுதவியுடன் அதிலுள்ளவை பற்றி விசாரித்தறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • பல்வேறு ஊடகங்களினூடாக பல்வேறு தரவுகளும் தகவல்களும் எமக்குக் கிடைக்கின்றன.<br>• ஊடகங்கள் ஒரே தகவலை வித்தியாசமான பல்வேறு முறைகளில் முன்வைக்கின்றன.<br>• தவல்களையும், தரவுகளையும் பெறுவதற்கு பல்வேறு மூலாதாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. |

(15 நிமிடங்கள்)

**படி 4.1.2.2** :

- மாணவரை குழுக்களாக்குங்கள்.
- இணைப்பு 4.1.2.1 உடன் தொடர்புடைய அல்லது வேறு ஏதாவது ஒத்த நிகழ்வுடன் தொடர்புடைய தகவலொன்றைத் தேடிக் கொண்டு வரச் சந்தர்ப்பமளியுங்கள்.
- இதற்கான தரவை அல்லது தகவலை பாடசாலையினுள் இருந்தே தேடிக்கொண்டு வருமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- தாம் தகவல்களைப் பெற்ற மூலாதாரத்தையும் குறித்துக் கொண்டு வருமாறு அறிவுறுத்துங்கள்.

(25 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 4.1.2.3 :

- தேடியறிந்தவற்றை சமர்ப்பிக்க மாணவருக்கு வாய்ப்பு வழங்குங்கள்.
- அவற்றைக் காட்சிப்படுத்துங்கள்
- அது தொடர்பான குழுக்களின் கருத்தைக் கேட்டறியுங்கள்.
- தகவல் அல்லது தரவை சேகரிக்கும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- தரவுகள் அல்லது தகவல்களைப் பெற பல்வேறு மூலாதாரங்களை உபயோகிக்கலாம்.
  - புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், அறிக்கைகள், வீடியோ நாடாக்கள், வானொலி, தொலைக்காட்சி, வீசீடி நாடாக்கள், அகராதிகள், கணினிகள், இணையம் ஆகியன தகவல்களையும் தரவுகளையும் பெற உதவும் மூலாதாரங்களாகும்.
- நபர்களின் ஞாபகம், வாழ்க்கை நிகழ்வுகள், சந்தர்ப்பங்கள் ஆகியன தகவல்களை அல்லது தரவுகளைப் பெற உள்ள ஒரு பிரதான மூலாதாரமாகும்.
- மனிதனின் மனதினுள் பாரியளவான தகவல்கள் தேங்கியுள்ளன. புதிய நிகழ்வுகளுடன் அவை ஞாபகத்தில் வருகின்றன.
- தகவல்களை தேடியாராய்வதன்மூலம் நபரின் ஞாபகம் விரிவடைகின்றது.
- தவல்களையும் தரவுகளையும் வழங்கும் பல்வேறு நிறுவனங்கள் உள்ளன.
- அரச ஆவணத்திணைக்களம், தேசிய அருங்காட்சிசாலை பேராதனைப்பல்கலைக்கழக நூலகம் ஆகியன இலங்கை யில் உள்ள பழைய, தேசிய மட்ட நிறுவனங்களாகும்.
- இலங்கையிலுள்ள தகவல்கள் மற்றும் தரவுகளைச் சேகரிக்கும் தேசிய மத்திய நிலையமாக இலங்கை தேசிய நூலகம் 1976 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுகின்றது.
- சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் இலங்கையின் தேசிய மட்டத் தகவல்களும் தரவுகளும் சேகரிக்கப்படுகின்றன.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தவல்களினதும் தரவுகளினதும் தேவையை விவரிப்பார்.
- வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது சரியான தரவுகளையும் தகவல்களையும் உபயோகிப்பதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்வார்.
- பல்வேறு தீர்வுகளையும் விதந்துரைத்து முன்வைப்பார்.
- பிழையற்ற தீர்வுகளை எடுப்பார்.
- வாழ்வின் பல்வேறு கட்டங்களின் போது ஏனையோருக்கு உதவுவார்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**பின்தொடர் வேலைகள்:**

1. பின்வரும் தகவல்கள் அடங்கும் மூலாதாரங்களைத் தேடியாராயுங்கள்.
    - பிறப்புச் சான்றிதழ்
    - தேசிய அடையாள அட்டை
    - தபால் அடையாள அட்டை
    - தடுப்பூசி அறிக்கை
    - கல்விச் சான்றிதழ்கள்

2. இலங்கைத் தேசிய நூலகத்தின் மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள் பற்றிய பிரசுரமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை நன்கு ஆராய்ந்து தேசிய நூலகங்களின் மூலம் எமது கல்விப்பணிகளுக்குக் கிடைக்கும் சேவைகள் பற்றிய சுருக்க அறிக்கையைத் தயாரியுங்கள்.

## இணைப்பு 4.2.1.1

- பின்வரும் கூற்றை வகுப்பிலுள்ள யாவரும் காணக்கூடியவாறு சமர்ப்பியுங்கள். முன்னரே தயாரித்துக் கொண்டுவந்த படிவத்தை உபயோகித்தல் மிகப் பொருத்தமானது.

> பாடசாலை மாணவ/ மாணவியர்
> பங்கு பற்றும் கல்விச் சுற்றுலா
> ஒன்று எதிர்வரும் மாதத்தில்
> நடைபெறும். அதற்கான
> ஏற்பாடுகள் அதிபர் செய்கின்றார்.

- மேற்படி கூற்றைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- இக்கூற்று எவருக்கு எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்துமென பிள்ளைகளிடம் கருத்தறிந்து அவற்றை பலகையில் எழுதுங்கள்.

**கவனம் செலுத்தப்பட்ட வேண்டிய விடயங்கள்/ கலந்துரையாடல் பட வேண்டியன.**

பிள்ளைகள் : யார் பங்கு பற்றுவது எனத் தீர்மானித்தல்.
செலவுக்கான பணம் பெறல்.
தேவையான ஆடையணிகளைப் பெறல்.

பெற்றோர் : தமது பிள்ளைகள் எத்தனைப்பேர் சுற்றுலாவில் பங்கு பற்றுகின்றார்கள் எனத்தீர்மானித்தல்.
பணத்தைத் தேடிக்கொடுத்தல்.
தேவையான ஆடையணிகள் வேறு பொருட்கள் போன்றவற்றை தேடிக் கொடுத்தல்.
பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழங்கல். ஆகியன பற்றி சிந்தித்தல்.

ஆசிரியர்கள் : பணம் தேடல், தேவையான ஏனையவற்றைத்தேடல்.
விட்டல்லுள்ளோரில் யார் யார் சுற்றலாவில் பங்கு கொள்கிறார்கள் எனத் தீர்மானித்தல்.
வீட்டின் பாதுகாப்பு பற்றி செயற்படல்.

காய்ச்சல் தொற்று நோயொன்று பரவுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இந்நோய் நீர் மூலம் பரவுவதால் நீரைக் கொதித்து ஆறவைத்து உபயோகித்தால் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- முதலாவது கூற்று போன்றே இக்கூற்றையும் கலந்துரையாடுங்கள்.
- இங்கு செல்வாக்குச் செலுத்தும் ஐந்து பிரிவினரையும் இனங்காணுங்கள்.
- அவர்கள் பெற்றோர், பிள்ளைகள், உணவு விடுதி உரிமையாளர், மருத்துவர்கள், சுகாதார அதிகாரிகள் ஆகியோராவர்.
- இவ்வனைத்து பிரிவினரின் பாத்திரங்களையும் வகை குறிப்பதற்காக, தாமாக முன்வரும் ஐந்து மாணவரை அழையுங்கள். அவர்களுடன் ஏனையோரைச் சேர்த்து குழுக்களை அழையுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் அந்தந்த பகுதியினரின் தன்மைக்கேற்ப அவ்வினாவை வரைவிலக்கணம் கூறும் விதத்தையும், எடுக்கும் நடவடிக்கை பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிய விடயங்களை நடித்துக்காட்ட முன் வந்த மாணவனின் மூலம் வகுப்பில் சமர்ப்பிக்கச் செய்யுங்கள். அச்சமயத்தில் வகுப்பு பார்வையாளர்கள் போன்று செயற்படும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 4.0** : வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களையும் நிகழ்வுகளையும் கண்டாராயவும் பயனுள்ள கற்றலுக்கும் தரவுகளையும் தகவல்களையும் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : வாழ்வின் பல்வேறு சவால்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கம் ஆக்கபூர்வமான சிந்தனையுடன் முகங்கொடுப்பார்.

**செயற்பாடு 4.1.2** : "புதிய சிந்தனைகள் எழுப்புவோம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 4.2.1.1 - இல் தரப்பட்டுள்ள பிரவேசத்திற்கு உதவும் கேலிச்சித்திரம்
- இணைப்பு 4.2.1.2 இல் தரப்பட்டுள்ள செயற்றிட்டத்திற்கான பத்திரிகை அறிக்கைகள் இரண்டும் அடங்கும் படிவங்கள் தேவையான எண்ணிக்கையில்
- எழுதுதாள்கள்
- பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 4.2.1.1** :

- இணைப்பு 4.2.1.1 இல் அடங்கும் கேலிச்சித்திரத்தைச் சமர்ப்பிப்பித்து அது தொடர்பான மாணவரின் கருத்தை கேட்டறிந்தபடி பாடத்தில் பிரவேசியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - எமக்கு பல்வேறு விடயங்களைக் காணவும் கேட்கவும் முடிகிறது.
> - அவை யாவற்றிலும் மேலோட்டமாக தோன்றுபவற்றிலும் பார்க்க கூடதலான பல விடயங்கள் மறைமுகமாகப் பொதிந்துள்ளன.
> - அவற்றை வெளிக்கொணர பல்வேறு கோணங்களில் சிந்தித்துப் பார்த்தல் அவசியமாகின்றது.
> - அவற்றுள் தாம் அறிந்த தரவுகளும் தகவல்களும் கூட விடயங்களை கண்டாராய உதவும்.

(10 நிமிடங்கள்)

**படி 4.2.1.2** :

- வகுப்பு மாணவரை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- இணைப்பு 4.2.1.1 இல் அடங்கும் அறிக்கைப்படிவத்தை குழுக்களுக்குச் சமர்ப்பியுங்கள்.
- மாணவரைக் கண்டாய்விலீடுபடுத்துங்கள்.
- கண்டாய்விலீடுபடும் சமயத்தில் தேவையான போது ஏனையோரின் உதவியைப் பெறுங்கள்.

(15 நிமிடங்கள்)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 4.2.1.3 :

- குழு மட்டத்தில் பெற்ற விடைகளை வகுப்பில் சமர்ப்பியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மையப்படுத்தி மீளாய்விலிடுபடுங்கள்.

| |
|---|
| • பல்வேறு தகவல்களும் தரவுகளும் அடங்கும் அறிக்கைகள் நாளாந்தம் எமக்குக் கிடைக்கின்றன.<br>• குறித்த ஒரு நிகழ்வு பற்றி கருதும் போது அதனுடன் தொடர்புடைய பல்வேறு நிகழ்வுகள் ஒரு வலையமைப்பாக உள்ளன.<br>• ஏதாவதொன்றைப் பற்றி குறித்த ஒரு தலைப்பில் மாத்திரம் நோக்குவதன் மூலம் பிழையற்ற முடிவொன்றுக்கு வர முடியாது.<br>• ஒரே நிகழ்வை பல்வேறு நபர்கள் பல்வேறு விதமாகப் பார்ப்பார்கள்.<br>• நிகழ்வுகளைப் பல்வேறு கோணங்களிலும் ஆராய்ந்து சந்தர்ப்பங்களையும் தோற்றப்பாடுகளையும் இனங்காண வேண்டும். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- நிகழ்வொன்றை தேடியாராயும் முறைகளை வெளியிடுவார்.
- ஒரே விடயத்தைப் பல்வேறு கோணங்களினூடாக ஆராய்வதன் மூலம் சரியான விளக்கத்தைப் பெற முடியும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- கிடைக்கும் தகவல்களை தெளிவாக முன்வைப்பார்.
- தகவல்களைக் கண்டாய்வதன் மூலம் சரியானவற்றை நோக்கிச் செல்வார்.
- வாழ்வின் பல்வேறு கட்டங்களில் ஆக்கபூர்வமான பிரவேசத்தில் நுழைய குழுவாகச் செயற்படுவார்.

**பதுளையில் போக்குவரத்து விதிகளை மீறிய 35 வாகன ஓட்டுனர்கள் மீது வழக்கு (ராகவன்)**

தாம் பதுளை நகரில் நான்கு மணித்தியாலங்களாக நடாத்திய சுற்றி வளைப்பின் பின்னர் பல்வேறு போக்குவரத்து குற்றங்களுக்காக 35 இற்கும் மேற்பட்ட வாகன சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்ததாகப் பதுளை பொலிஸ் போக்குவரத்து பிரிவு கூறுகின்றது.

நேற்று முன்தினம் (17) பிற்பகல் 4.00 மணியிலிருந்து இரவு 8.00 மணிவரை மேற்படி வாகனச் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

### 4.2.1.2 செயற்பாட்டுக்கான இரண்டு பத்திரிகை அறிக்கைகள்

மாவனல்லையில் பாண் விற்பனை குறைவடைந்துள்ளது. பாணின் விலையேற்றத்துடன், பாண் மற்றும் மா உணவு வகைகளின் உற்பத்திகள் மிக வேகமாக குறைவடைந்துள்ளது என பேக்கரி உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

பேக்கரிகளில் பாண் உற்பத்தி செய்தல் குறைக்கப்பட்டுள்ளபடியால், பேக்கரிகளில் தொழிலில் ஈடுபட்டுள்ள, பெரும் எண்ணிக்கையானோருக்கு, சிரமமாகியுள்ளதெனவும் பேக்கரி உரிமையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். முன்னர் எட்டு ரூபாய்க்கு விற்பனை செய்த சீனி பனிஸை தற்போது 10 ரூபாய்க்கு விற்பது முடியாது எனக்கூறும் பேக்கரி உரிமையாளர்கள், அதற்கும் குறைவான விலையில் நுகர்வோருக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க முடியாதென மேலும் கூறியுள்ளனர்.

கூடிய விலையில் பாண் உண்பதிலும் பார்க்க சோறு உண்பது இலாபகரமானது என பொது மக்கள் கருத்துக் கூறுகின்றனர்.

## இணைப்பு 4.2.1.2

**கண்டாய்வுடன் தொடர்புடைய அறிவுரைகளும் கேள்விக்கொத்தும்**

- எல்லாக் குழுக்களையும் இரண்டு அறிக்கைகளையும் கவனமாக வாசிக்கச் செய்யுங்கள். பின்னர் குழு கலந்துரையாடலின் மூலம் விடைகளை முன்வைக்கச் செய்யுங்கள்.

1. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் பாண் நுகர்வு குறைவடைவதில் செல்வாக்குச் செலுத்தக் கூடியது என நீங்கள் நம்பும் மூன்று காரணிகளைச் சமர்ப்பியுங்கள்.
2. பாண் விநியோகம் குறைவடைவதனால் ஏற்படும் நற்பயன்கள் 2 ஐயும் தீமைகள் இரண்டையும் எழுதுங்கள்.
3. முதல் அறிக்கைக்குப் பொருத்தமான தலைப்பையிடுங்கள்.
4. இரண்டாவது அறிக்கையின் தலைப்பின் போக்குவரத்துக் குற்றங்கள் எனும் சொற்றொடர் தொடர்பாக உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்.
   செய்தியை வாசித்து அதற்குப் பொருத்தமான வேறு இரண்டு தலைப்புகளை எழுதுங்கள்.
5. மேற்படி இரண்டு அறிக்கைகளின் மூலமும் முன்வைக்கப்படுகின்ற கருத்துக்களின் பொதிந்துள்ளதெனக் கருதக்கூடிய இரண்டு கருத்துக்களைத் தனித்தனியாக வெளிக்கொணருங்கள். அதனைக் குறித்துக் கொள்ளுங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 4.0** : வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களையும் நிகழ்வுகளையும் கண்டாராயவும் பயனுள்ள கற்றலுக்கும் தரவுகளையும் தகவல்களையும் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும் சவால்களுக்கும் ஆக்கப்பூர்வமான சிந்தனையுடன் முகங்கொடுப்பார்.

**செயற்பாடு 4.2.2** : "விமர்சன நோக்கில் உலகைப்பார்ப்போம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 4.2.2.1 - இன் விடுகதைகள் அடங்கும் பிரதிகள் இரண்டு.
- இணைப்பு 4.2.2.2 இன் கண்டாய்வுடன் தொடர்புடைய நிகழ்வுக்கற்கை பிரதிகள் போதிய எண்ணிக்கையில்
- எழுதுதாள்கள்
- பேனாக்கள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 4.2.2.1** :

- இணைப்பு 4.2.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடுகதையை மாணவன் ஒருவன் மூலம் வகுப்பில் சமர்ப்பியுங்கள்.
- அதன்படி பிரச்சினையைத் தனித்தனியாகவோ சிலர் ஒன்றுசேர்ந்தோ தீர்ப்பதற்குப் பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள்.
- சரியான விடையைக் கட்டியெழுப்ப உதவிய படியும் அதனைப் பெறுவதற்காக பின்பற்றிய பல்வேறு படிமுறைகளை கலந்துரையாடிய படியும் பின்வரும் விடயங்களை மையப்படுத்தியும் கலந்துரையாடலை வழிப்படுத்துங்கள்.

> - பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரச்சினையுடன் தொடர்புடைய எல்லாத் தகவல்களையும் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும்.
> - அவசரப்படுவதன் மூலமும் தகவல்களையும் தரவுகளையும் சரியாக விளங்கிக் கொள்ளாதிருப்பதனாலும் சரியான தீர்வைப் பெற முடியாது.
> - சரியான தீர்வைப் பெறுவதற்கு உபாயத்துடன் செயற்பட வேண்டும்.
> - வாழ்வின் சவால்களை வெற்றிகொள்ள உபாயமார்க்மாகச் செயற்பட வேண்டும்.

(10 நிமிடய்கள்)

படி 4.2.2.2 :

- வகுப்பு மாணவரை இரு குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 4.2.2.2 இல் அடங்கும் ஒப்படைப்படிவங்களை குழுக்களுக்கு விநியோகியுங்கள்.
- குழுக்களைச் செயற்பாட்டிலீடுபடுத்துங்கள்.

(10 நிமிடங்கள்)

படி 4.2.2.3 :

- தமது ஆக்கங்களைச் சமர்ப்பிக்க எல்லாக் குழுக்களுக்கும் வாய்ப்பு வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் மூலம் மேற்படி ஆக்கங்களின் பலங்களை அல்லது பலவீனத்தை எடுத்துக்காட்ட வாய்ப்பு வழங்குங்கள்.
- உபாய வழியானதும், ஆக்கபூர்வமானதுமான ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்தி பொதுவான ஆக்கமொன்றை உருவாக்குங்கள்.

(10 நிமிடங்கள்)

- மாணவர்களின் ஆக்கங்களை மதிப்பிட்டுப் பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மீளாய்விலிடுபடுங்கள்.

| |
|---|
| • வாழ்வில் நாம் முகங்கொடுக்கும் பல்வேறு சவால்களையும் உபாய மார்க்கமாக வெற்றிகொள்ள வேண்டும். |
| • வாழ்வின் சவால்களை வெற்றி கொள்ள உபாயமார்க்கமாக செயற்படும் போது தானும் ஏனையோருடன் ஒத்தாசையாகச் செயற்பட வேண்டும். |
| • ஆக்கபூர்வமான புதிய உபாய வழிகளைப் பின்பற்றுவதனால், வாழ்க்கை வெற்றியும் புத்துணர்வும் கிடைக்கும். |
| • ஒரே விடயத்தை அல்லது வாழ்வின் நிகழ்வை பல:வேறு விதமாக பார்க்கப்பழகுவதனால் வாழக்கை பற்றிய பரந்த விளக்கம் கிடைக்கும். |

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- வாழ்வில் ஏற்படும் சவாலான சந்தர்ப்பங்களின் போது அதற்கு முகங்கொடுக்கத் தேவையாகின்ற விமர்சன ரீதியான உபாய வழிகளைக் கூறுவார்.
- பல்வேறு கண்ணோட்டங்களினூடாகப் பார்ப்பதனால் சரியான தேடியாய்விற்கு வழி கோலப்படுமென ஏற்றுக்கொள்வார்.
- ஆக்கபூர்வமாகவும் உபாயத்துடனும் பிரச்சினைகளைத் தீர்ப்பார்.
- தான் காண்பவை, கேட்பவை தொடர்பாக விமர்சன ரீதியாக அணுகுவார்.
- தனது அயல் சமூகத்தினதும் வாழ்க்கை நிகழ்வுகளின் போதும் ஆக்கபூர்வமாகச் செயற்படுவார்.

**பின்தொடர் வேலைகள்:**

உயர்தர பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன. பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாவதற்கு குமாருக்கு ஒரு புள்ளி போதாதுள்ளது. அவன் மூன்று பாடங்களுக்கும் பீ சித்தி பெற்றுள்ளான். கலைப்பிரிவில் பொருளியல், தமிழ், அரசியல் ஆகிய பாடங்களுக்கு அவன் தோற்றியுள்ளான். பல்கலைக்கழகத்தில் சேர்வது அவனது கனவாகவிருந்தது. உயர்தரப்பரீட்சைக்கு அவன் தோற்றிய முதன்முறை இதுவாகும். குமாரின் தந்தை ஒரு விவசாயி ஆவார். தாயார் குடும்ப சுகாதார தாதியாவார். குமாருக்கு மூத்த சகோதரி ஒருவரும் மூத்த சகோதரர் ஒருவரும் இருக்கின்றார்கள். மூத்தசகோதரி திருமணம் முடித்து ஐந்து வருடங்களாகின்றன. இரண்டாவது அங்குள்ள நகரத்திலுள்ள தொழிற்சாலையொன்றில் தொழில்பயிலுகின்றார். அவர் (சா.த) பரீட்சையின் பின்னர் பாடசாலையை விட்டு விலகிவிட்டார். இளைய சகோதரர் 10 ஆந்தரத்தில் கல்வி கற்கின்றார். குமாரின் இரண்டு நண்பர்கள் போதிய புள்ளிகள் பெற்றுள்ளனர். மற்றும் இரண்டு நண்பர்கள் குமாரைவிடவும் குறைவாக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

- மேற்படி நிகழ்வை வகுப்பின் மூவர் கொண்ட குழுவுக்கு அளித்து கலந்துரையாட வாய்ப்பு வழங்குங்கள்.
- குமார் எத்தகைய நடவடிக்கையை எடுப்பார்? குமார் எடுக்கக்கூடிய மாற்று செயற்பாடுகள் மூன்றும், ஒவ்வொரு குழுவின் மூலமும் எழுதச் செய்யுங்கள்.
- மாணவர்கள் எழுதிய கருத்துக்களை ஒவ்வொரு குழுவின் மூலம் சமர்ப்பிக்கச் செய்யுங்கள்.
- மாணவர் முன்வைத்த கருத்துக்களின் பொருத்தப்பாடு பற்றி கலந்துரையாடுங்கள்.

**கவனத்திற்கொள்ள வேண்டியன/ கலந்துரையாடப்பட வேண்டியன,**

- ஒவ்வொருவரினதும் கற்றல் பெறுபேறுகள் சமமானவையல்ல, அவ்வாறிருத்தல் ஒரு சாதாரண நிகழ்வாகும்.
- கற்பதற்கு பல்வேறு வழிகள் உள.
- கற்பதற்கு பல்வேறு வழிகளையும், உத்திகளையும் உபயோகிக்கலாம்.
- பல்கலைக்கழகம் செல்ல முடியாது போதல் வாழ்வின் இலட்சியங்களை அடைய தடையாகமாட்டாது.
- தேவையிருப்பின் வேறு வழிகளினூடாக பல்கலைக்கழகப்பட்டமொன்றைப் பெறலாம்.
- உபாய ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் சிந்தித்துச் செயலாற்றுவதன் மூலம் வாழ்வின் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக விடை காணலாம்.
- எதிர்கால இலக்குகளைத் தீர்மானிக்கும் போது நெகிழும் தன்மையுடைய தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். மேலும் மாற்று இலக்குகளுக்கு வசதி வாய்ப்புக்களை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 4.2.2.1

- பின்வரும் பிரச்சினையை மாணவன் ஒருவன் மூலம் வகுப்பில் சமர்ப்பிக்கவும்.

ஒரு மனிதன் ஆற்றைக்கடப்பதற்கு வந்தான். அவனிடம் புலியொன்றும், ஆடொன்றும் கீரைக்கட்டொன்றும் இருந்தன. படகின் மூலம் அக்கரை செல்ல அவன் எதிர்பார்த்தான் படகில் மனிதனுக்கும் ஆடு, புலி, கீரைக்கட்டு ஆகியவற்றில் ஒன்றுக்கு மாத்திரமே இடமிருந்தது. படகில் செல்லும் போதோ கரையை கடக்கும் போதோ புலி, ஆட்டையோ ஆடு, கீரைக்கட்டையோ உண்ணமுடியும். எவருக்கும் பாதிப்பேற்படாதவாறு இவற்றை அக்கரைக்கு எடுத்துச் செல்வது எப்படி?

## இணைப்பு 4.2.2.2

- பின்வரும் தோற்றப்பாட்டை நன்கு கண்டாய்ந்து மேற்படி தகவல்களின், தரவுகளின் அடிப்படையில் உங்கள் முடிவுகளை அறிவியுங்கள்.

நேரம் பி.ப. 1.30 அளவிருக்கும் ஹரிகரன் தனியாக இருந்தான். அவன் தனக்கு மிகவும் பிடித்த தொலைக்காட்சி காட்டூன் நிகழ்ச்சிகளை பார்த்துக்கொண்டிருந்தான். இடைவேளையின்போது வீட்டுக்கு வெளியே வந்த ஹரிகரன் அருகிலுள்ள வீடொன்றில் தீப்பற்றி எரிவதைக் கண்டான். தனது நண்பன் சுபாஸின் வீடும் அத்திசையிலிருந்தமையால் அவன் மேலும் குழப்பமடைந்தான். மேலும் அவதானித்த போது அயலவர் ஒருவரும் இல்லாதிருப்பதையும் கண்ணுற்றான். இன்னும் சிறிது நேரத்தில் தனது வீடு உட்பட எல்லா இடங்களுக்கும் பரவும் என அவன் கண்டான். இதே சமயம் தொலைக்காட்சி நிகழ்ச்சி மீண்டும் ஆரம்பமாகியிருந்தது.

1. நீங்கள் ஹரிகரனாயின் நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை முறையே எழுதுங்கள்.
    1.
    2.
    3.
    4.
    5.

2. இந்நிகழ்வை உங்கள் விருப்பப்படித் தொடருங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# 5.0 சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.

## அறிமுகம் பாடவேளைகள் 06

நாளாந்த வாழ்வில் பல்வேறுபட்ட நபர்களுடன் நாம் பழகுகின்றோம். அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது ஏனையோருடன் நேச சுபாவத்துடனும் ஒத்துழைப்புடனும் செயற்பட முடியுமாயின் அவர்களுக்கும் எமக்குமிடையே தோன்றும் உறவு, சிறப்பானதும் மகிழ்ச்சிகரமானதுமாக அமையும். அவ்வாறான தொடர்புகள் சீரான ஆளிடைத்தொடர்புகள் என நாம் அழைக்கின்றோம். அவ்வாறான இணக்கமான ஆளிடைத்தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு நாம் வளர்த்துக்கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பலவாகும். நட்புறவுடன் உரையாடல், நன்கு செவிமடுத்தல், பண்பான வார்த்தைப் பிரயோகம், ஏனையோரை மதித்து நடத்தல் ஆகியன அவற்றுள் சிலவாகும். அத்தகைய தேர்ச்சிகள் பிள்ளையினுள் வளர்த்து சிறப்பான ஆளிடைத் தொடர்புகளை பேணக்கூடிய நற்பிரசைகளை உருவாக்கல் இந்த அத்தியாயத்தின் எதிர்ப்பார்ப்பாகும்.

## 5.1 வெற்றிகரமான வாழ்க்கையை நோக்காகக் கொண்டு சிறப்பான ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.

**விடய உள்ளடக்கம்:-** தனியாக வாழும் ஒருவர் முகங்கொடுக்கும் சிரமங்கள்.

**தேர்ச்சி மட்டம் :-**

- கோளமயமடைதலினுள் ஒருவருக்கு தனித்து வாழல் சிரமமானது.
- ஒவ்வொரு நபரையும் சூழ்ந்து அமைந்துள்ள பல்வேறு சமூக குழுக்கள் உள்ளன. (குடும்பம், பாடசாலை, சமூகம் என்ற அடிப்படையில்)
- அத்தகைய சமூகக் குழுக்களுக்கு இசைவாக்கமடைய முடியாத நபர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவார்கள்.
- சீரான நபரிடைத் தொடர்புகளைப் பேணுவதன் மூலம் அவ்வாறான சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.
- பெரும்பாலானோரின் பங்களிப்புடனேயே நபரின் அபிவிருத்தி ஏற்படுகின்றது.
- வாழ்க்கையில் பல்வேறு வாழ்க்கைப் பருவங்களைக் கடக்க நேரிடும்.
- ஒவ்வொரு பருவத்தின் போதும் பலதரப்பட்ட நபர்களைச் சந்திக்க நேரிடும் (உதா: வீட்டில், பாடசாலையில்)
- பல்வேறு நபர்களின் துணையுடன் கட்டியெழுப்பப்படுகின்ற சீரான ஆளிடைத் தொடர்புகள், நபரின் அபிவிருத்திக்கு காரணமாகும்.
- அவ்வாறானவர்களுடன் பழகுவதற்காக நம்முள் வளர்த்துக் கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பலவாகும்.
  (உதா: ஏனையோரின் கருத்துக்களை மதித்தல், செவிமடுத்தல், உணர்வுபூர்வமாகச் செயற்படல், பரிவுணர்வு, அர்ப்பணிப்பு போன்றன)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- வாழ்க்கைப் பயணத்தை இலகுவாக்கும் சீரான ஆளிடைத் தொடர்புகள்.
  - சீரான ஆளிடைத்தொடர்புகளைப் பேணத்தேவையான தேர்ச்சிகளை இனங்காணல்.
    (உதா: பொறுமை, ஏனையோரின் கருத்துக்கு மதிப்பளித்தல், செவிமடுத்தல், பண்பான வார்ததைப் பிரயோகம் போன்ற)
  - மேற்படி பண்புகளை வளர்ப்பதன் மூலம், நபரினுள் கட்டியெழுப்பப்படுகின்ற சுயகட்டுப்பாடு சீரான ஆளிடைத் தொடர்புகளைப் பேணக் காரணமாகின்றது.
  - மேற்படி நற்பண்புகளை வளர்த்துக் கொள்வதன் மூலம், நாளாந்த வாழ்வில் பல்வேறு நபர்களுடனும் சீரான ஆளிடைத் தொடர்பைப் பேணுவர்.
  - அத்தொடர்புகள் காரணமாக வாழ்க்கைப் பயணம் இலகுவாகின்றது. சமாதானமான சமூகச் சூழல் உருவாக இது காரணமாகின்றது.

- சீரான ஆளிடைத் தொடர்புகளைப் பேணும் பல்வேறு முறைகள்.
  - பலவிதமான நபர்களுடனும் பேணும் தொடர்புகளை நீண்ட காலத்திற்குப் பேணுவது முக்கியமானதாகும்.
  - நட்புறவான புன்னகை, நட்புறவான பேச்சு வார்த்தை, வாழ்த்துக் கூறல், பல்வேறு விழாக்களுக்கும் அழைப்பு விடுத்தல், சந்தித்தல். சீரான ஆளிடைத்தொடர்பைப் பேணும் பல்வேறு முறைகளாகும்.
  - பல்வேறு நபர்களுடனும் கட்டியெழுப்பப்படுகின்ற நட்புறவான தன்மை, அன்றாட வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக நடத்தவும், வாழ்க்கைப் பயணத்தை ஒளிமயமாகக்கவும் காரணமாகின்றது.

**தேர்ச்சி மட்டம் :-**

## 5.2 முரண்பாடுகளைத் தவிர்க்கவும் தீர்க்கவும் சீரான ஆளிடைத் தொடர்புகள் உபயோகிப்பார்.

- முரண்பாடுகள் தவிர்க்க முடியாதவையும் இயற்கையானவையும் ஆகும்.
- முரண்பாடுகள் தோன்ற பல்வேறு காரணங்கள் ஏதுவாகின்றன.
- ஆரம்பத்திலேயே முரண்பாட்டை இனங்காண்பதன் மூலம் முரண்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம்.
- முரண்பாடுகள் நீடிக்கும் போது பலவகையான பாதிப்புக்கள் ஏற்படும்.
- முரண்பாடுகள் அற்று வாழத் தேவையான தேர்ச்சிகளை வீட்டிலும் பாடசாலையிலும் பெற வேண்டும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- சீரான ஆளிடைத் தொடர்புகள் முரண்பாட்டைக் குறைக்கும்.
  - நாளாந்த வாழ்வில் பல்வேறு நபர்களையும் சந்திக்க நேரிடுகின்றது. அவர்களுள் பல்வேறு வேற்றுமைகள் காணப்படுகின்றன.
  - அவ்வேற்றுமைகளுக்கு மத்தியில் முரண்பாடுகளின்றி மகிழ்ச்சியாக வாழ்வது அவசியமாகும்.
  - இதற்கு சீரான ஆளிடைத்தொடர்புகள் உதவும்.
  - வேறுபாடுகளைச் சகித்தல், மதிப்பளித்தல், கனம் பண்ணுதல் போன்றன ஆளிடைத் தொடர்புகளை வலிமையாகக்கக் கூடியதும் முரண்பாடுகளை குறைக்கக் கூடியதுமான உத்திகளாகும்.

**தேர்ச்சி 5.0** : சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.

**தேர்ச்சி மட்டம்** : வெற்றிகரமான வாழ்க்கைக்கு சிறந்த ஆளிடைத் தொடர்புகளை மேற்கொள்வார்.

**செயற்பாடு 5.1.1** : "சீரான தொடர்புகள் வாழ்க்கை பயணத்தின் அதி'டமாகும்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 5.1.1.1
- இணைப்பு 5.1.1.2
- இணைப்பு 5.1.1.3

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 5.1.1.1** :

- இணைப்பு 5.1.1.1 ஐ மாணவர்களுக்கு விநியோகியுங்கள்.
- மாணவரை செயற்பாட்டிலீடுபடுத்துங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தியும் கலந்துரையாடலை வழிப்படுத்துங்கள்.

> - எமது வாழ்க்கைப்பயணத்தில் நாம் பல்வேறு பருவங்களைக் கடக்கின்றோம்.
> - மேற்படி ஒவ்வொரு பருவத்தின் போதும் பல்வேறு நபர்களுடன் தொடர்புகளைப் பேண நேரிடும்.
> - தமது முன்னேற்றத்துக்கு இதுவரை உதவி செய்த பலர் உள்ளனர்.
> - அவர்களது பங்களிப்பினாலேயே நாம் நலமாக வாழ்கின்றோம்.
> - அவர்களுக்கும் எம்மால் ஆற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் அவசியமாகும். அவருடன் சீரான நபரிடைத் தொடர்புகளைப் பேணுவதும் முக்கியமாகும்.

(10 நிமிடங்கள்)

**படி 5.1.1.2** :

- வகுப்பு மாணவருக்கு இணைப்பு 5.1.1.2 ஐயும் 5.1.1.3 ஐயும் பகிர்ந்தளியுங்கள்.
- அவற்றறைப் பூரணப்படுத்த அறிவுரை கூறுங்கள்.

(10 நிமிடங்கள்)

**படி 5.1.1.3** :

- மாணவர்களின் விடைகளை வகுப்பில் சமர்ப்பியுங்கள்.
- எழுமாற்றாக மாணவரினால் எழுதப்பட்டவற்றை வகுப்பில் சமர்ப்பியுங்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

> - நாம் நலமாக வாழப் பலர் பங்களிப்புச் செய்துள்ளனர்.
> - அவர்களது பங்ளிப்பு கிடைக்காது போயிருப்பின் எமது வாழ்க்கை சிரமமானதாக அமைந்திருக்கும்.
> - எமக்கு உதவுபவர்களுடனும் நாம் சந்திப்பவர்களுடனும் சீரான தொடர்புகளை நாம் பேண வேண்டும்.
> - நேயமான தொடர்புகளைப் பேணுவதால் எம்முள் உயர் பண்புகள் வளர்ச்சியுறும். (இணைப்பு 03 இற்கான விடைகள் மூலம் பெறுங்கள்)
> - எமக்கு உதவுபவர்களுக்கு நாமும் மீள உதவவேண்டும்.
> - நன்றி மறத்தல் நன்றன்று

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- நபர்களுடன் நட்புறவாக பழகத் தேவையான பண்புகளைப் பெயரிடுவார்.
- தமது முன்னேற்றத்திற்கு உதவியவர்கள் பலர் உள்ளனர் என ஏற்றுக் கொண்டு கருத்துக் கூறுவர்.தமக்கு ஒப்படைக்கப்பட்ட பணியை சீராக நிறைவேற்றுவார்.
- சீரான ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.
- தனக்கு உதவியோருக்கு உதவுவார்.

## இணைப்பு 5.1.1.2

- கீழ்வரும் படங்களின் மூலம் வாழ்வில் நாம் கடக்கும் பல்வேறு பருவங்களும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. மேற்படி ஒவ்வொரு பருவத்தின்போதும், நமக்கு ஏற்படுகின்ற தொடர்புகளைப் பேணுகின்றவர்களின் பெயர்களை ஒவ்வொரு படத்தின் எதிரிலும் எழுதுங்கள்.



முதியோர்

.................................................................

.................................................................



இளைஞர்

.................................................................

.................................................................



சிறுவன்

.................................................................

.................................................................



குழந்தை

.................................................................

.................................................................

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 5.1.1.3

- நீங்கள் தரம் 7 இல் மாணவனாக இருந்ததை ஞாபகப்படுத்துங்கள். அப்போது உங்களது முன்னேற்றத்திற்கு உதவியவர்களை ஞாபகப்படுத்திப் பாருங்கள். அவர்களைக் குறிப்பிடுக.

1. **குழந்தைப்பருவம்** ..........................................................................

2. **பிள்ளைப்பருவம்** ..........................................................................

3. **வீட்டில்** ..........................................................................

4. **பாடசாலையில்** ..........................................................................

5. **அயலவர்கள்** ..........................................................................

6. **நண்பர்கள் அல்லது நண்பிகள்** ..........................................................

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 5.1.1.3

# வேலைப்படிவம்

**குழு 1**

நீங்கள் அதிகம் பழக விரும்பும் அயற் குடும்பத்தை ஞாபகப்படுத்துங்கள். அவ்வாறு ஏன் பழக விரும்புகிறீர்கள் என எழுதுங்கள்.

**குழு 2**

நீங்கள் அதிகம் பழக விரும்பும் உங்கள் உறவினர் ஒருவரை ஞாபகப்படுத்துங்கள். அவ்வாறு ஏன் அவரை விரும்புகிறீர்கள்?

**குழு 3**

நீங்கள் அதிகம் விரும்பும் ஆசிரியர் ஒருவரை ஞாபகப்படுத்துங்கள். அவ்வாறு ஏன் விரும்புகிறீர்கள் என எழுதுங்கள்.

**குழு 4**

உங்களுக்க மிக விருப்பமான நண்பனை ஞாபகப்படுத்திப் பாருங்கள். அவனை சிறந்த நண்பனாக ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 5.0** : சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.

**தேர்ச்சி மட்டம்** : வெற்றிகரமான வாழ்க்கைக்கு சிறந்த ஆளிடைத்தொடர்புகளை மெற்கொள்வார்.

**செயற்பாடு 5.1.2** : "தனிமையை விட்டு அகல்வோம். நல்லதொரு நண்பனாவோம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 5.1.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுக் கற்கை "நிசாந்தனும் கமாலும்"
- எழுதுதாள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 5.1.2.1** :

- இணைப்பு 5.1.2.1 நிகழ்வுக் கற்கையை மாணவன் ஒருவன் மூலம் வகுப்பில் முன்வையுங்கள்.
- அங்கு குறிப்பிடப்பட்டுள்ள வினாக்களுக்கான விடையைக் கேட்டறிந்தவாறு பாடத்தில் பிரவேசியுங்கள்.
- மாணவரின் துலங்கலைக் கேட்டறிந்தவாறு பின்வருவனவற்றை மேலெழச் செய்தவாறு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - யாவரும் சமூகத்தின் அங்கத்தவர்களே.
> - யாவரும் சமூகக் குழுக்களைச் சேர்ந்தவராவர்.
>   உ-ம்: வீடு, பாடசாலை, சம வயதுக் குழுக்கள்
> - எவரொருவருக்கும் தனியாகவோ, தனித்தே சமுதாயத்தில் வாழ முடியாது.
> - தமது தேவைகளை நிறைவேற்ற ஆளிடைத் தொடர்புகளைப் பேண வேண்டும்.
> - இதற்காகப் பயனுள்ள தொடர்பாடல் முறைகளை உபயோகிக்க வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 5.1.2.2** :

- எழுதுதாள்களை மாணவர் மத்தியில் விநியோகியுங்கள்.
- தனியாக வசிக்கும் ஒருவர் வாழ்வில் முகங்கொடுக்க நேரிடும் சிரமங்களைப் பட்டியற்படுத்துங்கள்.
- மேற்படி சிரமங்களைத் தவிர்ப்பதற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் யாவை எனத் தேடியறியுமாறு மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.

(10 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 5.1.2.3 :

- ஒவ்வொரு மாணவனுக்கும் தன்னைப்பற்றியும் தான் வீட்டில் வேலைகளுக்கு உதவும் விதத்தைப் பற்றிப் பேசுமாறு அறிவுரை கூறுங்கள்.
- யாவரும் மேற்படி உரைகளுக்குச் செவிமடுத்தல் அவசியம் எனக் கூறுங்கள்.
- குறித்த பேச்சின் இறுதியில் கைத்தட்டி பாராட்டுத் தெரிவிக்குமாறு கூறுங்கள்.
- ஒவ்வொருவரும் தனியாகத் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது.
- அவரது தேவைகளை நிறைவேற்ற சமுகத்தின் ஏனையோரினது உதவிகளைப் பெற வேண்டும்.
- நட்புறவுடன் செயற்படல், விரும்பப்படுபவராக இருத்தல், பண்புள்ளவராகவிருத்தல், அன்பானவராக, நல்ல நபராக ஆளிடைத் தொடர்புகளைப் பேணுபவராகச் செயற்படல்.
- ஒதுங்கி வாழ்பவருக்கு நல்ல நண்பர்கள் குறைவாகவிருப்பார்கள். அவர்களைச் சமூகத்தவர் குறைவாக மதிப்பார்.
- ஒதுங்கி வாழும் ஒருவர் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்படடிருத்தல்.
- நண்பர்களின் தொடர்பு காரணமாக சமூகத்தொடர்புகள் வளர்ச்சிடைந்து நபரிடைத் தொடர்புகள் விருத்தியடையும்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தாம் வாழும் விதத்தை விபரிப்பார்.
- ஒற்றுமையாகச் செயற்படுவதை மதித்துகருத்துக் கூறுவார்.
- நல்ல நண்பர்களுடனான தொடர்புகளை வளர்த்துக்கொள்வார்.
- ஏனையோருக்கு உதவி, ஒத்தாசை வழங்குவார்.
- பொதுசமூகச் செயற்பாடுகளில் பங்கேற்பார்.
  உ-ம்: சிரமதானம், சமய நடவடிக்கைகள்

**பின்தொடர் வேலைகள்:**

தமது குடும்பப் பணிகளுக்கு உதவும் சந்தர்ப்பங்கள் நாளேட்டில் குறித்துக் கொள்ளுங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 5.2.1.1

# நிசாந்தனும் கமாலும்

நிசாந்தனும் கமாலும் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவர்களாவார். நிசாந்தனதும் கமாலினதும் நடத்தைக் கோலங்களை ஆராயுங்கள்.

நிசாந்தன் : நிசாந்தன் தரம் 7 இல் கற்கிறான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவனது தந்தை இறந்துவிட்டார். அதிகாலையில் எழும் நிசாந்தன் தாயின் அப்பஞ்சுடும் வேலைகளில் உதவுவான். பின்னர் தனது தங்கையையும் தம்பியையும் தயார்படுத்திக் கொண்டு பாடசாலைக்கு அழைத்துச் செல்வான். வகுப்பில் நண்பர்களும் நண்பிகளும் உள்ளனர். ஊரிலும் நண்பர்கள் உள்ளனர். எப்போதும் சிரித்த முகத்துடன் இருக்கும் அவனுக்கு நண்பர்கள் பலருள்ளனர். வீட்டிலும், பாடசாலையிலும் ஊரிலும் யாவருடனும் நட்புறவாக நடந்து கொள்ளும் அவன் யாவருக்கும் உதவி ஒத்தாசை செய்வான். அவனுக்கு அதற்கு நல்ல பிரதிபலன்களும் கிடைக்கும். அண்மையில் அவனது வீட்டிற்கு நிறம் பூசப்பட்டது. அதற்கு அவனது கிராமத்து நண்பர்கள் பலரும் வகுப்பு நண்பர்கள் பலரும் உதவினர். நிசாந்தனின் நல்ல பண்புகளினால் பாடசாலையிலும் கிராமத்திலும் யாவரினதும் பாராட்டுக்களையும் பெறுவான். ஆகவே அவன் மிக்க மகிழ்ச்சியுடன் நாட்களைக் கழித்தான்.

கமால் : கமாலும் நிசாந்தனுடன் ஒரே வகுப்பில் படிக்கின்றான். அவன் தந்தை அப்பகுதியிலுள்ள ஒரு பிரபல தனவந்தவராவார். ஆகவே அவனுக்கு பணக்க்'டம் ஏதுமில்லை. அவனது பணப்பலம் காரணமாக வகுப்பில் எவருடனும் அதிகமாகப் பழக மாட்டான். நட்புறவைப் பேண மாட்டான். மிக அபூர்வமாகவே அவனது முகத்தில் சிரிப்பைக் காண முடியும். தனது தேவைகளை தனியே நிறைவேற்றிக் கொள்ள முடியும் எனச் சிந்தித்தலும் அவன் ஏனையோர் எதுவும் தெரியாதவர்கள் எனச் சிந்திக்கின்றான். எனினும் எந்த ஒரு வேலையையும் அவனால் சீராகச் செய்ய முடியாது. அவனது பேச்சிலும் எந்த ஒரு பண்பும், இணக்கமும் காணப்பட மாட்டாது. கமாலது வீட்டிற்கு அண்மையில் ஒரு விழா நடந்தது. வகுப்பு நண்பர்களையும் கிராமத்து நண்பர்கள் பலரையும் அழைத்திருந்தான். ஆயினும் ஒரு சிலரே அதற்கு வந்திருந்தனர். கமால் சோம்பேறித்தனத்தினாலும் தற்பெருமையினாலும் பாடசாலையிலும் கிராமத்திலும் யாவரினதும் வெறுப்பையும் சம்பாதித்துள்ளான்.

பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

1. படங்களுள் கமாலினதும் நிசாந்தனினதும் நடத்தையுடன் பொருந்தும் உருவம் எது?
2. நிசாந்தனின் நடத்தை பற்றி நீங்கள் என்ன கூற முடியும்?
3. கமாலின் நடத்தையில் நீங்கள் காணும் பலவீனங்கள் யாவை?
4. மேற்படி நடத்தைகள் மூலம் நீங்கள் பெறக் கூடிய முன்மாதிரி என்ன?

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 5.0** : சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.

**தேர்ச்சி மட்டம்** : வெற்றிகரமாக வாழ்வதற்குச் சிறந்த ஆளிடைத்தொடர்பை மேற்கொள்வார்.

**செயற்பாடு 5.1.3** : “வெற்றிப்பாதையில் ஒன்றாகச் செல்வோம்”

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 5.1.3.1 பிரவேசத்திற்கான படமும், வேலைப்படிவமும்
- இணைப்பு 5.1.3.2 விவரப்படிவம்
- இணைப்பு 5.1.3.3 வேலைப்படிவம்
- எழுதுதாள்

**ஆசிரியருக்கான அறிவுரைகள் :**

- இணைப்பு 5.1.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள படங்களை தனித்தனியாக அட்டைகளில் ஒட்டி வெட்டியெடுங்கள். (ஒரு படத்தின் பிரதிகள் 4 வீதம்)

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 5.1.3.1** :

- வகுப்பு மாணவர் இருவரை தனியாள் செயற்பாடுகளுக்காகவும், மூவர் வீதம் இரண்டு குழுக்களையும் 6 மாணவரை கூட்டுச் செயற்பாடுகளுக்காகவும் தேர்ந்தெடுத்து இணைப்பு 5.1.3.1 ஐ அவர்களிடம் கையளித்து செயற்பாடுகளிலீடுபடுத்துங்கள்.
- அவர்கள் செய்யும் வேலைகளை அவதானிக்க ஏனைய மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.
- மாணவரின் செயற்பாடுகளின் பின்னர் பின்வருவனவற்றை மேலெழச் செய்தவாறு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - யாதொரு வேலையையும் தனியாகச் செய்தல் சிரமமானது.
> - அதற்கு அதிக காலம் எடுக்கும்.
> - சிலர் சேர்ந்து அந்த வேலைகளை இலகுவாகவும் விரைவாகவும் செய்ய முடியும்.

(20 நிமிடங்கள்)

**படி 5.1.3.2** :

- வகுப்பை நான்கு குழுக்களாக்குங்கள்.
- இணைப்பு 5.1.3.2 விவரப்படிவத்தையும் இணைப்பு 5.1.3.3 வேலைப்படிவத்தையும் ஒரு குழுவுக்கு ஒன்று வீதம் பெற்றுக் கொடுங்கள்.
- மாணவரை செயற்பாட்டிலீடுபடுத்துங்கள்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் வழிகாட்டலை செய்யுங்கள்.

(30 நிமிடங்கள்)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 5.1.3.3 :

- குழுக்களுக்கு தமது செயற்பாடுகளை வகுப்பில் சமர்ப்பிக்கத் தேவையான நேரத்தை ஒதுக்கிக் கொடுங்கள்.
- அவ்வாறு சமர்ப்பிக்கும் சமயங்களில் ஏனைய குழுக்களின் விருத்திகரமான ஆலோசனைகளைக் கேட்டறியுங்கள்.
- சமர்ப்பித்து முடிந்த பின்னர் பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடலை நடத்துங்கள்.

| |
|---|
| • எந்த ஒரு நபருக்கும் தனியாக வாழ முடியாது.<br>• பிறந்ததிலிருந்து இறக்கும் வரை, தனித்து விடப்படும் நபர் நாதியற்றவராவார்.<br>• சீரான ஆளிடைத்தொடர்புகள் யாவருக்கும் அவசியமாகும்.<br>• சீரான ஆளிடைத் தொடர்புகள் மூலம் நபர் சார்பான விருத்தி ஏற்படும்.<br>• எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சீரான ஆளிடைத் தொடர்புகள் ஏற்படக் கூடியவாறு செயற்பட வேண்டும்.<br>• அதன் மூலம் தனக்கும் ஏனையோருக்கும் சமுதாயத்திற்கும் நற்பயன் விளையும். |

(30 நிமிடங்கள்)


**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- சீரான ஆளிடைத் தொடர்புகளின் நன்மைகளைக் கூறுவார்.
- சீரான ஆளிடைத் தொடர்புகளின் பெறுமதியை மதிப்பார்.
- பயனுள்ள ஆளிடைத்தொடர்புகளின் பயன்களைச் சமர்ப்பிப்பார்.
- ஒத்தாசையாக பயனுள்ள செயற்பாடுகளிலீடுபடுவார்.
- பயனுள்ள ஆளிடைத் தொடர்புகளை மேம்படுத்தக் கூடிய விதத்தைத் தெளிவுபடுத்துவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# இணைப்பு 5.1.3.1

**பிரவேசத்துக்கான படம்**



உங்களுக்கு/ உங்கள் குழுவிற்கு 2 நிமிட நேரம் தரப்பட்டுள்ளது கடதாசி அட்டைகளை கருத்துள்ள விதத்தில் ஒழுங்குபடுத்துவதற்காகும்.

# இணைப்பு 5.1.3.2

## தகவற்படிவம்

ஒரு மரத்தில் சுள்ளான்கள் கூட்டமொன்று வாழ்ந்து வந்தன அவை மிக ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வந்தன. சுள்ளான் குடும்பத்தில் ஒரு புதிய சுள்ளான் பிறந்தது அது மற்றைய சுள்ளான்களிலும் மாறுபட்டது. வேறு நிறத்தைத் கொண்டிருந்தது. ஆகவே கூட்டத்திலுள்ள யாவரினது கவனமும் இச் சுள்ளான் மீது திரும்பியது எல்லாச் சுள்ளான்களும் இதற்குதவின. இதனைப் பார்த்துக்கொண்டன. ஆகவே இப்புதிய சுள்ளான் சிறிது பெருமையுடன் நடந்து கொண்டது. சிறிது சிறிதாக புதிய சுள்ளான் வளர்ந்து வந்தது. சுள்ளானுடன் சுள்ளானின் குணங்களும் வளர்ந்து வந்தது. தான் மற்றைய சுள்ளான்களிலும் பார்க்க நிறத்தால் வேறு பட்டிருந்தமையால் அது பெருமையுடன் தனியாக இருந்தது. தனது பொருட்களைத் தனியாக வைத்துக் கொண்டது. அவற்றை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ள விரும்பவிலலை. ஒரு நாள் நல்ல வேளையொன்று நடந்துது. பெரும் காற்றடித்து சுள்ளானின் கூடு உடைந்து போனது. யாவரும் இதற்காக வருந்தினர். ஆனால் புதிய சுள்ளானோ அப்படி நினைக்கவில்லை. அது நடந்தது பற்றி பெரிதும் மகிழ்ந்தது. இது மிக நல்லது இதன் பிறகு நிம்மதியாக வாழ முடியும் என அது நினைத்தது. நான் தனியாக கூடு கட்டிக் கொண்டு வாழ்வேன் என்றது. திடீரென வானம் இருண்டது மழை மேகங்கள் ஒன்று குவிய ஆரம்பித்தது. சுள்ளான்கள்



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

சுறுசுறுப்பாக புதிய கூடுகட்டும் முயற்சியில் இறங்கின. சில இலைகளை வளைத்துப்பிடித்தன மற்றும் அவற்றை ஒட்டின. ஏனைய சுள்ளான்கள் நிலத்தில் விழுந்த தமது பொருட்களை தேடிச் சேகரித்து எடுத்து வரலாயின. புதிய சுள்ளானோ இவற்றில் கலந்து கொள்ளவில்லை. அது தனியாக ஒரு கூடு கட்டமுனைந்தது. இலைகளை ஒன்று சேர்க்க முயன்றது. பெரிதும் சிரமப்பட்ட பொதும் அதனால் அவ்வாறு செய்ய முடியவில்லை. கடும் மழையும் ஆரம்பமாயிற்று. புதிய சுள்ளான் மழையில் நனைந்தபடி இலையில் தொங்கிக் கொண்டிருந்தது திடீரென அந்த இலை ஒடிந்து நிலத்தில் விழுந்தது. இலை சருகுகளுக்கிடையே சிக்கிக்கொண்ட சுள்ளான் வெளியே வரமுடியாது தத்தளித்தது. மழை நீரை குடித்து அதன் வயிறும் உப்பிப்போயிருந்தது. ஏனைய சுள்ளான்களோ தமது கூட்டில் மகிழ்ச்சியாக உணவு அருந்திக் கொண்டும் குளிர் காய்ந்து கொண்டும் மகிழ்ச்சியாக நேரத்தை கழித்தன. மழை படிப்படியாக ஓய்ந்தது. புதிய சுள்ளானையே அதன் வீட்டையோ காணாத சுள்ளான்கள் குழப்பமடைந்தன. அவை அதைத்தேட ஆரம்பித்தன. இலைச் சருகுகளுக்கிடையே மயங்கிக் கிடந்த அதனை வீட்டுக்குத் தூக்கி வந்தன சில உடனடியாக முதலுதவி வழங்கின. உலர்ந்த துவாயை அதன் முதுகில் வைத்து அழுத்த வயிற்றிலிருந்த நீர் சிறிது சிறிதாக வெளியேறியது தாய் சுள்ளான் சுடச் சுடக் கோப்பி தயாரித்துக்கொடுத்தது. புதிய சுள்ளான் படிப்படியாக சாதாரண நிலைக்குத் திரும்பியது. தனியாகச் செயற்பட்டமையால் நேர்ந்த அவலத்தைப் புரிந்து கொண்டது. உண்மையை விளங்கிக் கொண்ட அது ஏனைய சுள்ளான்களிடம் மன்னிப்புக்கேட்டது. அவற்றுடன் ஒற்றமையாக சேர்ந்து வாழத்தீர்மானித்தது.

**(தொலைக்காட்சி காட்டூன் நிகழ்ச்சியொன்றைத் தழுவியது.)**

## இணைப்பு 5.1.3.3

இணைப்பின் துணையுடன் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. ஆளிடைத் தொடர்புகள் என்றால் என்ன?
2. ஒருவர் தனியாக வாழும் போது அவர் முகங்கொடுக்க நேரிடுகின்ற பிரச்சினையான சந்தர்ப்பங்கள் யாவை?
3. சீரான ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவதனால், தனக்கும் ஏனையோருக்கும் கிடைக்கும் பயன்கள் யாவை?
4. நீங்கள் புதிய சுள்ளானாயிருப்பின் இவ்வாறான நிலைமையில் எவ்வாறு செயற்படுவீர்கள்?
5. சுள்ளான் கூட்டம் மழையிலிருந்து எப்படித் தப்பியது?
6. குழுவாகச் செயற்படுவதனால் கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 5.0** : சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.

**தேர்ச்சி மட்டம்** : முரண்பாட்டுத் தீர்வு, தவிர்ப்பு ஆகியவற்றுக்குச் சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பயன்படுத்துவார்.

**செயற்பாடு 5.2.1** : பலவண்ண மலர்கள்

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 5.2.1.1, இணைப்பு 5.2.1.2
- தாள்
- குண்டூசி
- பலகை
- மார்க்கர் பேனா

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 5.2.1.1** :

- இணைப்பு 5.2.1.1 இல் எழுதப்பட்டுள்ள கவிதையையும் அதன் கருத்தையும் பிரிஸ்டல் அட்டையில் எழுதி வகுப்பில் காட்டுங்கள்.
- பொருத்தமான மாணவன் மூலம் அதனை வகுப்பில்காட்சிப் படுத்துங்கள்.
- யாவரும் ஒன்றாகப் பாடச் செய்யுங்கள்.
- கருத்தை முன்வைத்து சிறிதனை கிளர்ச்சி ஏற்படக் கூடியவாறு கலந்துரையாடுங்கள்
- ஒத்த வயதினருக்கு மத்தியில் நிலவக்கூடிய முரண்பாட்டுக்கு அடிப்படையாக அமையக் கூடிய பண்புகளை விசாரித்தறியுங்கள்.

> - மனிதர்களிடம் நற்குணங்களும் தீய குணங்களும் உள்ளன.
> - ஒரு துர்குணமாவது இல்லாத ஒருவரைக் காண்பது அறிதாகும்.
> - ஆகவே தம்முடைய நற்குணங்களைப் பற்றி திருப்தி யடையும் அதே சமயம் துர்குணங்களைக் குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.
> - அவ்வாறு செய்ய ஏனையோருக்கும் உதவ வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 5.1.3.2** :

- யாவருக்கும் கடதாசித்தாள் ஒன்று வீதம் கொடுங்கள். (மாணவரின் எண்ணிக்கைக்கு ஒன்று குறைவாக)
- எழுதுதாளின் பந்தியைக் கிழித்து உறை போன்று தயாரித்து சட்டையின் பின் புறத்தில் குண்டூசியினால் குத்திக் கொள்ள ஒருவருக்கொருவர் உதவுமாறு கூறுங்கள்.
- தமக்குத் தரப்பட்ட கடதாசித் துண்டில் தமது வகுப்பு மாணவன் ஒருவனின் பெயரையும் அவனது நற்குணத்தையும் அதனை விருத்தி செய்யும் நடவடிக்கையையும் எழுதி பெயர் மாத்திரம் வெளியே தெரியக் கூடியவாறு மடித்துப்பிடித்துக்கொள்ளச் செய்யுங்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**படி 5.2.1.3** :

- முதலில் சரியாக எழுதி முடித்த மாணவரை கையை உயர்த்துமாறு கூறுங்கள்.
- செயலை ஆரம்பிக்க சமிக்ஞை கொடுங்கள்.
- செயற்பாடு முடிவடைந்த பின்னர், தமது உறையில் இடப்பட்டுள்ள தாளை எடுத்து வாசிக்குமாறு கூறுங்கள்.
- சிறு குழுவாக ஒன்று சேர்த்து சமவயதினர் மத்தியில் காணப்படும் முரண்பாடுகளுக்கு காரணமாகும். துர்க்குணங்களின் பட்டியலைத் தயாரித்து அதனைத் தவிரப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைக் குறித்துக் கொள்ள அறிவுறுத்துங்கள்.
- குழுச் சமர்ப்பித்தலுக்கு வாய்ப்பளியுங்கள்.
- சமர்ப்பித்த குழுவிற்கு முதலில் குறைநிரப்பு செய்ய வாய்ப்பு வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் அபிவிருத்திகரமான ஆலோசனைகளை கேட்டறியுங்கள். பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடலை நடத்துங்கள்.

| |
|---|
| • எல்லோரிடமும் குறைபாடுகள் இருக்கக்கூடும்.<br>• சில துர்க்குணங்களினால் முரண்பாடுகள் ஏற்படும்.<br>• ஏனையோரிடம் மாத்திரமின்றி எம்மிடமும் குறைபாடுகள் இருக்கக் கூடும்.<br>• அது தொடர்பாக அதைரியமடையாது குறைபாடுகளைத் தவிர்க்கும் செயற்பாடுகளிலீடுபட ஒருவருக்கொருவர் உதவ வேண்டும்.<br>• தம்முள்ளும் ஏனையோரிடமும் குறைபாடுகள் இருக்கக் கூடுமென்பது தெளிவானவுடன், நபரின் அடையாளம் பற்றி புதிய கண்ணோட்டம் ஆரம்பிக்கும்.<br>• ஏனையோரின் குறைபாடுகளைக் காணும்போது தமக்கு கோபம் ஏற்படுவது போன்ற விளைவுகள் குறைவடையவும் இக்கண்ணோட்டம் உதவும்.<br>• வேற்றுமைகலுள்ள வனப்பற்றி உறுத்துணர்ச்சி இருப்பதால் பல்வேறு முரண்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும். |

(30 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- மனிதருள் நற்குணங்கள் மாத்திரமல்லாது துர்க்குணங்களும் இருக்கக்கூடும் எனக் கூறுவார்.
- ஏனையோரின் நற்பண்புகளை காண்பதனாலும், மதிப்பதனாலும் துர்க்குணங்களை காணும்போது எழும் கோபம் குறையும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- ஏனையோரின் நற்குணங்களைப் பாராட்டுவார்.
- தனது குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முயற்சிக்கும் அதேச சமயம் ஏனையோருக்கு அவ்வாறு செய்ய உதவுவார். அதற்கான தனது விருப்பத்தை வெளிக் காட்டுவார்.
- ஏனையோரின் கருத்துக்களை மதிப்பார்.

## இணைப்பு 5.2.1.1

**பிரவேசத்துக்கான படம்**

"மனிதர்களிடம் நற்குணங்கள் போன்றே தீய குணங்களும் உள்ளன. குறைபாடற்றவர் எவரும் உலகில் தோன்றியதில்லை. மிகவும் மிருதுவான இதழ்களையும் தேன் நிரம்பியதுமான தாமரையின் தண்டும் சொரசொரப்பானதாகும்."

## இணைப்பு 5.2.1.2

### கண்டாய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- பூங்கொத்தில் பலவர்ண பூக்கள் உள்ளன. அவை மிக அழகானவை.
- உங்கள் வகுப்பு மாணவரிடம் காணப்படுகின்ற குணங்கள் பற்றிக் கவனம் செலுத்துவோம்.
- கடதாசித் துண்டுகளில் மாணவரின் பெயர், முன்னேற்றப்பட வேண்டும் என நீங்கள் கருதும் பண்பு அதற்கான நடவடிக்கை ஆகியன பற்றி எழுதுங்கள்.
- பெயர் மாத்திரம் வெளியே தெரியக்கூடியவாறு தாளை மடித்து தயாரித்துக் கொள்ளுங்கள்.
- மற்றொரு தாளை உறைபோன்று மடித்து அதனை குண்டூசியினால் நண்பனின் சட்டையின் முதுகுப்புறத்தில் குத்தி விடுங்கள்.
- ஆசிரியரின் வழிகாட்டலின்படி வாகனம்/ பறவை போன்று நடித்துச் சென்று பாடலை பாடியவாறு நண்பனின் முதுகிலுள்ள பையில் உங்கள் கையிலுள்ள விபரம் எழுதப்பட்ட தாளை இடுங்கள்.
- தமது கையிலுள்ள கடதாசிகளை முதலில் முடிக்கும் மாணவன் வெற்றிபெற்றவனாவான். தனது கையை உயர்த்தி ஏனையோருக்கு அதனைத் தெரியப்படுத்தலாம்.
- தமது முதுகிலுள்ள கடதாசித்துண்டுகளை எண்ணிய பின்னர் அவற்றை வாசியுங்கள்.
- தம்முள் வளர்க்கப்பட வேண்டும் என ஏனையோர் எதிர்பார்க்கும் பண்புகளையும் சிந்தித்துப்பாருங்கள். அவற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி 5.0** : சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார்.

**தேர்ச்சி மட்டம்** :

**செயற்பாடு 5.2.2** : "நட்புறவாக நடந்து நிம்மதியைப் பெறுவோம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 5.2.2.1 இன் கேலிச்சித்திரம்
- இணைப்பு 5.2.2.2, 5.2.2.3 வேலைப்படிவம்
- ஏ4 தாள்
- பெல்ட் பேனாக்கள்
- கடதாசிக்கீலம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 5.2.2.1** :

- இணைப்பு 5.2.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கேலிச்சித்திரத்தை தேர்ந்தெடுத்த நான்கு மாணவர் மூலம் பாத்திரமேற்று நடித்துக்காட்டச் செய்யுங்கள்.
- அங்கு குறிப்பிடப்படும் நிகழ்வு மோதலை உருவாக்க ஏதுவாகும் விதத்தைக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடுங்கள்.

> - நாம் அக்கறை காட்டாது விடும் அற்ப விடயங்கள் கூட மோதலுக்குக் காரணமாகலாம்.
> - நமது வார்த்தைகள், ஏனையோருக்குச் செவிமடுக்காமை, பண்பாக நடக்காமை, நபரின் கௌரவத்திற்கு பங்கம் ஏற்படுத்தல் ஆகியன மோதல் ஏற்படுத்தக் கூடிய மற்றும் சில விடயங்களாகும்.
> - சீரான ஆளிடைத் தொடர்புகள் மூலம் மோதல்களை குறைந்தளவாக்கலாம்.

(10 நிமிடங்கள்)

**படி 5.2.2.2** :

- எல்லா மாணவருக்கும் ஒரு வேலைப்படிவம் வீதம் பெற்றுக் கொடுங்கள்.
- வேலைப்படிவத்தை நுணுகி அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
- அவதானிப்பின் பின்னர் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 5.2.2.3** :

- செயற்பாடு முடிவடைந்த பின்னர் தனக்கு அருகிலுள்ள நண்பருடன் அதனை அவதானிப்பதற்கென பரிமாறிக் கொள்ளுங்கள்.
- வேலைப் படிவத்தைப் பரிமாறிக்கொண்டு ஆராய்ந்ததன்பின்னர், வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- அங்கு காணப்படுகின்ற சிறப்பான சந்தர்ப்பங்களையிட்டு உரையாடுங்கள். பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடலை நடத்துங்கள்.

| |
|---|
| • எமது நாளாந்த வாழ்வில் நாம் பல்வேறு வித்தியாசமானவர் களுடன் பழகுகின்றோம், செயற்படுகின்றோம்.<br>• இவ்வாறான வேறுபாடுகளிடையே மோதல்களின்றி சமாதானமாக செயற்பட நாம் பயில வேண்டும்.<br>• அதற்காக சீரான ஆளிடைத்தொடர்புகள் பேணப்பட வேண்டும்.<br>• புன் சிரிப்பு, செவிமடுத்தல், ஏனையோருக்கு மதிப்பளித்தல் பண்பான பேச்சு ஏனையோரின் கருத்துக்களை ஏற்றல் ஆகிய பண்புகளினால் ஆளிடைத்தொடர்புகளை வளர்க்க முடியும்.<br>• சீரான ஆளிடைத்தொடர்புகளை வளர்த்துக் கொள்வதன் மூலம், வாழ்க்கைப் பயணம் இலகுவாகும். |


(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- மோதல்கள் ஏற்படக் காரணம் கூறுவார்.
- சுமுகமாக செயற்படல் மூலம் மோதல்களை குறைந்தளவாக்கிக் கொள்ள முடியும் என ஏற்றுக் கொள்வார்.
- ஆளிடைத் தொடர்புகளை கட்டியெழுப்பக்கூடிய விதத்தை எழுதிக்காட்டுவார்.
- மோதல்களின்றி செயற்படத்தேவையான பண்புகளை விருத்தி செய்து கொள்வார்.
- மோதல்களை குறைந்தளவாக்கும் வகையில் செயற்படுவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 5.2.2.1



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 5.2.1.2

சீரான ஆளிடைத் தொடர்புகள் பேணாமையால் நீங்கள் முகங்கொடுக்க நேரிட்ட முரண்பாட்டு நிலைமையை ஞாபகப்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடையெழுதுங்கள்.

| மோதலுக்கு முகங்கொடுத்த சந்தர்ப்பம் | நீங்கள் நினைப்பதை அல்லது உணருவதை எழுதுங்கள். |
|---|---|
| 1. மோதலுக்கு காரணமாகிய விடயம்<br>2. யாருடன் மோதல் ஏற்பட்டது.<br>3. அச்சந்தர்ப்பத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள்<br>4. நீங்கள் முகங்கொடுத்த மோதல் நிலையின் போது நீங்கள் யாராகக் கருதப்பட்டீர்கள்.<br>• மோதலை ஏற்படுத்தியவராக<br>• மோதலுக்கு முகங்கொடுத்தவராக<br>5. அம்மோதலைத் தவிர்க்க உங்களால் என்ன செய்ய முடிந்தது?<br>6. அவ்வாறான மோதலை ஏற்படுத்தாதிருக்க நீங்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கை என்ன?<br>7. நபர்களுடன் மோதல்களின்றி நடந்துகொள்ள நீங்கள் பின்பற்ற வேண்டியதெனக் கருதும் நடவடிக்கைகளை விதந்துரையுங்கள். | |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# வாழ்க்கைத்தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்

# ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

# பகுதி II - குடியுரிமைக்கல்வி

## 7.1 எமது குடும்பம்

## அறிமுகம்

சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பமாகும். பல குடும்ப அலகுகள் இணைந்து சமூகம் உருவாகும். குடும்ப அலகுகளின் பலத்தில் சமூகத்தின் பலம் தங்கியுள்ளது. ஒருவர் முதன் முதல் அங்கத்துவம் பெறுவதும் நீண்டகாலம் அங்கத்தவராக இருந்தும் தனியார் விருத்தியில் செல்வாக்குச் செலுத்துவதுமான சமூக அலகு குடும்பமாகும். சீரான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் சிறந்த சூழலை உருவாக்குவது குடும்பம் எனும் சமூக அலகுகாகும். பல்வேறு சமூகப் பொருளாதார காரணிகளின் செல்வாக்கு காரணமாக துரிதமாக மாற்றமடையும் உலகில் குடும்ப அலகும் பல சவால்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. அங்கத்தினரிடையே தொடர்புகள் மட்டுப்படுத்தல், ஓய்வு குறைதல், பெற்றோர் பாதுகாப்பு அற்றுப்போதல், இந்நிலைகளை உதாரணங்களாகக் காட்டலாம். இத்தகையதொரு சூழலில் குடும்பத்தின் முக்கியத்துவம், குடும்ப வாழ்க்கை மூலம் அனுபவங்களைப் பெறும் முக்கிய சமூகப் பெறுமானங்கள், குடும்ப உறுப்பினர்கள் என்ற வகையில் ஆற்ற வேண்டிய கடமைகள், பொறுப்புகள் அயற் குடும்ப அலகுகளுடன் இடைத்தொடர்பைப் பேண வேண்டியதன் முக்கியத்துவம் ஆகியன தொடர்பான விளக்கம் இவ்வலகு மூலம் வழங்கப்பட எதிர்பாரக்கப்படுகின்றது. மேலும் அவ்வாற்றல்களை நடைமுறையில் பயன்படுத்தும் திறனை விருத்தி செய்வதும் இவ்வலகைக் கற்பதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகிறது. செயல் ரீதியான கற்றல் வாய்ப்புகளை உருவாக்கி இவ்வலகைக் கற்க வசதிகள் செய்வதன் மூலம் சமூகத்தின் சீரான நிலவுகைக்கு உதவி தேர்ச்சிகளை மாணவர்களிடம் விருத்தி செய்யும் வாய்ப்புக் கிடைக்கும்.

### 7.1 குடும்பம்

**தேர்ச்சி** :- கடமைகள், பொறுப்புகளை நிறைவேற்றுவதன் மூலம் குடும்ப உறுப் பினர்களிடையே சிறந்த இடைத் தொடர்பைக் கட்டியெழுப்புவார்.

**தேர்ச்சி மட்டம்** :-

- சமூகத்தின் மிகச்சிறியதும் முக்கியமானதுமான அலகு என்ற வகையில் குடும்பத்தை இனங்கண்டு ஒரு நல்ல அங்கத்தினராக நிரந்தரமான குடும்ப அலகை உருவாக்க முன்வருவார்.
- குடும்பத்துக்கும் அயலவருக்கும் இடையிலான பரஸ்பர உறவை உறுதிப்படுத்தி ஒத்துழைப்புடன் வாழப்பழகுவார்.
- குடும்பத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் தனது உரிமைகளை அனுபவித்துக் கடமைகளை நிறைவேற்றி ஒழுக்கத்துடன் வாழ்வதற்குத் தேவையான மனிதப் பண்புகளை விருத்தி செய்து கொள்வார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**பாட உள்ளடக்கம் :**

## 7.1.1 குடும்பம் அறிமுகம்

- உறவை அடிப்படையாகக் கொண்டு உருவான மிகச்சிறிய சமூக அலகு குடும்பம் ஆகும்.
- குடும்ப அலகுகள் இணைந்து சமூகம் உருவாகும்.

**குடும்பம் தொடர்பான எளிமையான வரைவிலக்கணங்கள்.**

*“குடும்பம் என்பது கணவன் மனைவியுடன் கூடிய ஒரு கூட்டாகவும், பிள்ளைகள் உள்ள அல்லது இல்லாத நீண்ட காலம் நிலைக்கும் தாய், தந்தை அல்லது பிள்ளைகளையும் கொண்ட ஒரு கூட்டாகும்.”*

(Nimcoff - 1947)

*“பொருளாதார ரீதியிலும் பிள்ளைகளை வளர்ப்பதிலும் ஒத்துழைப்புடன் கருமமாற்றுவதும் அனைவரும் அல்லது அதிகமானோர் பொது இல்லமொன்றில் வாழ்வதுமான ஒரு திருமண சோடி அல்லது வயது வந்த உறவினர் குழுவாகும்”*

(கதலின் கல்ப் 1953)
(Cathaleen Gulff)


*“பொருளாதார ஒத்துழைப்பு, பொது வாழ்விடம், பிறப்பு, கலாசாரம் என்பவற்றால் ஒன்றிணைந்த சமூக அலகு”*

(G.P. Murdock 1949)
(ஜீ.பீ. மர்டெக், அமெரிக்கா)

## 7.1.2 குடும்ப வகைகள்

குடும்பத்தின் அங்கத்துவத்தைப் பொறுத்து குடும்பம் இருவகைப்படும்.

- அணுக்குடும்பம்
- கூட்டுக்குடும்பம்






Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**அணுக்குடும்பத்தின் இயல்பு**

- குடும்ப வகைகளில் மிகவும் சிறியது. சமூகத்தில் உள்ள மிகச்சிறிய இவ்வலகில் தாய், தந்தை மற்றும் பிள்ளைகள் மட்டும் இருப்பர்.
- உதவிக்காக ஏனையோரில் தங்கியிருப்பது குறைவு, சுயாதீனமானது, தனித்தன்மைகள் அதிகமுள்ளது.


அணுக்குடும்பம்

**கூட்டுக்குடும்பத்தின் இயல்பு**

- தாய், தந்தை பிள்ளைகளுக்கு அப்பால் வேறு உறவினர்கள் இருப்பர்.
- அத்தகைய உறவினர்களுக்கு உதவிகளும் வழங்கப்படும்.
- அந்தரங்கத் தன்மை குறைவு.

### 7.1.3 குடும்பத்திலுள்ள பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்களை மதிப்பிடல்.

**பழக்க வழக்கங்கள்**

பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு சந்தர்ப்பங்களில் நிறைவேற்றப்படும் பழக்க வழக்கங்கள்.

உ-ம் : புதுமனை புகுதல்
அமுதூட்டல்
எழுத்து அறிமுகம் செய்தல்
பூப்பெய்தல்
திருமணம்
மரணம்
விசேட கலாசார விழாக்கள்

**சம்பிரதாயங்கள்**

குடும்பத்தில் நீண்டகாலம் நடைமுறைப்படுத்தப்படுபவை.

உ-ம் : மூத்தோரை மதித்தல்.
குடும்ப அங்கத்தவர் என்ற வகையில் தமக்குரிய கடமையை நிறைவேற்றல்.

நீண்டகாலமாக இருக்கும் மரபுகள்

உ-ம் : வீட்டிலிருந்து வெளியேறும் போது மூத்தோரை வணங்குதல்.

குடும்பத்தில் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்களைப்பாதுகாப்பதன் முக்கியத்துவம்

- குடும்பத்தின் சீரான நிலவுகையைப்பாதுகாத்தல்.
- குடும்ப அங்கத்தவர்களிடையே நல்லுறவு பேணப்படல்
- நற் பழக்க வழக்கங்களைத் தொடர்ந்து பேணுதல்
- நற்பிரசையொருவரை சமுகத்துக்கு வழங்குதல்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

### 7.1.4 குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள், கடமைகள், பொறுப்புகள்

ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் குடும்பத்திலிருந்து தமக்குக் கிடைக்க வேண்டியவை உரிமைகளாகும்.

- கல்வி பெறல்
  - அன்பு, இரக்கம், கருணை, பாசம் என்பவற்றைப் பெறல்
  - பாதுகாப்பைப்பெறல்
  - உணவு போசாக்குப் பெறல்
  - ஆடையணிகள், நோய்க்கு மருந்து பெறல்
  - உள்ளார்ந்த ஆர்வங்களை விருத்தி செய்து கொள்ளல்
  - ஓய்வைக் கருத்துள்ளதாகப் பயன்படுத்தல்.
- இவ்வுரிமைகளை உரிய முறையில் அனுபவிப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள்
  - சீரிய உள, உடல் நலத்தைக் கொண்ட தனியாட்கள் உருவாதல்.
  - சமநிலை ஆளுமையை உருவாக்க முடிதல்
  - சீரான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பின்னணியை ஏற்படுத்தல்.

- குடும்ப அங்கத்தவர் என்ற வகையில் குடும்பத்தின் சீரான நிலவுகைக்காக தன்னால் குடும்பத்துக்கு நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் கடமைகளாகும். குடும்பத்தில் தான் உரிமைகளை அனுபவிக்கும் போது அதனுடன் இணைந்த கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும்.
  - தலைமைத்துவத்தை மதித்தல்
  - தலைமைத்துவத்தை ஏற்றல்
  - பெற்றோர், மூத்தோரின் விடயங்களில் உதவுதல்.
  - பெற்றோரையும் மூத்தோரையும் மதித்தல்
  - குடும்ப அங்கத்தவர்கள் மீது அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தல்.
  - நல்ல முறையில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடல்.
  - பெற்றோருக்கும் மூத்தோருக்கும் அடிபணிதல்
  - தம் குடும்பச்சொத்துக்களைப் பாதுகாத்தல்.
  - குடும்பத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் கடமைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவம்.
  - குடும்ப உறுப்பினர்களின் பொறுப்புகள்.

**தந்தை**
- எடுத்துக்காட்டான வாழ்க்கை
- நியாயமான வழிகளில் உழைத்தல்
- பாதுகாப்பும் அரவணைப்பும் வழங்குதல்.
- பிள்ளைக்களுக்கான போசக்கு வழங்குதல்.
- பிள்ளைகளுக்குச் சிறந்த வழியைக்காட்டல்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தாய்**

- பிள்ளைகளைச் சீரான வழியில் நடத்துதல்.
- எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழல்.
- உழைத்த வருமானத்தை குடும்ப நலனுக்குச் செலவழித்தல்.
- அன்பையும் அரவணைப்பையும் வழங்குதல்
- பிள்ளைகளுக்கான போசாக்கை வழங்குதல்
- குடும்பத்துக்குத் தலைமைத்துவத்தை வழங்குதல்.

**பிள்ளைகள்**

- நல்ல முறையில் கற்றல்
- குடும்பச்சொத்துக்களைப் பாதுகாத்தல்
- பெற்றோருக்கும் மூத்தோருக்கும் உதவி செய்தல்
- பெற்றோர் இல்லாதபோது வீட்டு விவகாரங்களைக் கவனித்தல்
- குடும்பத்தில் ஒற்றுமையுடன் கருமமாற்றுதல்.

- பொறுப்புகளை நிறைவேற்றுதல் குடும்ப அலகின் சீரான நிலவுகைக்கு முக்கியானது.
- நவீன குடும்ப அலகின் மீதான சவால்கள்.
  - பெற்றோர் தொழிலுக்காக வெளிநாடு செல்லல்.
  - பெற்றோர் தொழிலுக்காக வெளியே செல்லல்.
  - ஓய்வு குறைவு
  - போட்டித் தன்மை
  - ஊடகங்களின் எதிர்மறைச் செல்வாக்கு
  - மோஸ்தர்களின் அதிகரிப்பு
  - விழுமியங்கள் வீழ்ச்சியடைதல்.
  - போதைப் பொருளின் செல்வாக்கு

### 7.1.5 தனது குடும்பத்துக்கும் அயலவர்களுக்குமிடையிலான தொடர்பின் முக்கியத்துவம்

- பல குடும்ப அலகுகள் இணைந்து சமூகம் உருவாகும்.
- ஒருவர் தனித்து வாழ முடியாது என்பதுடன் ஒரு குடும்பம் சமூகத்திலிருந்து பிரிந்து வாழ முடியாது.
- தன்மைச் சுற்றி வாழ்வோர் அயலவர்கள்.
- அக்குடும்பங்களுடன் இடைத் தொடர்புகளை விருத்தி செய்வதன் மூலம் சமூக அபிவிருத்தி ஏற்படும்.
- குடும்பத்தின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதில் அயலவரின் உதவி தேவையாகும்.

  உ-ம் :
  - மரண வீடுகளின் போது
  - திருமண வைபவங்களின் போது
  - அவசர விபத்துகளின் போது
  - வீடுகள், கூரைகள் அமைக்கும் போது
  - விவசாய நடவடிக்கைகளின் போது

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- அயலவர்களுடன் சீரான தொடர்பைப் பேணுவதன் முக்கியத்துவம்
    - பரஸ்பரத் தொடர்பு விருத்தியடையும்.
    - பிரதேச அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல்.
    - தேவையான போது உதவி பெறல்
    - ஒற்றுமையை அதிகரிக்க.
- பொதுவாழ்வுக்கு இடைஞ்சலாக அமையும் அயலவர் நடவடிக்கைகள்.
    - சட்ட ரீதியற்ற தொழில்களில் ஈடுபடல்.
    - வானொலி, தெலைக்காட்சி போன்றவற்றை உரத்த தொனியில் இயக்குதல்.
    - கழிவகற்றல் முறையாக பேணப்படாமை
    - அயலவருடன் வேற்றுமைப்படல்.
    - பொதுச் சேவைகளைப் பயன்படுத்துவதில் முறைகேடாக நடத்தல்.

### 7.1.6 குடும்பமொன்றில் இருந்து உருவாகும் நற்பிரசைகளிடம் இருக்க வேண்டிய பண்புகள்

- சமூகத்தின் அத்திவாரம் குடும்பமாகும்.
- குடும்பம் சமூகத்திற்கு வழங்கும் அல்லது ஒருவர் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகள்.
    - மற்றவர் கருத்தைச் சகித்தல்.
    - அன்பு, கருணை
    - நேர்மை
    - நேசம்
    - தலைமைத்துவம்
    - சுற்றாடல் நேசம்
    - தருணத்துக்கேற்ற அறிவு
    - ஒற்றுமையுணர்வு
    - பொறுமை
    - பொது நலம்
    - சுயகட்டுப்பாடு

- குடும்ப அங்கத்தவர்கள் நற்குணங்களால் நிறைந்திருப்பின் சமூகம் சீரானதாக இருக்கும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## செயற்பாடு 7.1.1

**தேர்ச்சி மட்டம்** : சமூகத்தின் மிகச்சிறியதும் முக்கியமானதுமான குடும்பத்தை இனங்கண்டு சிறந்த ஒரு அங்கத்தவராகவும் நிரந்தரமாக ஒரு குடும்ப அலகை உருவாக்கவும் முயல்வார்.

**செயற்பாடு 7.1.1** : "ஒற்றுமையான ஒரு குடும்பத்தைக் கட்டியெழுப்புவோம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- ஏ4 கடதாசி, எழுதுகருவி
- இணைப்பு 7.1.1.1 இலுள்ள செயலட்டை

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 7.1.1.1** :

- ஏ4 கடதாசிகளை மாணவர்களுக்கு வழங்கவும்
- தனது குடும்ப அங்கத்தவர்களை வரையும்படி கூறவும்.
- அவற்றை ஒட்டிக் காட்சிப்படுத்த வழிப்படுத்தவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • உங்கள் வீட்டில் உங்களுடன் வேறு பலரும் வசிக்கின்றனர்.<br>• அவர்கள் உங்கள் நெருங்கிய உறவினர்கள்.<br>• இவ்வனைவரும் இணைந்த அலகு உங்கள் குடும்பம் ஆகும்.<br>• தந்தையும் தாயும் குடும்பத்தின் தலைவர்கள் ஆவர்.<br>• சகோதர சகோதரிகள் குடும்பத்தின் அங்கத்தவர்கள்.<br>• இவற்றைக் கொண்ட குடும்பம் அணுக்குடும்பமாகும்.<br>• பாட்டி, பாட்டன், மாமி, மாமா போன்ற உறவினர்கள் சில வேளை உங்களுடன் ஒரே வீட்டில் வாழ்வர்.<br>• அத்தகைய குடும்பங்கள் கூட்டுக்குடும்பம் ஆகும்.<br>• மனித சமூகத்தில் மிகச்சிறிய அலகு குடும்பமாகும்.<br>• குடும்ப அங்கத்தவர்களிடையிலான பரஸ்பர உறவு மூலம் குடும்பம் பலமடைகிறது. |

(10 நிமிடங்கள்)

**படி 7.1.1.2** :

- வகுப்பு மாணவர்களிடையே இணைப்பு 7.1.1.1 இலுள்ள செயலட்டையைப் பகிர்ந்தளிக்கவும்.
- செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தவும்.

(15 நிமிடங்கள்)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 7.1.1.2 :

- செயற்பாட்டின் மூலம் அணுக்குடும்பம், கூட்டுக்குடும்பம் என்ற இரு குழுக்களாகப் பிரிக்கவும்.
- குழுக்களின் மூலம் கண்டறிந்த விடயங்களை முன்வைக்க வழிப்படுத்தவும்.
- ஒரு குழுவின் முன்வைப்பு தொடர்பாக மற்றைய குழுவின் கருத்துக்களைக் கேட்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு தொகுப்புரையை வழங்கவும்.

| |
|---|
| • சமூகத்தின் மிகச்சிறிய அலகு குடும்பம்.<br>• மனிதன் ஒரு சமூகப்பிராணி ஆவான்.<br>• நீங்களும் ஒரு குடும்பத்தின் அங்கத்தவர் ஆவர்.<br>• குடும்பம் பல உறுப்பினர்களைக் கொண்டது.<br>• குடும்ப அங்கத்துவத்தைப் பொறுத்து அது வகைப் படுத்தப்படும்.<br>• பெற்றோர் பிள்ளைகள் மட்டும் இருப்பின் அணுக்குடும்பம்.<br>• பெற்றோர் பிள்ளைகளுடன் நெருங்கிய உறவினரும் இருப்பின் அது கூட்டுக்குடும்பமாகும்.<br>• ஒரு குடும்பத்தின் பலத்தை உறுதிப்படுத்த அங்கத்தவர்களிடையே பரஸ்பர ஒத்துழைப்பு இருத்தல் வேண்டும். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தனது வீட்டில் உள்ள அனைவரும் இணைந்ததே குடும்பம் எனக் கூறுவார்.
- குடும்பத்தில் அன்புடனும் பாசத்துடனும் வாழப் பழகுவார்.
- அணுக்குடும்பம் கூட்டுக் குடும்பம் என்பவற்றைப் பிரித்துக் காட்டுவார்.
- குழு உணர்வுடன் கருமமாற்றுவார்.
- சீரான குடும்ப வாழ்வின் பண்புகளை எடுத்துக் காட்டுவார்.

**பின்தொடர்வேலை :**

நீங்கள் வரைந்த குடும்பத்தின் படத்துக்கு நிறந்தீட்டி பயிற்சிப்புத்தகத்தில் ஒட்டவும்.

# இணைப்பு 7.1.1.1

## செயலட்டை

பின்வரும் வினாக்களுக்கான சுருக்க விடைகளை வழங்கப்பட்ட தாளில் எழுதுக.

1. குடும்பம் என்றால் என்ன?
2. உங்கள் குடும்பத்தின் உறுப்பினர்களைக் குறிப்பிடுக.
3. சமூகத்தில் உள்ள குடும்ப வகைகளைக் கூறுக.
4. அதன்படி உங்கள் குடும்பம் எவ்வகையைச் சேர்ந்தது.
5. பின்வரும் அட்டவணையில் ஒவ்வொருவகைக் குடும்பத்தில் இயல்புகளையும் எழுதிப் பூரணப்படுத்துக.

| அணுக்குடும்பம் | கூட்டுக்குடும்பம் |
|---|---|
| | |

6. நிலையானதும் அமைதியானதுமான ஒரு குடும்பத்தைக் கட்டியெழுப்புவதற்காக அதன் உறுப்பினர் என்ற வகையில் நீங்கள் எவ்வாறு கருமாற்ற வேண்டும்.

# செயற்பாடு 7.1.2

**தேர்ச்சி மட்டம்** : சமூகத்தின் மிகச்சிறியதும் முக்கியமானதுமான அலகு என்ற வகையில் குடும்பத்தை இனங்கண்டு சிறந்த ஒரு உறுப்பினராக நிரந்தரமானதொரு குடும்ப அலகைக்கட்டியெழுப்புவோம்.

**செயற்பாடு 7.1.2** : "உறவுகளைக் கட்டியெழுப்புவோம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 7.1.2.1 இலுள்ள தாலாட்டுப்பாடல்.
- இணைப்பு 7.1.2.2 இலுள்ள செயலட்டை
- டிமை கடதாசி, எழுதுகருவி

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படி 7.1.2.1** :

- இணைப்பு 7.1.2.1 இலுள்ள தாலாட்டுப்பாடலை மாணவர்களுடன் பாடவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - குடும்பத்துடன் தொடர்புடைய உறவினர் குழுவொன்று உள்ளது.
> - தாய் வழி, தந்தை வழி உறவினர்கள் அதில் அடங்குவார்.
> - தாய்வழி, தந்தை வழி உறவினரை பலவாறு விழிக்கலாம்.
> - பிரதேசத்துக்கும் கலாசாரத்திற்கும் ஏற்ப இப்பெயர்கள் வேறுபடும்.
> - உறவுகளைச் சீராகப் பேணுதல் மிகவும் முக்கியமாகும்.

(20 நிமிடங்கள்)

**படி 7.1.2.2** :

- வகுப்பு மாணவர்களைச் சில குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 7.1.2.2 ஐக் குழுக்களுக்கு வழங்கவும்.
- செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தவும்.

(15 நிமிடங்கள்)

**படி 7.1.2.3** :

- குழுத்தேடல்களை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்தவும்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களுக்கு இடமளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு தொகுப்புரையை வழங்கவும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- தாயின், தந்தையின் தாய் பாட்டி (அம்மம்மா, அப்பம்மா) எனவும் தந்தை தாத்தா எனவும் அழைக்கப்படுவர்.
- தாயின் மூத்த இளைய சசோதரர்களும் தந்தையின் சகோதரியின் கணவரும் மாமா என்றழைக்கப்படுவர்.
- தாயின் மூத்த சகோதரியையும் தந்தையின் மூத்த சகோதரரின் மனைவியையும் பெரியம்மா என்று அழைக்கப்பர்.
- தாயின் இளைய சகோதரியும் தந்தையின் இளைய சகோதரரின் மனைவியும் சின்னம்மா என்றழைக்கப்படுவர்.
- தந்தையின் இளைய சகோதரரும் தாயின் இளைய சகோதரியின் கணவரும் சித்தப்பா என்றழைக்கப்படுவர்.
- தந்தையின் மூத்த சகோதரரும் தாயின் மூத்த சகோதரியின் கணவரும் பெரியப்பா என்றழைக்கப்படுவர்.
- தந்தையின் சகோதரிகளும் தாயின் சகோதரிகளின் மனைவிமார்களும் மாமி என்றழைக்கப்படுவர்.
- எனினும் பிரதேச, கலாசாரத்துக்கேற்ப இவை வேறு விதமாகவும் அழைக்கப்படும்.
- உறவுகளைப் பேணுவதன் மூலம் பலம் வாய்ந்த ஒரு குடும்பச் சூழல் உருவாகும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தாயின், தந்தையின் நெருங்கிய உறவினர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர் என்பதைக் குறிப்பிடுவார்.
- சீரான குடும்ப உறவுகளைப் பேணப்பழகுவார்.
- குடும்ப உறவுகளைச் சரியாக எழுதிக்காட்டுவார்.
- குழு உணர்வை விருத்தி செய்து கொள்வார்.
- சம்பிரதாயங்களைப் பேணுவார்.

**பின்தொடர்வேலை :**

1. கீறிட்ட இடங்களை நிரப்புக.
   I தாயின் இளைய சகோதரன் எனக்கு .............................. முறையாவார்.
   II தந்தையின் இளைய சகோதரரும் தாயின் இளைய சகோதரியின் கணவரும் எனக்கு................ முறையாகும்.
   III சில பிரதேசங்களில் தாத்தாவை ........... என்றும் அழைப்பார்.
   IV எனது பெரியமாமா எனது அம்மாவின் .................. ஆவார்.
   V எனது தந்தையின் மூத்த சகோதரரை நான் .................. என்று அழைப்பேன்.

2. பின்வரும் அ, ஆ நிரல்களில் உள்ள கூற்றுக்களை பொருத்தமாக இணைக்குக.

| | | |
|---|---|---|
| பாட்டி | - | தந்தையின் சகோதரி |
| மச்சான் | - | தாயின் சகோதரன் |
| மாமி | - | தாயின் தாய் |
| மாமா | - | தந்தையின் சகோதரியின் மகன் |

## இணைப்பு 7.1.2.1

| |
|---|
| உறவு முறைகளைக் கூறும் தாலாட்டுப்பாடலை மாணவர்களைப் பாடச் செய்யவும். |

## இணைப்பு 7.1.2.2

### குழு 1

### உங்களின் உறவைப் புள்ளிக் கோட்டில் எழுதுக



- தந்தை : உ-ம் தாத்தா அல்லது பாட்டன்
- தாய் ..............................................
- அண்ணன் ..............................................
- தம்பி ..............................................
- தங்கை ..............................................
- அண்ணாவின் மனைவி ..............................................
- தம்பியின் மனைவி ..............................................
- அக்காவின் கணவன் ..............................................
- தங்கையின் கணவன் ..............................................
- அண்ணாவின் மகள்/ மகன் ..............................................
- அக்காவின் மகள்/ மகன் ..............................................

தந்தையின் உறவு முறை மேலே காட்டப்பட்டுள்ளது.

### குழு 2



- தந்தை உ-ம் தாத்தா அல்லது பாட்டன்
- தாய் ..............................................
- அண்ணன் ..............................................
- தம்பி ..............................................
- தங்கை ..............................................
- அண்ணாவின் மனைவி ..............................................
- தம்பியின் மனைவி ..............................................
- அக்காவின் கணவன் ..............................................
- தங்கையின் கணவன் ..............................................
- அண்ணாவின் மகள்/ மகன் ..............................................
- அக்காவின் மகள்/ மகன் ..............................................

தாயின் உறவுமுறை மேலே காட்டப்பட்டுள்ளது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## குழு 3

பல்வேறு பிரதேசங்களில் உறவினர்களுக்குப் பயன்படுத்தும் பெயர்களை அட்டவணைகளில் குறிப்பிடுக.

| | |
|---|---|
| தந்தை | |
| மாமா | |
| மாமி | |
| சின்னம்மா | |
| சித்தப்பா | |
| பெரியப்பா | |
| பெரியம்மா | |

## குழு 4

நீங்கள் உறவினர்களுடன் பல்வேறு கருமங்களில் ஈடுபடும் சந்தர்ப்பங்களை கூடுகளில் எழுதுக.

| | |
|---|---|
| தந்தை | |
| மாமா | |
| மாமி | |
| சின்னம்மா | |
| சித்தப்பா | |
| பெரியப்பா | |
| பெரியம்மா | |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# செயற்பாடு 7.1.3

**தேர்ச்சி மட்டம் :** குடும்பத்துக்கும் அயலவர்களுக்கும் இடையே பரஸ்பரத் தொடர்பை உறுதிப்படுத்தி ஒத்துழைப்புடன் வாழப் பழகுவார்.

**செயற்பாடு 7.1.3 :** "அயலவருடன் ஒத்துழைப்புடன் வாழ்வோம்"

**நேரம் :** 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 7.1.3.1 இலுள்ள செயலட்டை
- ஏ4 கடதாசி, எழுதுகருவி

**கற்றல் கற்பித்தல் செயன்முறை :**

**படி 7.1.3.1 :**

- அயலவருடன் இணைந்து வேலைசெய்யும் சில படங்களைக் காட்சிப்படுத்தவும்.
  உ-ம்: - திருமண வைபவம்
  - மரண வீடு
  - ஒரு விழா
- படங்களை அவதானிக்கச் செய்யவும்
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

  - பல குடும்ப அலகுகளின் சேர்க்கையால் சமூகம் உருவாகும்
  - தனி மனிதன் மட்டுமன்றி குடும்பங்களும் கூட தனித்து வாழ முடியாது.
  - தம் குடும்பத்தைச் சுற்றி வாழும் குடும்பங்கள் அயலவர் ஆவர்.
  - குடும்பத்தின் தேவைகளின் போது அயலவரின் உதவி கிடைக்கும்.
  - அயலவருடன் நட்புறவைப் பேண வேண்டும்.
  - அயலாருடன் இடைத்தொடர்பைப் பேண பொறுமை, நம்பிக்கை, ஒத்துழைப்பு, கருத்துப்பரிமாறல் என்பன அவசியம்.
  - அயலவருக்கு இடைஞ்சலற்ற வகையில் வாழப்பழக வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 7.1.3.2 :**

- வகுப்பு மாணவர்களைப் பொருத்தமாகக் குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 7.1.3.1 இலுள்ள பிரதிகளைக் குழுக்களுக்கு வழங்கவும்
- செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தவும்.

(15 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 7.1.3.3 :

- குழுத்தேடல்களை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்தவும்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களுக்கு இடமளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • எம்மைச் சுற்றி வாழும் குடும்பங்கள் அயலவர்கள் ஆவார். |
| • பண்டைக் காலத்தில் அயலவர் தொடர்பு மிக நெருக்கமாக இருந்துள்ளது. |
| • அன்று தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள எல்லோரும் ஒவ்வொருவரது வேலையையும் கூட்டாகச் செய்யும் அத்தம் முறை காணப்பட்டது. |
| • பல சந்தர்ப்பங்களில் அயலவர்கள் உறவினர்களை விட நெருக்கமானவர்கள். |
| • அயலவர்களுடன் நெருக்கமாக இருப்பதன்மூலம் எமது வேலைகளை இலகுபடுத்திக் கொள்ள முடியும். |
| • எமது வாழ்க்கைக் கோலம் அயலவருக்குத் தொல்லை கொடுக்காத விதத்தில் இருக்க வேண்டும். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தம் குடும்பத்தைச் சுற்றி வாழும் ஏனைய குடும்பங்கள் அயலவர்கள் ஆவார் என்று கூறுவார்.
- அயலவர்களுடன் நெருங்கிய தொடர்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- அயலவர்களின் உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களை எழுதிக்காட்டுவார்.
- அயலவர்களுடன் நெருங்கிய தொடரபுகளைக் கட்டியெழுப்புவார்
- ஒத்துழைப்புடன் கருமமாற்றுவார்.

**பின்தொடர்வேலை**

1. நீங்கள் அயலவர்களுடன் சீரான தொடர்பைப் பேணிய ஒரு சந்தர்ப்பத்தை உரையாடலாக எழுதுக.
2. அயலவர்களின் பல்வேறு நடத்தைக் கோலங்கள் காரணமாக உங்கள் குடும்பம் தொல்லைகளை அனுபவித்த சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

**இணைப்பு 7.1.3.1**

## செயலட்டை

குழுக்களுக்கு இதில் ஒவ்வொரு பிரதியை வழங்கவும்.

1. நீங்கள் அயலவர்களுக்கு உதவிய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
2. அயலவர்கள் உங்களுக்கு உதவிய சந்தர்ப்பங்களைக் கூறுக.
3. அயலவர்களின் நடவடிக்கைகள் உங்களுக்குத் தொல்லையாக அமைந்த சில சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
4. அயலவர்களுடனான தொடர்புகளைப் பேணும்போது இருக்க வேண்டிய பண்புகள் எவை?

# செயற்பாடு 7.1.4

**தேர்ச்சி மட்டம் :** குடும்ப உறுப்பினராக தம் உரிமைகளை அனுபவித்து கடமைகளைச் செய்து ஒழுக்கமுடன் வாழ்வதற்குத் தேவையான மானிடப் பண்புகளை விருத்தி செய்து கொள்வார்.

**செயற்பாடு 7.1.4 :** "கடமைகளைச் செய்து உரிமைகளைப் பாதுகாப்போம்"

**நேரம் :** 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 7.1.4.1 இலுள்ள ஒப்படைப்பத்திரம்
- இணைப்பு 7.1.4.2 இலுள்ள ஒப்படைப்பத்திரம்
- இணைப்பு 7.1.4.3 இலுள்ள ஒப்படைப்பத்திரம்
- டிமை கடதாசி, எழுதுகருவி

**கற்றல் கற்பித்தல் செயன்முறை :**

**படி 7.1.4.1 :**

- குடும்பத்தில் தத்தம் கடமைகள், உரிமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றும் விதம் பற்றிய சிந்தனைக் கிளறலை மேற்கொள்க.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - குடும்ப அங்கத்தவர் என்ற வகையில் குடும்பத்தில் தமக்குக் கிடைக்க வேண்டியவை உரிமையாகும்.
> - அத்தகைய உரிமைகள் பலவுண்டு.
>   உ-ம்: - அரவணைப்புப் பெறல்
>   - கல்வி பெறல்
>   - உணவு, போசாக்குப் பெறல்
> - ஒரு குடும்பத்தின் சீரான நிலவுகைக்கு குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்றும் பணிகள் கடமைகளாகும்.
> - உரிமைகளை அனுபவிக்கும் போது அதனுடன் தொடர்பான கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும்.
> - நிறைவேற்ற வேண்டிய கடமைகள் அனேகமுண்டு.
>   - தலைமைக்கு கௌரவமளித்தல்.
>   - குடும்ப உறுப்பினர்களைப் பாதுகாத்தல்.
>   - தம் குடும்பச் சொத்துக்களைப் பாதுகாத்தல்
> - தம் குடும்பத்திலுள்ளோரின் பொறுப்புக்களைத் தவறாது நிறைவேற்ற வேண்டும்.

(10 நிமிடங்கள்)



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 7.1.4.2 :

- வகுப்பு மாணவர்களை 4 குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 7.1.4.1 இலுள்ள குழு ஒப்படைப்பத்திரத்தை குழுக்களுக்கு வழங்கவும்.
- செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தவும்.

(15 நிமிடங்கள்)

படி 7.1.4.3 :

- குழுத்தேடல்களை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்தவும்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களுக்கு இடமளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - எல்லா உறுப்பினரும் குடும்பத்தில் உரிமைகளை சரியாக அனுபவிப்பது முக்கியமாகும்.
> - கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் குடும்பத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
> - பொறுப்புக்களை நிறைவேற்றல் குடும்பத்தின் நிலவுகைக்கு முக்கியமாகும்.
> - குடும்பத்திலிருந்து உங்களுக்கும் உங்களிடமிருந்து குடும்பத்திற்கும் கடமைகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.
> - உரிமைகளை சரியாக அனுபவித்து கடமைகள், பொறுப்புகளை நிறைவேற்றுவதன் மூலம் ஒற்றுமையான ஒரு குடும்பம் உருவாகும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- குடும்பத்திலிருந்து தனக்கும் தன்னிடமிருந்து குடும்பத்திற்கும் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் கூறுவார்.
- உரிமைகளை அனுபவிப்பதுடன் அதனுடன் தொடர்பான கடமைகளையும் செய்யப் பழகுவார்.
- கடமைகள், பொறுப்புகளை வேறுபடுத்திக் காட்டுவார்.
- குடும்பத்தில் ஒற்றுமையாக நடக்கும் ஆற்றலை வெளிக்காட்டுவார்.
- ஒரு நல்ல குடும்ப அங்கத்தினராக செயற்படும் இயல்பை வெளிக்காட்டுவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**இணைப்பு 7.1.4.1**

**குழு 01**

1. உங்களிடமிருந்து குடும்பத்துக்கும் குடும்பத்திலிருந்து உங்களுக்கும் நிறைவேற்றப்படும், நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் கீழே தரப்பட்டுள்ளன. அதனூடாக கீழேயுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.
   - அரவணைப்பு வழங்குதல்
   - நன்றாகக் கல்வி கற்றல்
   - பணம் சம்பாதித்தலும் பயன்படுத்தலும்
   - மூத்தோரை கௌரவித்தல்
   - கல்வி கற்றல்
   - உணவும் போசாக்கும் வழங்குதல்
   - பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்களைப் பின்பற்றல்
   - ஆக்கச் செயற்பாட்டுக்கு, நயத்துக்கு வாய்ப்பளித்தல்
   - வீட்டு வேலைகளில் தேவையான போது உதவுதல்

| **குடும்பத்திலிருந்து உங்களுக்கு** | **உங்களிடமிருந்து குடும்பத்துக்கு** |
|---|---|
| | |

2. மேற்படி சந்தர்ப்பங்கள் தவிர உங்கள் வீட்டுச் சூழலில், குடும்ப உறுப்பினர்களுக்கு உங்கள் உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்கள் பற்றிக் கூறுக.

**குழு 02**


1. நீங்கள் தனியாகவும் குடும்பத்தினரின் உதவியுடனும் செய்யும் சில வேலைகள் கீழே தரப்பட்டுள்ளன.
   - தினமும் வீட்டையும் சுற்றுப்புரத்தையும் சுத்தம் செய்தல்.
   - பாடசாலைச் சீருடையைத் துவைத்தல்
   - பூஞ்செடிகளுக்கு நீரூற்றுதல்
   - சப்பாத்துக்களைச் சுத்தம் செய்தல்
   - அருவி வெட்டல்
   - வீட்டுச் சுவருக்கு சுண்ணாம்பு அடித்தல்
   - கிணறு இரைத்தல்
   - நேர அட்டவணைப்படி புத்தகப்பையைத் தயார் செய்தல்
   - தனது அறையைச் சுத்திகரித்தல்
   - உணவு தயாரித்தல்

   மேற்படி தகவல்களின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| தனியாகச் செய்ய முடியுமானவை | கூட்டாகச் செய்யக் கூடியவை |
|---|---|
| | |

2. உங்களால் செய்யக்கூடிய ஆனால் செய்யத் தவறிய விடயங்கள் எவை எனக் குறிப்பிடுக.

குழு 03





1. படத்தை நன்றாக அவதானித்து ஒவ்வொரு படத்தின் எதிரே உள்ள கூட்டில் படத்தை பற்றிய உங்கள் கருத்தை எழுதவும்.
2. படத்துக்கு ஒரு தலைப்பு இடவும்.
3. உங்கள் குடும்பத்தின் உறுப்பினர்களுக்கு உதவி கிடைக்கும் சந்தர்ப்பங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

குழு 03





1. படத்தை நன்றாக அவதானித்து ஒவ்வொரு படத்தின் எதிரே உள்ள கூட்டில் படத்தை பற்றிய உங்கள் கருத்தை எழுதவும்.
2. படத்துக்கு ஒரு தலைப்பு இடவும்.
3. உங்கள் குடும்பத்தின் உறுப்பினர்களுக்கு உதவி கிடைக்கும் சந்தர்ப்பங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 7.2 எமது மக்கள் சமூகம்

## அறிமுகம்

குடும்பங்கள் பல ஒன்றிணைந்து உருவாகும் சமூகத்தில் ஏராளமான பல்வகைமைகள் காணப்படும். பல்வேறு மனிதத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு பல சமூக நிறுவனங்கள் தோன்றியுள்ள மனித சமூகத்தில் பல்வகைமை என்பது பரவலாகக் காணப்படும் ஒன்றாகும்.

சமூகத்தின் சீரான நிலவுகைக்கு உரிமைகளை அனுபவித்து கடமைகள், பொறுப்புகளை நிறைவேற்றுவது அவசியமாகும். இன்றைய சமூகத்தின் குடிகள் கடமைகளையும் பொறுப்புகளையும் புறக்கணித்து உரிமைகளை மட்டும் கோருவதனூடாக பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. குடும்பம், பாடசாலை, சமூகம் என்ற நிறுவனங்களில் இது தெளிவாகத் தெரிகின்றது. எனவே சமூகத்தில் ஒரு மாற்றம் நிகழ வேண்டிய தேவையுள்ளது.

ஒரு சமூகப் பிராணி என்ற வகையில் நாம் வாழும் சமூகத்தினர் பற்றி வகுப்பில் மாணவர்களுக்குத் தேவையான விளக்கத்தை வழங்குவதுடன் சமூகத்தில் நிலவும் இடைத் தொடர்புகளைப் பேணும் சடங்குகள், சம்பிரதாயங்கள், சட்டதிட்டங்கள் பற்றி விழிப்பூட்டுவதும் எதிர்பார்க்கப்படுகின்றது. விழுமிய ரீதியாயும் சட்ட ரீதியானதுமான தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றி சட்டரீதியாக உரிமைகளை அனுபவிக்க வேண்டிய விதம் பற்றிய தெளிவை வழங்கி சமநிலை ஆளுமையுடன் கூடிய நற்பிரசையை உருவாக்கத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்வதும் இவ்வலகைக் கற்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 7.2 எமது சமூகம்

**தேர்ச்சி** :- சமூகத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் தமது உரிமைகளை இனங்கண்டு கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற முன்வருவார்.

**தேர்ச்சி மட்டம்** :-

- சமூகத்தில் நிலவும் இடைத்தொடர்புகளை விசாரித்தறிவார்.
- சமூகத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் சட்டத்தின் வரம்புகளுக்குட்பட்டு தம் உரிமைகளை அனுபவிக்கப் பழகுவார்.
- உரிமைகளுடன் இணைந்த கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**பாட உள்ளடக்கம் :**

## 7.2 எமது சமூகம்

### 7.2.1 பொது அறிமுகம்

பல்வேறு மனிதத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு சமூக நிறுவனங்கள் தோன்றுகின்றன. அந்நிறுவனங்களின் தொகுப்பே சமூகம் என வரை விலக்கணப்படுத்தலாம்.

சமூகம் பற்றிய சமூகவியல் சார்ந்த பல வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.
உ-ம்: ஒருவரையொருவர் இனங்கண்டு இடைத்தொடர்பைக் கட்டியெழுப்புவதனால் உருவான மனிதக் குழுக்களின் கூட்டாகும்.

எல்லைப்படுத்தப்பட்ட ஒரு நிலப்பரப்புக்குள் நிரந்தரமாக வசிக்கும் மக்களால் ஆசைகள், தேவைகள், விருப்பு, வெறுப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள், சங்கங்கள், கழகங்கள், அமைப்புக்களின் கூட்டாகும்.

- சமூகத்தின் அடிப்படையானதும் மிகச்சிறியதுமான அலகு குடும்பமாகும்.
- குடும்ப அலகுகள், அவற்றின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு மக்கள் சமூகம் உருவாகும்.
- அத்தகைய சமூகத்தில் காணப்படும் பொது நிறுவனங்கள் வருமாறு,


*சமூகம் என்பது நன்கு வரையறுக்கப்பட்ட எல்லைகள் கொண்ட ஒரு அலகாக நின்று நிந்திப்பதன் மூலமும் வாழ்வதன் மூலமும் ஒன்றாக வேலை செய்வதன் மூலமும் ஒழுங்கமைக்கட்படப்ட ஒரு மக்கள் குழுவாகும்.*

- லிண்டன் ஏல்ப் -

*The Science of man in the world cvisis colonso university press New york 1965*

*"சமூகம் என்பது அதிகாரதிதனாலும் பரஸ்பர உத்தியினாலும் சுதந்திரமாகப் பழக்கப்பட்ட மனிதர்களின் செயற்பாட்டு ரீதியான செயலமர்வு போன்றதாகும். இது சமூகத் தொடர்பு பற்றி ஒரு வகையாகும். தொடர்ந்து மாற்றமுறும் ஒரு பிரவேசமாகும்."*

Peter L. Bergar -
Invitation to Sociology




படம் 2.1

- பண்பாடு மிக்க ஒரு வாழக்கையை வாழ எழுந்த முயற்சியின் பெறுபேறாக சமூகம் உருவாகியுள்ளது.


## 7.2.2 சமூகத்தில் நிலவும் இடைத் தொடர்புகள்

ஆளிடைத் தொடர்பு என்பது தனியாட்களுக்கிடையில், நிறுவனங்களுக்கிடையில் தனியாட்களுக்கும் நிறுவனங்களுக்குமிடையிலும் ஏற்படும் பரஸ்பரத் தொடர்பாகும்.

உ-ம் :
- பெற்றோர் பிள்ளைகளிடையே
- ஆசிரியர் மாணவர்களிடையே
- குடும்ப உறுப்பினர்களிடையே
- அயலவர்களிடையே
- சமூகத்திலுள்ள நிறுவனங்கள், சங்கங்கள், கழகங்கள், அமைப்புக்களிடையே
- நாடுகள் சர்வதேச ரீதியாக கொண்டுள்ள தொடர்புகள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**இடைத் தொடர்ப்பை காட்டும் உரு**




- சமூகத்தின் சீரான நிலவுகைக்கு இடைத்தொடர்பு காரணமாக அமையும்.
- தனியாக நிறைவேற்ற முடியாத தேவைகளை பரஸ்பர நம்பிக்கையூடாக, கூட்டாக நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

## 7.2.3 சமூகம் தொடர்பான எமது கடமைகளும் பொறுப்புகளும்

- சமூகத்தின் பொதுவான நிலவுகைக்காக பிரசைகள் தத்தமக்குரிய பணிகளை நிறைவேற்றும் உணர்வு கடமையாகும்.
- கடமைகள் பொதுவாக சட்டரீதியான கடமைகள், தார்மீகக் கடமைகள் என பிரித்து நோக்கப்பட முடியும்.

| சட்ட ரீதியான கடமைகள் | தார்மீகக் கடமைகள் |
| --- | --- |
| அரசுக்குக் கட்டுப்படல்<br>அரசு சட்டங்களைப் பின்பற்றல்<br>வரி செலுத்துதல்<br>கடமைகளை நிறைவேற்றல்<br>சட்டத்தையும் ஒழுங்கையும்<br>பேண உதவுதல் | பெற்றோரைக் கவனித்தல்<br>முதியோரை கௌரவித்தல்<br>பண்பாடாக நடத்தல்<br>மரபுகளைப் பேணல்<br>பிற இனத்தவர், மதத்தவர்<br>களுக்கு மதிப்பளித்தல்<br>தேசிய அடையாளங்களுக்<br>கும் தேசிய வீரர்களுக்கும்<br>மதிப்பளித்தல். |

## பொறுப்புக்கள்

கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற பிணைப்பு பொறுப்பாகும்.
உ-ம்:

- பொதுச் சொத்துக்களைப் பேணல்
- சட்டதிட்டங்களை மதித்தல்
- நல்லாட்சிக்கு உதவுதல்.

- கடமைகளும் பொறுப்புக்களும் ஒன்றுடன் ஒன்று பிணைந்த பிரிக்க முடியாதவையாகும்.
- கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுதல் சமூகத்தின் சீரான நிலவுகைக்கு உதவும்.
  - தனதும் மற்றவர்களதும் உரிமைகள் பாதுகாக்கப்படல்.
  - திருப்தியானதும் கௌரவமானதுமான ஒரு சமூகம் உருவாதல்
  - சீரான வாழ்க்கை முறையொன்றைக் கட்டியெழுப்ப முடியும்.
  - சீரான சர்வதேசத் தொடர்புகளை பேண முடிதல்.

## 7.2.4 கடமைகளும் பொறுப்புகளும் நிறைவேற்றப்படும் விதம்

**அரசின் சட்ட திட்டங்கள்**

1 அரசியலமைப்பிற்கேற்ப செயற்படல்.
2. பொதுச் சொத்துக் களைப் பாதுகாத்தல்

**சம்பிரதாயங்கள்**

1. பாடசாலையின் கௌரவத் தையும் நற்பெயரையும் பாதுகாத்தல்.
2. வணக்க வழிபாடுகளை நிறைவேற்றல்

*கடமைகள், பொறுப்புகளை நிறைவேற்றும் பல்வேறு முறைகள்*

**சுயகட்டுப்பாடு**

1 உரிய நேரத்தில் வேலைக்குச் செல்லல்
2. சுற்றாடலில் அன்பு செலுத்துதல்

**பழக்கவழக்கங்கள்**

1 பெற்றோர், வளர்ந்தோருக்கு மதிப்பளித்தல்.
2. தேசிய கடமைகளை நிறைவேற்றல்
3. தேசிய சின்னங்களுக்கு கௌரவமளித்தல்
தேசிய கீதம், தேசிய கொடி

- சுய கட்டுப்பாடு மூலம் கடமைகள், பொறுப்புகள் நிறைவேற்றப்படுவதால் சீரான பண்பாடு மிக்க நல்ல மனப்பாங்குகளுடன் கூடிய குடிமக்கள் உருவாவர்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 7.2.5 சட்ட ரீதியாக உரிமைகளை அனுபவித்தல்

- உரிமை என்பது சமூகத்திலிருந்து தமக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதமாகும்.
- தனது வாழ்க்கையைத் திருப்திகரமாக்கிக் கொள்ள சமூகத்திலிருந்து கிடைத்துள்ள வாய்ப்பாகும்.
- தனது வாழ்வைச் சீராகவும் கௌரவமாகவும் நடத்த சமூகத்திலிருந்து கிடைத்துள்ள சந்தர்ப்பங்கள் உரிமைகள் என்று கூறலாம்.

**உரிமைகளின் இயல்புகள்**

- சமூகத்திலிருந்து கிடைத்தல்
- சமூகத்தின் பொது நன்மையுடன் இணைந்துதிருத்தல்.
- எல்லை கடக்காதிருத்தல்.
- உரிமைகளை அனுபவிக்கும் போது சுயநலமற்று இருத்தல்
- கடமைகளுடன் இணைந்திருத்தல்.

| சிவில் உரிமைகள் | அரசியல் உரிமைகள் |
|---|---|
| வாழும் உரிமை<br>கல்வி பெறும் உரிமை<br>விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் உரிமை<br>கருத்து வெளியிடும் உரிமை<br>தொழில் செய்யும் உரிமை<br>குடும்ப வாழ்வை மேற்கொள்ளும் உரிமை<br>சமத்துவத்துக்கான உரிமை<br>சொத்து உரிமை<br>விரும்பிய இடத்தில் வாழும் உரிமை<br>கூட்டம் கூடுவதற்கும், ஒழுங்கமைவுக்குமான உரிமை | வாக்களிக்கும் உரிமை<br>வாக்குப் பெறும் உரிமை<br>கட்சியில் இணையும் உரிமை<br>விரும்பிய அரசை நியமிக்கும் உரிமை<br>அரசை விமர்ச்சிக்கும் உரிமை<br>அரசாங்கத்தில் பதவிகளை வகிக்கும் உரிமை |

**உரிமைகளை அனுபவிக்க வேண்டிய விதம்**

- உரிமைகளை ஏனையவர்களுக்குத் தொல்லைகள் அற்ற விதத்தில் அனுபவிக்க வேண்டும்.
- கடமைகள், பொறுப்புகளை நிறைவேற்றி உரிமைகளை அனுபவிக்க வேண்டும்
- சட்டத்துக்குட்பட்டே உரிமைகளை அனுபவிக்க வேண்டும்.

## செயற்பாடு 7.2.1

**தேர்ச்சி மட்டம் :** சமூகத்தில் நிலவும் இடைத் தொடர்பகளை விசாரித்தறிவார்.

**செயற்பாடு 7.2.1 :** "சமூக நிறுவனங்களின் செயற்பாடு மிக்க அங்கத்தவர் களாகுவார்"

**நேரம் :** 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 7.2.1.1
- இணைப்பு 7.2.1.2

**கற்றல் கற்பித்தல் செயன்முறை :**

**படி 7.2.1.1 :**

- இணைப்பு 7.2.1.1 இலுள்ள உரையாடலை வகுப்பில் முன்வைக்கவும்.
- அதுபற்றி மாணவர்களின் கருத்துக்களை முன்வைக்க அவகாசம் வழங்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - பல்வேறு மனித தேவைகளுக்கேற்ப சமூக நிறுவனங்கள் உருவாகின்றன.
> - அவ்வாறான பல நிறுவனங்கள் சமூகத்தில் உள்ளன.
> - அந்நிறுவனங்களின் கூட்டினால் சமூகம் உருவாகியுள்ளது.
> - அனைவரும் ஒரு நிறுவனத்தில் அல்லது பலவற்றில் பங்காளிகளாக இருப்பர்.

(10 நிமிடங்கள்)

**படி 7.2.1.2 :**

- மாணவர்களை 4 குழுக்களாகப் பிரிக்கவும்.
- வகுப்பு மாணவர்களிடையே இணைப்பு 7.2.1.2 இன் பிரதிகளை வழங்கவும்.
- செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தவும்.

(15 நிமிடங்கள்)

**படி 7.2.1.3 :**

- குழுத் தேடல்களை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்தவும்.
- மாணவர்களிடையே கருத்துப்பரிமாறும் வகையில் செயற்பாட்டைக் கலந்துரையாடவும்.
- ஒரு குழுவின் முன்வைப்பு தொடர்பாக மற்றைய குழுவின் கருத்துக்களைக் கேட்கவும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு தொகுப்புரையை வழங்கவும்.
  - சமூக நிறுவனங்கள், சமூக அமைப்புகள் பலவற்றின் ஒன்றிணைப்பாக சமூகம் உருவாகியுள்ளது.
  - தனியாள் இடைத்தொடர்புகளால் இணைந்த அங்கத்துவக் குடும்பம் சமூகமாகும்.
  - விழுமியங்களுடன் கூடியதாக வாழ எடுத்த முயற்சியின் பெறுபேறாக சமூகத்தைக் குறிப்பிடலாம்.
  - சமூக நிறுவனங்களின் அங்கத்தவர்களுக்கு கடமைகளும் பொறுப்புகளும் உண்டு.
  - அவற்றை குறைவின்றி நிறைவேற்றும் காலமெல்லாம் சமூகப் பாதுகாப்பு பேணப்படும்.
  - ஒரு சமூக நிறுவனத்தின் அங்கத்தவராக இருப்பதன் முலம் தமக்கும் சமூகத்திற்கும் பல நன்மைகள் ஏற்படும்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தமது பிரதேசத்தில் உள்ள சமூக நிறுவனங்களைக் கூறுவார்.
- தனக்கும் சமூகத்திற்கும் நன்மை ஏற்படுவதால் அவற்றை மதிப்பார்.
- சமூக நிறுவனமொன்றின் அங்கத்தவருக்கென்ற கடமைகள், பொறுப்புகளைப் பட்டியலிடுவார்.
- குழுச் செயற்பாடுகளில் உயிர்ப்புடன் பங்கு பற்றுவார்.
- குழுச் செயற்பாடுகளில் ஆக்கரீதியாக ஈடுபடுவார்.

**பின்தொடர்வேலை :**

பாடசாலைச் சூழலை நேர்த்தியாக வைத்திருக்க தரம் 7 மாணவர்கள் ஒன்றிணைந்து ஒரு சங்கத்தை அமைத்து நடத்துதல்.

## இணைப்பு 7.2.1.1

கமலன் : எப்படி நிமலன், நேற்று லீவு தானே.

நிமலன் : சுகமாக இருக்கிறேன். நேற்று மரண உதவிச்சங்கத்தில் கூட்டம் நடந்தது. ஒவ்வொரு மாதமும் கூட்டம் நடக்கும்.

நீலா : ஆம், நானும் கண்டேன். நேற்று மாலா சனசமூக நிலையத்துக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்ததை.

மாலா : ஆம் நீலா. நேற்று சிறுவர் கழகத்தில் மாதாந்தக் கூட்டம் நடந்தது.

நீலா : இந்த வார இறுதியில் எங்களுடைய வீட்டுக்கு வரமுடியுமா?

மாலா : ஐயோ! எனக்கு வர முடியாமல் இருக்கும். ஏனென்றால் இந்தக் கிழமை விளையாட்டுக் கழகக் கூட்டம் இருக்கு என்று சொன்னார்கள்.

## இணைப்பு 7.2.1.2

உங்களுக்குக் கிடைத்த செயலட்டையின் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| தொடர் இலக்கம் | சமூக நிறுவனம் சமூக அமைப் பின் பெயர் | நிறுவனத்தின் கடமை | நிறுவனத்தின் பொறுப்பு | தனக்குக் கிடைக்கும் நன்மை | சமூகத்திற்கு கிடைக்கும் நன்மை |
|---|---|---|---|---|---|
| உ-ம்: 01 | சமயம் | இடத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாத்தல் | ஒழுக்கம் | கட்டுப்பாடு | ஒழுக்கம் |

## செயற்பாடு 7.2.2

**தேர்ச்சி மட்டம் :** சமூகத்தில் நிலவும் இடைத் தொடர்புகளை ஆராய்வார்.

**செயற்பாடு 7.2.2 :** "சீரான இடைத்தொடர்பகளைக் கட்டியெழுப்புவோம்"

**நேரம் :** 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 7.2.2.1
- இணைப்பு 7.2.2.2
- டிமை கடதாசி, எழுதுகருவி

**கற்றல் கற்பித்தல் செயன்முறை :**

**படி 7.2.2.1 :**

- இணைப்பு 7.2.2.1 இலுள்ள படத்தை வகுப்பில் முன்வைக்கவும்.
- அது பற்றி ஒரு சிந்தனைக் கிளறல் கலந்துரையாடலில் ஈடுபடவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • எவரும் தனித்துத் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது.<br>• அனைவருக்கும் இடைத்தொடர்புகள் கட்டாயம் தேவை.<br>• அனைத்து தொடர்புகளும் இடைத்தொடர்பிலும் நிறுவனத் தொடர்பிலும் தங்கியுள்ளது. |

(05 நிமிடங்கள்)

**படி 7.2.2.2 :**

- வகுப்பு மாணவர்களை 5 குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 7.2.2.2 இன் பிரதிகளைக் குழுக்களுக்கு வழங்கவும்
- செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தவும்.

(15 நிமிடங்கள்)

**படி 7.2.2.3 :**

- குழுத்தேடல்களை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்தவும்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களுக்கு இடமளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • சமூகத்தில் பல்வேறு மட்டத்திலான இடைத்தொடர்புகள் நிலவுகின்றன.<br>• அத்தகைய தொடர்புகள் தனிப்பட்ட சமூகத் தேவைகளைச் சிறப்பாக நிறைவேற்றுகின்றன. |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- தனியாக நிறைவேற்ற முடியாத தேவைகளைக் கூட்டாக பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.
- இடைத்தொடர்புகள் குடும்பத்துக்கு, கிராமத்திற்கு, நாட்டுக்கு மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் நன்மையளிக்கும்.
- சர்வதேசத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதன் மூலம் ஓர் உலகப் பிரசையாகக் கருமமாற்ற முடியும்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- சமூகத்தில் நிலவும் இடைத்தொடர்புகளை விபரிப்பார்.
- பரஸ்பரத் தொடர்புகளைச் சீராகப் பேணுவதை மதிப்பார்.
- இடைத்தொடர்பில் காணப்படும் கடமைகளையும் பொறுப்புகளையும் வெளிக்காட்டுவார்.
- குழுவில் இடைத்தொடர்பை நன்கு பேணுவார்.
- குழுச் செயற்பாடுகளில் ஆக்க ரீதியாகப் பங்கு பற்றுவார்.

**பின்தொடர்வேலை :**

இடைத்தொடர்புகளைச் சீராகப் பேணுவதன் மூலம் ஏற்படும் நன்மை, தீமைகளைக் காட்டும் பத்திரகைச் செய்திகளைச் சேகரித்து ஒரு கோவையை ஆக்கவும். வகுப்பு மாணவர்களைக் கொண்டு அதனை வாசிக்கச் செய்யவும்.

**இணைப்பு 7.2.2.1**



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**இணைப்பு 7.2.2.1 இன் படி**

- பெற்றோரும் பிள்ளைகளும்
- நண்பர்கள்
- உள்நாட்டு, வெளிநாட்டவர்கள்
- ஆசிரியர்
- மதகுருமார்கள்

**இணைப்பு 7.2.2.2**

**இணைப்பு 7.2.2.2 செயலட்டை**

உங்கள் குழுவுக்குக் கிடைத்துள்ள ஆளிடைத் தொடர்பைக் கவனத்திற் கொண்டு சீரான ஒரு இடைத் தொடர்பைக் கட்டியெழுப்ப உதவும் கடமைகள், பொறுப்புகளைக் காட்டும் அட்டவணையொன்றைத் தயார் செய்யவும்.

| | |
|---|---|
| 1 வது குழு | பெற்றோர் பிள்ளைகளின் இடைத் தொடர்பு |
| 2 வது குழு | ஆசிரியர் மாணவர் இடைத்தொடர்பு |
| 3 வது குழு | வேலை வழங்குவோர், ஊழியர் இடைத்தொடர்பு |
| 4 வது குழு | நண்பர்களுக்கிடையிலான தொடர்பு |
| 5 வது குழு | சமயப் பெரியார்கள் பொது மக்களுக்கிடையிலான தொடர்பு |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## செயற்பாடு 7.2.3

**தேர்ச்சி மட்டம்** : சமூகத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் உரிமைகளைச் சட்ட ரீதியாக அனுபவிக்கப் பழகுவார்.

**செயற்பாடு 7.2.3** : "சட்டத்துக்கடிபணிந்து உரிமைகளை அனுபவிப்போம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 7.2.3.1
- இணைப்பு 7.2.3.2

**கற்றல் கற்பித்தல் செயன்முறை :**

**படி 7.2.3.1** :

- இணைப்பு 7.2.3.1 இன்படி வகிபாகமேற்று நடித்தலைச் செய்விக்கவும்.
- அதன் கருத்தைப் புரிந்து கொள்ள மாணவர்களை வழிப்படுத்தவும்.
- அது பற்றிக் கருத்துக் கூற மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • அனைவருக்கும் தனியார் சுதந்திரத்திற்கான உரிமையுண்டு. |
| • சுதந்திரத்துக்கான அவ்வுரிமை எல்லையற்றதல்ல. |
| • சட்டத்துக்கேற்ப அவ்வுரிமைகளை அனுபவிக்க வேண்டும். |

(10 நிமிடங்கள்)

**படி 7.2.3.2** :

- வகுப்பு மாணவர்களை 4 குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 7.2.3.2 இன் பிரதிகளைக் குழுக்களுக்கு வழங்கவும்
- செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தவும்.

(10 நிமிடங்கள்)

**படி 7.2.3.3** :

- குழுத்தேடல்களை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்தவும்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களுக்கு இடமளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • பண்பாடான சமூக அங்கத்தவர்களிடையே உரிமைகளை அனுபவிக்க முடியும். |
| • உரிமைகள் இருந்தாலும் அவற்றை எல்லை கடந்து அனுபவிக்க முடியாது. |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- உரிமை என்பது சட்டத்துடன் இணைந்ததொன்றாகும்.
- உரிமைகளை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.
- கடமைகளை நிறைவேற்று உரிமைகளை அனுபவிக்க வேண்டும்.
- கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் ஒவ்வொருவருக் கிடையே உறவு விருத்தியடைந்து சமூகத்தில் ஆளிடைத்தொடர்புகள் உருவாகின்றன.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- நிகழ்வுக்குரிய தகவல்களை விபரிப்பார்.
- அந்த நிகழ்வில் உள்ள நல்ல விடயங்களை மதிப்பார். தீய விடயங்களை வெறுப்பார்.
- நிகழ்வொன்று தொடர்பான தகவல்களை சட்டம், விழுமியம் என்று பிரித்துக்காட்டுவார்.
- குழு உணர்வுடன் செயற்பாட்டில் ஈடுபடுவார்.
- பிரச்சினை தீர்த்தலாயின் தலையிட்டுக் கருமமாற்றுவார்.

**பின்தொடர்வேலை :**

நீங்கள் வாழும் சூழலில் உரிமைகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்களைத் தெரிவு செய்து அவற்றுக்குக் கிடைத்த தார்மீக மற்றும் சட்ட ரீதியாக தண்டனைகளைப் பிரித்தெழுதுக. அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்த ஆலோசனைகளை முன்வைத்தல்.

**இணைப்பு 7.2.2.1**

**வகிபாகமேற்றல்**

- டிக்கட் எடுக்காது தினமும் பஸ்ஸில் வேலைக்குச் செல்லும் ஒருவர்.
- அது குற்றம் எனவும் தண்டனை கிடைக்கும் என்றும் அவரது நண்பனை எச்சரித்தல்.
- ஒரு நாள் டிக்கட் பரிசோதகரிடம் பிடிபடல்.

**இணைப்பு 7.2.3.2**

**செயலட்டை**

தரம் 7ல் கற்கும் சிரிதரன் அடுத்த வாரம் நடைபெறவுள்ள தவணைப்பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருந்ததுடன் அவனது தந்தை இருதயக் கோளாறுக்காகச் சிகிச்சை பெற்றுவந்து வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். பக்கத்து வீட்டார் தம் வானொலியை உச்சத்தொனியில் வைத்துள்ளமையால் சிரிதரனுக்கும் அவனது அப்பாவுக்கும் பெருந்தொல்லையாக இருந்தததது. அதற்காக சிரிதரன் என்ன செய்ய வேண்டும் என்பதை அட்டவணையில் எழுதுவார். (சட்டம், தார்மீகம் என்ற இருபிரிவுகளில்)

| சட்டம் | தார்மீகம் |
|---|---|
| | |

# செயற்பாடு 7.2.4

**தேர்ச்சி மட்டம்** : உரிமைகளுடன் இணைந்த கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவார்.

**செயற்பாடு 7.2.4** : "கடமைகளைச் செய்வோம் உரிமைகளைப் பெறுவோம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 7.2.4.1
- இணைப்பு 7.2.4.2

**கற்றல் கற்பித்தல் செயன்முறை :**

**படி 7.2.4.1** :

- இணைப்பு 7.2.4.1 இலுள்ள படத்தை வகுப்பில் முன்வைக்கவும்.
- அதனை மாணவர்கள் அவதானிக்க வழிப்படுத்தவும்.
- அது பற்றிக் கருத்துக் கூற மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - எந்தத்தொழிலையும் செய்பவர் தம் கடமையைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டும்.
> - தம் தொழிற் கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும்.
> - மக்களின் தேவைகளை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.
> - தனது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள சுயநலமியாகக் கூடாது.

(10 நிமிடங்கள்)

**படி 7.2.4.2** :

- வகுப்பு மாணவர்களை 4 குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 7.2.4.2 இன் பிரதிகளைக் குழுக்களுக்கு வழங்கவும்
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தவும்.

(10 நிமிடங்கள்)

**படி 7.2.4.3** :

- குழுத்தேடல்களை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்தவும்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களுக்கு இடமளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- குடும்ப அங்கத்தவர் என்ற வகையில் கடமைகளை நிறைவேற்றி உரிமைகளைப் பெற வேண்டும்.
- அயற் சமூகத்தின் அங்கத்தவர் என்ற வகையில் கடமைகளை நிறைவேற்றி உரிமைகளைப் பெற வேண்டும்.
- ஒரு பாடசாலை மாணவர் என்ற வகையில் கடமைகளை நிறைவேற்றி உரிமைகளைப் பெறவேண்டும்.
- ஒரு சுற்றாடல் நலவாதி என்ற வகையில் கடமைகளை நிறைவேற்றி உரிமைகளைப் பெற வேண்டும்.
- ஒரு தொழிலைச் செய்ய எதிர்ப்பார்ப்பதாயின் அல்லது தொழிலில் ஈடுபட்டிருந்தால் கடமைகளை நிறைவேற்றி உரிமைகளைப் பெற வேண்டும்.


(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- கடமைகளுக்கும் பொறுப்புகளுக்குமிடையேயுள்ள தொடர்பை விபரிப்பார்.
- உரிமைகளைப் பெற்றுக் கொள்ள கடமைகளைச் செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.
- உரிமைகள், கடமைகளை வகைப்படுத்துவார்.
- குழு உணர்வுடன் செயற்பாட்டில் ஈடுபடுவார்.
- குழுவில் உயிர்ப்பான பங்குபற்றலை வெளிக்காட்டுவார்.

**பின்தொடர்வேலை :**

உரிமைகள், கடமைகள் வெளிக்காட்டப்படும் வகையில் பாடல், கவிதை, சித்திரம் என்பவற்றை ஆக்கவும்.





Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**இணைப்பு 7.2.4.2**

## செயலட்டை

உங்கள் குழுவுக்குக் கிடைத்துள்ள செயலட்டையின் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| கடமைகள் | உரிமைகள் |
|---|---|
| | |

**குழு 01**

குடும்ப அங்கத்தவர் என்ற வகையில் உங்களுடைய கடமைகள் உரிமைகள்.

**குழு 02**

பாடசாலை மாணவர் என்ற வகையில் உங்களுடைய கடமைகள் உரிமைகள்

**குழு 03**

அயற் சமூகத்தின் அங்கத்தவர் என்ற வகையில் உங்களுடைய கடமைகள் உரிமைகள்.

**குழு 04**

நீங்கள் எதிர்பார்க்கும் எதிர்காலத்தொழிலில் உங்களுடைய கடமைகளும் உரிமைகளும்

**குழு 05**

சுற்றாட நலன் விரும்பி என்ற வகையில் உங்களுடைய கடமைகள், உரிமைகள்.

# 7.3 எமது கலாசாரம்

## அறிமுகம்

இலங்கை நாடு சமூகக் கலாசாரப் பன்மைத்தன்மையுடன் கூடியது. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலேயர், பறங்கியர், வேறு சமூகத்தவர்கள் என்றவாறு பல்வேறு இனக்குழுக்கள் இலங்கையை வசிப்பிடமாகக் கொண்டுள்ளனர். பல மொழிகளைப் பேசும், பல்வேறு சமயங்களைப் பின்பற்றும் பிரிவினர் வேறுபட்ட கலாசாரங்களைக் கொண்டவர்களாக உள்ளனர். எண்ணிக்கை ரீதியாகப் பார்க்கும் போது சிங்களவர் பெரும்பான்மையினராக இருப்பதுடன் ஏனைய இனத்தவர்களும் எல்லா மாகாணங்களிலும் பரந்து வாழ்கின்றனர். எமது நாட்டில் காணப்படும் கலாசாரப் பல்வகைமை பண்டைக்காலம் முதலே இலங்கைச் சமூகத்தைப் போசிப்பதில் பங்களிப்புச் செய்துள்ளதால் நாம் இப்பல்வகைமையைப் புறக்கணிப்பதில்லை. தேசிய பொருளாதாரத்துக்கு, தேசிய அரசியலுக்கு மட்டுமன்றி அரச நிர்வாகத்திலும் சகல இனத்தவர்களும் பங்களிப்புச் செய்வதால் கலாசாரப் பல்வகைமை தொடர்பாக கரிசனை கொள்ள வேண்டும். எனவே கலாசாரப் பல்வகைமை மதிப்பிடப்பட வேண்டும். இந்நிலையில் தாம் விரும்பும் ஒரு சமயத்தைப் பின்பற்ற, மொழியைப் பேச, நம்பிக்கையைப் பேண தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து கலாசாரத்தை அனுபவிக்க அரசியல் யாப்பு மூலம் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கலாசாரப் பல்வகைமையின் கீழ் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவது இலங்கைச் சமூகத்தினரின் இன்றைய தேவையாகவுள்ளது. எமது கலாசாரம் எனும் இவ்வலகைக் கற்பதன் பிரதான நோக்கம் தமது கலாசாரத்தை மதித்து ஏனைய கலாசாரங்களை கௌரவிக்கும் சீரான மனப்பாங்கை விருத்தி செய்து கொள்வதன் மூலம் சமநிலை ஆளுமையுடன் கூடிய பிரச்சினைகளை இலங்கைச் சமூகத்துக்கு வழங்குவதாகும்.

### 7.3 எமது கலாசாரம்

**தேர்ச்சி** :- பன்மைச் சமூகத்தில் தமது கலாசார தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொண்டு ஏனைய கலாசாரங்களை கௌரவித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** :-

- தமது கலாசாரப் பங்களிப்புகளை மதித்து ஏனைய கலாசாரங்களை மதிப்பார்.
- அனைத்துக் கலாசாரங்களிலும் காணப்படும் சிறப்பியல்புகளைப் பகுப்பாய்வு செய்வார்.
- தேசிய தனித்துவத்தை மேம்படுத்தி தேசிய அடையாளங்களைச் சரியாகப் பயன்படுத்தி அவற்றை மதிப்பார்.
- ஒரு நற்பிரசையிடமுள்ள பண்பாடுகளை மதிப்பார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**பாட உள்ளடக்கம் :**

## 7.3.1 எமது கலாசாரம்

### 7.3.1.1 கலாசாரம் என்றால் என்ன என்பது பற்றிய எளிமையான விளக்கம்

- கலாசாரம் என்பது ஒரு சமூகத்தில் வாழுபவர்களில் மொழி, ஆடையணிகள், உணவுப் பானங்கள், கலை நுட்பங்கள், இலக்கியம், கல்வி, சட்டம், பழக்கவழக்கங்கள், குணப்பண்புகள், நம்பிக்கைகள், வழிபாடுகள் ஆகிய அனைத்து அம்சங்களுமாகும்.

### 7.3.1.2 கலாசாரம் தொடர்பான வரைவிலக்கணங்கள்

"கலாசாரம் அல்லது பண்பாடு என்பது அறிவு, வழிபாடு, கலை, சட்ட விழுமியம், பழக்கவழக்கம் மற்றும் சமூகத்தில் வாழும் ஒருவர் என்ற வகையில் அடையப்பெறும் இசைவாக்கங்கள், ஆற்றல்கள் என்பன அடங்கிய சிக்கலானவற்றின் கூட்டாகும்."

E.B. TYLOR "PRIMITIVE CULTURE"
JOHN MURRAY, LONDON


"குறியீட்டு ரீதியாக சமூகமாக உரித்தாக்கிக் கொள்வதும், பரம்பரையாக தமதாக்கிக் கொள்வதுமான அனைத்து நடத்தைக் கோலங்களுக்கும் வழங்கக் கூடிய கூட்டான பெயர்." என்பதாகும்.

(சாள்ஸ் என்பூட் என்ற சமூகவியலாளர் 1944 இல் சமூகவியல் அகராதியில் வழங்கிய வரைவிலக்கணம்)

"அனைத்து சமூகக் கருமங்களிலும் அதாவது பரந்த ரீதியில் எழுந்து, மொழி, திருமணம், உரிமை முறைச் சட்டங்கள் வழிபாடுகள், தொழிலாளர் சபைகள் ஆகிய அனைத்துக்கும் கலாசாரம் எனக் கூறப்படுவதாகக் காட்டப்பட்டுள்ளது."
(சீ. வில்சர், 1920 இல் வெளியிட்ட 'அமெரிக்க மானிடவியலாளர்' என்ற நூலின் படி)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 7.3.1.3 கலாசார அம்சங்கள்




## 7.3.1.3 கலாசாரத்தை வழங்குதல்.

### 7.3.1.3 கலாசாரம் தொடர்பான வரைவிலக்கணங்கள்

- சமூகத்தின் நிலவுகை தங்கியிருப்பது அதன் அங்கத்தவர்கள் இக்கலாசார அம்சங்களை ஒரு பரம்பரையிலிருந்து அடுத்த பரம்பரைக்கு சரியாகக் கையளிக்கும் விதத்தைப் பொறுத்தாகும்.
- கலாசாரத்தை கையளிக்கும் (வழங்கும்) முக்கிய நிறுவனங்கள்.
  - குடும்பம்
  - கல்வி நிறுவனங்கள்
  - சமய நிறுவனங்கள்
- குடும்பத்தின் கலாசாரத்தை வழங்குதல்.
  அன்றாட வாழ்க்கைக் கோலத்தின் பல்வேறு கருமங்களை முறையாக மேற்கொள்ளப் பழகுதல்.
  உ-ம்: உணவுப் பழக்கம்
  உரிய நேரத்தில் மட்டும் உணவு உண்ணல்.
  சாப்பிட முன் கை கழுவுதல்
  உணவைப் பங்கிட்டு உண்ணல்
  உணவைக் கைவிரல்களால் மட்டும் பிசைதல்
  விரைவாகச் சாப்பிட்டு முடிந்தால் அனுமதி கேட்டு எழும்பதல்.
- கல்வி நிறுவனங்கள் கலாசாரத்தை வழங்குதல்.
  உ-ம்: பாடசாலை
  உரிய நேரத்துக்குப் பாடசாலைக்குச் சமூகமளித்தல்
  உரிய பாடவேளைகளில் கற்றலில் ஈடுபடல்
  பாடசாலைச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.
- சமய நிறுவனங்கள் கலாசாரத்தை வழங்குதல்.
  - செய்ய வேண்டியவை, தவிர்க்க வேண்டியவைகளைக் காட்டுதல்
  - சரி பிழைகளைச் சுட்டிக்காட்டல்
  - நன்மை, தீமைகளைப் பிரித்துக்காட்டல்
  - மிகவும் நல்ல மிகவும் மோசமனவைகளை இனங்காட்டல்.


Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.


- கலாசாரத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்
    - சமூகத்தின் நிலவுகை தீர்மானிக்கப்படல்
    - தேசிய தனித்துவம் பாதுகாக்கப்படல்
    - ஆளிடைத் தொடர்புகள் பாதுகாக்கப்படல்
    - தனியாள் ஆளுமை விருத்தியடைதல்
    - மனித நடத்தை நெறிப்படுத்தப்படல்
    - மனித நடத்தை விருத்தியடைதல்
    - மனித மனப்பாங்குகள், விழுமியங்கள் விருத்தியடைதல்


## 7.3.2. பல்வேறு கலாசாரங்களுக்குரிய சிறப்பியல்புகள்

### 7.3.2.1 கலாசாரப் பல்வகைமைக்கான காரணங்கள்

- இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய இனத்தவர்கள் வாழ்கின்றனர்.
- அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்துவமான கலாசார இயல்புகள் உண்டு.








Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இன மதப் பல்வகைமையின் படி வேறு அம்சங்களிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.
- அத்தகைய வேறுபாடுகள் காணப்படும் அம்சங்கள்
  * மொழியும் இலக்கியமும்
  * கலை
  * உணவு, பானங்கள்
  * ஆடையணிகள்
  * பழக்க வழக்கங்கள்


- பல்வேறு சமயத்தவர்கள், இனத்தவர்களின் தனித்துவ விழாக்கள் உண்டு.




- கலாசார இயல்புகளை இனங்காணக் கூடிய வேறு சந்தர்ப்பங்கள்
  * குழந்தை பிறப்பின்போது
  * முதல் உணவூட்டல்
  * காது குத்துதல்
  * ஏடு தொடக்குதல் (வித்தியாரம்பம்)
  * பூப்பெய்துதல்
  * திருமண வைபவம்
  * மரணச் சடங்கு

### 7.3.3. எல்லாக் கலாசாரங்களிலும் காணப்படும் பொது இயல்புகள்

- எல்லாக் கலாசாரங்களிலும் பொது இயல்புகளுண்டு.




- பல்வேறு கலாசாரங்களின் இடைத்தொடர்பு சமூகத்தின் நிலவுகைக்கு அவசியமாகும்.

  * பல்வேறு விழாக்கள்

  உ-ம்:

  * சர்வ சமய விழா

  * சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு

  சர்வ சமய நிலையம்

  * சிவனொளிபாதமலை

  * கதிர்காமம்

  திருமணத் தொடர்புகள்

  * முஸ்லிம் - சிங்கள

  * தமிழ் - சிங்கள

  * பௌத்தம் - கிறிஸ்தவம்

  * கலை நுட்பங்கள்

  உ-ம்:

  * பொலன்னறுவை, அனுராதபுர இராச்சியங்களின் சிதைவுகளில் பல்வேறு கலாசாரங்களின் இயல்புகள் கண்டு பிடிக்கப்பட்டன.

  * பொலன்னறுவைக் காலத்தில் சந்திரவட்டக்கல்லில் இருந்து பசுமாடு அகற்றப்பட்டமை.

  * குப்தர் செல்வாக்குள்ள புத்தர் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

* ஆடையணிகள்
  பல்வேறு கலாசாரங்களுக்குரிய ஆடையணிகளை எல்லோரும் அணிதல்.


உ-ம்:
  * சாரி
  * சட்டை
  * காற்சட்டை
  * சல்வார்

  வாழ்த்துதல், விழித்தல்
  கை குழுக்குதல்.

* சமயம்
  * சிலைவணக்கம்
  * வரவேற்புக்கு மலர் கொத்துப்பாவனை
  * விளக்கேற்றல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- அனைத்து கலாசாரங்களையும் சேர்ந்த மக்கள் நாட்டின் பொருளாதாரத்துக்கு, அரசியலுக்கு, சட்டத்திற்கு, சமாதானத்துக்கு, சமூக நலன்களுக்குப் பணியாற்றல்.



- பொருளாதாரத் துறையில் அனைத்துக் கலாசாரங்களையும் சேர்ந்த மக்கள் பங்களிப்புச் செய்கின்றனர்.

  உ-ம்:
    * பயிர்ச்செய்கை
    * கால்நடை வளர்ப்பு
    * மீன்பிடி
    * கைத்தொழில்
    * சேவைகள்
- சமூகத்தின் சீரான நிலவுகைக்குரிய மனிதப் பண்புகளை, ஆற்றல்களை விருத்தி செய்யும் தேவை பற்றி அனைத்தும் கலாசாரங்களும் வலியுறுத்துகின்றன.
- சமூகத்தேவைக்கு இசைவாக்கம் அடையும் ஆற்றல் அனைத்துக் கலாசாரங்களுக்கும் பொதுவானதாகும்.

  உ-ம்:
    * பெண்கள் தொழில் பார்த்தல்.
    * நோய் தீர்க்கும் பழைய முறைகளுக்குப் பதில் புதிய வைத்திய முறை
    * தமது தேவைக்கு புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தல்.

### 7.3.4. தேசிய தனித்துவமும் தேசிய ஐக்கியமும்

- ஒரு நாட்டில் பிறக்கும் மற்றும் பதிவின் மூலம் குடியுரிமை பெறும் மக்கள் அந்த நாட்டவராகக் கருதப்படுவர்.
- தேசம் அல்லது நாடு என்பது

  "தேசத்தின் உள்ளடக்கமானது ஒரே மொழியைப் பேசும் அல்லது ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் அன்று, மாறாக முற்காலத்தில் பொதுவாக ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வை எதிர்காலத்தில் கொண்டு நடத்தும் விருப்பத்தின் அடிப்படையிலாகும்."

  (1882 - அர்னஸ்ட் ரேனன்)

  "ஒரு இனத்துக்கு ஓர் அரசு அவசியம். எனவே ஒரு இனத்தவருக்கு ஒரு அரசு என்பது தேசிய அரசுகளின் மனப்பாங்காகும்."

  Hans J. Morganthan politics Among Nations 5th Editon
  (alfred A Knopf U.S.A. 1998)

**அரசின் கட்டமைப்பைப் பின்வருமாறு விபரிக்கலாம்.**

- வரையறுக்கப்பட்ட நிலப்பிரதேசம்
- மக்கள் தொகை
- அரசாங்கம்
- இறைமை

  அரசு அல்லது நாடு என்ற கருத்து மேற்கூறிய அம்சங்களுடன் கூடியதாக இருக்க வேண்டும்.
- தமது கலாசாரத்தை மதித்து ஒரு நாட்டில் வாழும் அனைத்து குடி மக்களும் ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வுடன் கருமமாற்றுவதன் மூலம் தேசியம் கட்டியெழுப்பப்படுகின்றது.

  "பொது மூலத்தையும் சம்பிரதாயங்களையும் கொண்ட ஒரு மக்கள் கூட்டத்தின் சிறப்பாகத் தெரியும் ஒரு பண்பு தேசியம்" என வரைவிலக்கணப்படுத்தலாம்.

"ஒரு நாட்டவர் ஆளும் விருப்பத்தோடு ஒழுங்கமைத்த ஒரு மக்கள் குழு"
- பிரட்ரிக் ஹேர்ம்ஸ் -

நாட்டவர்/ தேசத்தவர் என்பது உதாரணம்
இலங்கையர்கள்
இந்தியர்கள்
அமெரிக்கர்கள்
ஜப்பானியர்கள்

- ஒரு நாட்டவரில் பல இனங்கள் வாழ முடியும்.
  உ-ம்: சிங்களவர்
  தமிழர்
  முஸ்லிம்கள்
- இனமாக அன்றி இலங்கையர் என்ற வகையில் கருமமாற்றுவதன் மூலம் அபிவிருத்தியை அடைய முடியும்.

இனங்களாகப் பிரிந்து கருமமாற்றும்போது அபிவிருத்தியை அடைய முடியாது. வேற்றுமை, வெறுப்பின் காரணமாக ஒவ்வொருவருக்கிடையே சந்தேகம், அவ நம்பிக்கை ஏற்படும். அவ்வாறாயின் பலமான முறையில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது போகும்.

இனரீதியாகப் பிரிந்து விடாது பலமாகவும் ஒற்றுமையாகவும் ஒரு நாடு என்ற வகையில் எழுந்து நிற்பதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளில் அபிவிருத்தி காண முடியும். பரஸ்பர நம்பிக்கை, ஒத்துழைப்பு, ஒற்றுமை ஒரு நாட்டவர் என்ற வகையில் கருமமாற்றப் பழகுவதன் மூலம் ஒரு நாட்டின் அபிவிவருத்தியும் தனித்துவமும் மேன்மையடையும்.

- எமது நாட்டுக்கான சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக நின்று கருமமாற்றினர்.
- சுதந்திரத்தைப் பெறுவதற்காக தனித்தனி இனங்களாகவன்றி ஒரு நாட்டவர்கள் என்ற வகையில் இலங்கையில் அர்ப்பணிப்புடன் கருமமாற்றியமை சுதந்திரப் போராட்ட வரலாற்றைப் பார்க்கும் போது அறியலாம்.

**சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடிகள்:**

டீ.எஸ். சேனாநாயக்க
எப்.ஆர். சேனாநாயக்க
ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள தேரர்
வாரியப்பொல ஸ்ரீ சுமங்கள தேரர்
டி.பீ ஜாயா
சித்திலெப்பே
பொன்னம்பலம் இராமநாதன்
பொன்னம்பலம் அருணாச்சலம்
ஸ்ரீல ஸ்ரீ அறுமுக நாவலர்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

### 7.3.5. தேசியக்கொடி, தேசிய கீதம், தேசிய இலச்சினை

**பாட உள்ளடக்கம்.**

- ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தேசிய கீதம், தேசியக்கொடி, தேசிய இலச்சினை
- இலங்கைக்கும் தேசிய கீதம், தேசிய கொடி, தேசியச் இலச்சினை என்பன உள்ளன.

**தேசியக்கொடி**

- இன்றைய தேசியக்கொடி அமைக்கப்பட்டதன் பின்னணி
  * 1948 பெப்ரவரி 04 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தமை
  * 1948 மார்ச் 16 ஆம் திகதி அப்போதைய பிரதமர் டீ.எஸ். சோனாநாயக்க தேசியக் கொடியை அமைப்பதற்கான ஒரு குழுவை நியமித்தார் அக்குழுவின் அங்கத்தவர்கள்.

  தலைவர் :- எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க

  செயலாளர்:- பேராசிரியர் செனரத் பரண வித்தாரன


  டி.பீ ஜாயா

  ஜி.ஜி பொன்னம்பலம்

  ஜே.ஆர். ஜயவர்த்தன

  சேர் லலித ராஜபக்ச

  சேர் ஜோன் கொத்தலாவல.



- தேசியக்கொடியில் உள்ள நிறங்களும் குறியீடுகளும்
  * சிவப்புப் பின்னணியில் வாழை ஏந்திய சிங்கம்

    அரச இலைகள் நான்கு

    பொன் நிறக்கோடு

    பச்சை நிறக்கோடு

    மஞ்சள் நிறக்கோடு
- தேசியக்கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பங்கள்
  * சுதந்திர தின விழா
  * அரச விழாக்கள்
  * தேசிய விழா
  * ஒரு பாடசாலையில் அல்லது நிறுவனத்தில் நடைபெறும் முக்கிய விழாக்கள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேசியக் கொடியைப் பயன்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள்**

- ஏற்றுவதற்கு முன் தேசியக்கொடியை மடித்துக்கட்டி உயர்ந்த இடத்தில் இணைத்து வைக்க வேண்டும். (எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தேசியக் கொடியை நிலத்தில் போடக் கூடாது)
    * தேசியக்கொடி காட்சிப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அதற்கு அதியுயர் கௌரவம் வழங்கப்பட வேண்டும்.
    * ஒரு வெளிநாட்டுத்தலைவர் இலங்கைக்கு விஜயம் செய்யும்போது அந்த நாட்டின் தேசியக் கொடி காட்சிப்படுத்தப்படும்போது இலங்கையின் தேசியக்கொடியும் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
    * சமயக்கொடிகளுடன் ஏற்றும்போது சமமான உயரத்தில் இரண்டும் ஏற்றப்பட வேண்டும்.
    * சர்வதேச மாநாடுகள் போன்றவற்றில் அனைத்து நாடுகளின் கொடிகளும் சமமான உயரத்தில் ஏற்றப்பட வேண்டும்.
    * ஐக்கிய நாடுகள் கொடியுடன் ஏற்றப்படும் போது அது தேசியக்கொடிக்கு இடது பக்கமாக அல்லது வலது பக்கமாக ஏற்றப்படல் வேண்டும். பொது வழக்கு தேசியக் கொடி முகப்புத்திசையில் ஏற்றப்படலாகும்.
- பிரதேச கொடிகள், பாடசாலைக்கொடிகளுடன் தேசியக் கொடி ஏற்றப்படும் போது தேசியக்கொடி அனைத்துக்கும் மத்தியில் உயரத்தில் ஏற்றப்பட வேண்டும்.
    * ஒன்றுக்கொன்று அண்மையில் உள்ள கம்பங்களில் கொடிகள் ஏற்றும்போது முதலில் ஏற்றப்பட வேண்டியதும் இறுதியாக இறக்கப்பட வேண்டியதும் தேசியக் கொடியாகும்.
    * தேசியக் கொடி ஏற்றும்போது அதன் குத்துப்பக்கங்கள் கொடிக் கம்பம் பக்கமாக இருக்குமாறு ஏற்ற வேண்டும்.
- தெளிவாகத் தெரியும் இடத்தில் தேசியக்கொடி ஏற்றப்படல் வேண்டும்.
- பாதைகளுக்குக் குறுக்காக தேசியக்கொடி ஏற்றப்படும்போது சிங்கத்தின் தலைப்பாகம் மேற்பக்கம் இருக்குமாறும் நேராக இருக்குமாறும் ஏற்றப்பட வேண்டும்.

**தேசியக் கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்குகள்**

- தேசியக் கொடியை ஏற்றுதல், இறக்குதல் கௌரவமாகவும் மெதுவாகவும் செய்யப்படல் வேண்டும்.
- தேசியக்கொடி ஏற்றப்பட்டவுடன் தேசிய கீதம் இசைக்கப்படல் வேண்டும்.
- பங்குபற்றும் அனைவரும் கவனநிலையில் எழுந்து நிற்றல் வேண்டும்.
- அனைவரும் தேசியக்கொடிக்கு முகத்தைத்திருப்பியவாறு இருத்தல் வேண்டும்.
- இராணுவச் சீருடையில் இருப்போர் தேசியக் கொடிக்கு உரிய கௌரவம் அளிக்க வேண்டியதுடன் சாதாரண மக்கள் தலைப்பாகைகளை அகற்ற வேண்டும்.
- இரவு நேரங்களில் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்படுமாயின் வெளிச்சம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

**ஊர்வலங்களில் தேசியக்கொடியைப்பயன்படுத்தல்**

- எப்போதும் கம்பம் நேராக இருத்தல் வேண்டும்.
- வேறு கொடிகளுடன் கொண்டு செல்லும்போது அக்கொடிகளுக்கு மத்தியில் முன்னால் தேசிய கொடி இருத்தல் வேண்டும்.
- விருது வழங்கும்போது தேசியக் கொடியைக் கீழே இறக்கக் கூடாது.
- வேறு கொடிகளுடன் கொண்டு செல்லும்போது தேசியக் கொடி ஊர்வலத்தில் வலது பக்கமாகக் கொண்டு செல்லப்படல் வேண்டும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**பேச்சாளர் மேடைகளில் தேசியக்கொடி ஏற்றி வைத்தல்**

- பேச்சாளர் சபையைப் பார்த்து இருக்கும்போது அவரின் வலது பக்கமாக இருக்குமாறு தேசியக்கொடி ஏற்றப்பட்டிருத்தல் வேண்டும்.
- அவ்வாறின்றேல் பேச்சாளரின் பின்பக்கமாக சுவரில் அவருக்கு மேலாக ஏற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

**அரைக்கம்பத்தில் வைத்தல்**

- தேசிய துக்க தினங்களின்போது தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்படும். அவ்வாறு அரைக்கம்பத்தில் விடப்படும் சந்தர்ப்பங்கள் அரசினால் அறிவிக்கப்படும்.
- முதலில் கொடியைக் கம்பத்தின் உயரம்வரை ஏற்றி பின்னர் அரைக்கம்ப இடம்வரை (கொடிக்கம்பத்தில் $^{1}/_{3}$ பகுதி உயரம் தாழ்த்தி) இறக்கி பறக்க விடப்படல் வேண்டும்.

தேசியக்கொடியை அதன் கௌரவத்திற்கு பங்கம் ஏற்படும் வகையில் பயன்படுத்தல் கூடாது. அவ்வாறு தவிர்க்க வேண்டிய விடயங்கள்.

- ஓர் ஆடையாக அல்லது போர்வையாகப் பயன்படுத்தக்கூடாது.
- தேசியக் கொடியை கூரை முகப்பில் மறைப்பாகப்பாவிக்கக் கூடாது.
- ஒன்றை வைப்பதற்கு அல்லது போட்டு வைப்பதற்குப் பாவிக்கக் கூடாது.
- வர்த்தக விளம்பரங்களுக்குத் தேசியக் கொடியைப் பயன்படுத்தல் கூடாது.
- தேசியக் கொடிச் சின்னத்தை கைக்குட்டை, தலையணை உறை, விரிப்பு அல்லது வேறு சுற்றுகையாகப் பாவிக்கக்கூடாது.
- வாகனங்களின் கூரை, பக்கங்கள், பின்பக்கம் மறைப்புக்காகத் தேசிய கொடியைப் பயன்படுத்தக்கூடாது.
- பாதுகாப்புப் படையினர், தீயணைப்புப்படையினர், பொலிஸாரின் சீருடைகளில் தேசியக் கொடிச்சின்னம் பொருத்தப்பட முடியும்.
- தேசியக் கொடி கிழியும் வகையில் அல்லது பழுதடையும் வகையில் பொருத்தவோ, காட்சிப்படுத்தவோ, களஞ்சியப்படுத்தவோ கூடாது.
- கிழிந்த அல்லது மங்கிய அல்லது பழுதடைந்த தேசியக்கொடிகளைக் காட்சிப்பாடுத்தக் கூடாது.
- ஒருவரை கௌரவிக்க தேசியக்கொடியைத் தாழ்த்துதல் கூடாது.

## தேசிய கீதம்

- 
- 

- 

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- தேசிய கீதம்

ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சிரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் உன ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ நமோ தாயே

நமதருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறியமலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ நமோ தாயே

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## அரச இலட்சினை

- அரசின் குறியீடு அரச இலட்சினையாகும்.
- அரசுடைமை என்பதைக்காட்டும் சின்னமாக இது உள்ளது.



1972 இல் இலங்கை குடியரசானதைத் தொடர்ந்து இப்போது பாவனையிலுள்ள அரச இலட்சினை பாவனைக்கு எடுக்கப்படல்.


அரச இலட்சினையில் உள்ள குறியீடுகள்

* சிங்கம் - வீரம்
* பூரணகமலம் - சௌபாக்கியம்
* சூரியன், சந்திரன் - நிலைபேறான தன்மை
* தானியக்கதிர் - செழிப்பு
* தர்மச்சக்கரம் - தார்மீகம்
* தாமரை இதழ் - தூய்மை

### 7.3.6. தேசிய மலரும் தேசிய மரமும்

#### 7.3.6.1 தேசிய மலர்

- தேசிய மலர் நீலோட்ப மலர்
- இதன் தாவரவியற் பெயர் - நிம்பெயா ஸ்டெல்லாட்டா
- வருடம் பூராவும் பூக்கும் இது ஒரு நீர்த்தாவரமாகும்
- நீலோட்பல இலைகளில் இருந்து முளைவிடும்.
- இது மூலிகைக் குணமுள்ள தாவரம்
- இம்மலரைத் தேசிய மலராக ஆக்குவதற்கான சிபார்சுகளைப் பெற்றுக்கொள்ளும்போது அதன் உள்நாட்டுத் தனித்துவம், வரலாற்று ரீதியான, கலாசார ரீதியான முக்கியத்துவம் என்பன கருத்திற் கொள்ளப்பட்டன.




தேசிய மலர்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேசிய மரம்**

- தேசிய மரம் நாக மரமாகும்
- இதன் தாவரவியற் பெயர் மெசுவா பெர்ரேயா
- இலங்கை இதன் தாயகமாக இருப்பதுடன் இந்தியா, பர்மா, மலாயா ஆகிய நாடுகளிலும் காணப்படுகின்றது.
- உறுதியான இம்மரத்தில் பலவகைகளுண்டு (நீர் நாகம், நறுமண நாகம்)
- இம்மரத்தின் எல்லாப்பகுதிகளும் மூலிகைக் குணமுள்ளவை
- நாகமரத்தை தேசிய மரமாகச் சிபார்சு செய்யும்போது அது இலங்கையைத் தாயகமாகக் கொண்டதாக இருத்தல், வரலாற்று முக்கியத்துவம், கலாசார முக்கியத்துவம், வெளித்தோற்றம் ஆகிய விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன.



**தேசிய விளையாட்டு**

- கரப்பந்தாட்டம் (வொலிபோல்)

**தேசிய பறவை**

- கானகக் கோழி

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## செயற்பாடு 7.3.1

**தேர்ச்சி மட்டம் :** தமது கலாசாரத்தை மதித்து ஏனைய கலாசாரங்களுக்கும் மதிப்பளிப்பார்.

**செயற்பாடு 7.3.1 :** "கலாசாரத்தை இனங்காண்போம்"

**நேரம் :** 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 7.3.1.1 இலுள்ள படம்
- இணைப்பு 7.3.1.2 இலுள்ள செயற்பத்திரம்
- டிமய் கடதாசி, எழுதுகருவி

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 7.3.1.1 :**

- இணைப்பு 7.3.1.1 இலுள்ள படத்தையும் வினாக்களையும் முன்வைத்து ஒரு சிந்தனைக் கிளறலை நடத்தவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • இலங்கை சமூகக் கலாசாரப் பல்வகைமை கொண்டது. |
| • இலங்கை மக்கள் சமூகம் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலேயர், பறங்கியர் ஆகிய இனங்களையும் கொண்டது. |
| • பல்வேறு சமயங்களைப் பின்பற்றும் இவர்கள் வெவ்வேறு கலாசாரங்களுக்கு உரிமை பாராட்டுபவர்கள். |
| • கலாசாரப் பல்வகைமையின் கீழ் தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்பப்பழகுதல் காலத்தின் தேவையாகும். |

(05 நிமிடங்கள்)

**படி 7.3.1.2 :**

- மாணவர்களைப் பொருத்தமாகக் குழுக்களாக்கவும்.
- இணைப்பு 7.3.1.2 இலுள்ள செயலட்டையைக் குழுக்களுக்கு வழங்கவும்.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- தேவையான உதவிகளைச் செய்யவும்

(20 நிமிடங்கள்)

**படி 7.3.1.3 :**

- குழுச் செயற்பாடுகளை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்தவும்.
- அறிவைப் பரிமாறிக் கொள்ளும் வகையிலான கலந்துரையாடலை நடத்தவும்.
- பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடலின்போது வெளிக் கொணரமுயற்சிக்கவும்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- மக்களின் வாழ்க்கை முறை கலாசாரம் என அறிமுகப்படுத்தலாம்.
- பல சமயங்களைப் பின்பற்றும், பலமொழிகளை பேசும் பல்லின மக்கள் இலங்கையில் வாழ்வதனால் சமூகத்தில் பன்மைத்தன்மையைக் காணலாம்.
- பழக்கவழக்கங்கள், குணவியல்புகள், நம்பிக்கைகள் வழிபாடுகள், வீடுகள், மொழியும் இலக்கியமும், ஆடையணிகள், உணவுப் பானங்கள், சட்டம், கலை, கல்வி என்பன கலாசார அம்சங்களாகும்.
- பல்லின மக்களும் ஒத்துணர்வுடன் கருமாற்ற வேண்டும்.
- சமூகத்தினர் நிலவுகைக்கு கலாசாரம் பரம்பரை பரம்பரையாக வழங்கப்பட வேண்டும்.
- கலாசாரத்தை வழங்கும் நிறுவனங்களாகக் குடும்பம், கல்வி நிறுவனங்கள், சமய நிலையங்கள் போன்றவற்றைக் கூறலாம்.


(15 நிமிடங்கள்)


**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- கலாசாரம் என்பதை எளிமையாக வரைவிலக்கணப்படுத்துவர்.
- பல இனங்களுக்கிடையே ஒத்துழைப்புடன் கருமமாற்றுவதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.
- கலாசார அம்சங்களை விபரிப்பார்.
- குழுச் செயற்பாடுகளில் ஆக்கரீதியாக செயற்படுவார்.
- கலாசாரப் பாரம்பரியங்களைப் பாதுகாக்க உதவுவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 7.3.1.1









1. மேற்படி படங்களில் உள்ள குறியீடுகள் எதனைக் குறிக்கின்றது?
2. ஒவ்வொன்றும் குறிக்கும் சமயம் எது?
3. சமூகத்தில் பல்வேறு கலாசார இடைத்தொடர்புகள் உண்டு என்பதற்கான உதாரணங்கள் தருக.

## இணைப்பு 7.3.1.2

கீழே தரப்பட்டுள்ள கலாசாரம் தொடர்பான வரைவிலக்கண ஆராய்வு செய்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. அவற்றை வகுப்பில் முன் வைக்கவும்.

**வரைவிலக்கணம்**

கலாசாரம் அல்லது பண்பாடு என்பது அறிவு, வழிபாடு, கலை, சட்டம், விழுமியம், பழக்கவழக்கங்கள் மற்றும் மனிதன் சமூகத்தில் வாழும் ஒரு தனியாள் என்ற வகையில் பெற்றுள்ள பழக்கம், இசைவாக்கம் என்பன உள்ளடங்கிய மொத்தத் தொகுதியாகும்.

E.B. Tylor Primitive Culture
John Murray London

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

குறியீடுகளுடாக ஒரு சமூகம் என்ற வகையில் உரித்தாக்கிக் கொள்வதும் பரம்பரையாகத் தமதாக்கிக் கொள்வதுமான அனைத்து நடத்தைகளுக்கும் வழங்கக்கூடிய கூட்டான பெயர் கலாசாரம்.

சாள்ஸ் ஏ. எல்வூட் 1994
சமூகவியல் அகராதி

எல்லாவிதமான சமூகக் கருமங்களுக்கும் அதாவது குடும்பரீதியாக எடுத்தால் மொழி, திருமணம், உரித்துமுறைகள், வாழ்த்து வரவேற்பு முறைகள், தொழில், கலை ஆகிய அனைத்தும் கலாசாரம் என்று கூறப்படுகின்றன.

சீ. டில்சர் - 1920
அமெரிக்க சமூகவியலாளர் என்ற சஞ்சிகையில் தெரிவித்துள்ளார்.

1. கலாசாரம் என்பதால் கருதப்படுவது யாது என எளிமையாகக் குறிப்பிடுக.
2. கலாசாரம் என்பதை அறிமுகப்படுத்த வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ள சமூகவியலாளர்கள் யார்?
3. கலாசாரத்தின் பிரதான அம்சங்களைக் குறிப்பிடுக.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## செயற்பாடு 7.3.2

**தேர்ச்சி மட்டம்** : தேசிய தனித்துவம் தொடர்பாகவுள்ள குறியீடுகளைச் சரியாகப் பயன்படுத்தி அவற்றை கௌரவிப்பார்.

**செயற்பாடு 7.3.2** : "தேசியக் கொடியை இனங்காண்போம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 7.3.2.1, 7.5.2.2, 7.3.2.3
- ஏ4 கடதாசி, டிமய் கடதாசி, எழுதுகருவி

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 7.3.2.1** :

- இணைப்பு 7.3.2.1 ஐ வகுப்பில் முன்வைக்குக.
- இணைப்பில் உள்ள கூற்றுக்களையும் தேசியக் கொடியையும் அவதானிக்க வழிப்படுத்தவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

| |
|---|
| • 1948 பெப்ரவரி 04 ஏற்றப்பட்ட தேசியக் கொடியில் நான்கு மூலைகளிலும் அரசிலைகளும் மத்தியில் வாள் ஏந்திய சிங்கமும் இருந்தது.<br>• இலங்கைக்கான ஒரு தேசியக் கொடியை உருவாக்க குழுவொன்று நியமிக்கப்படல்.<br>• தேசிய கொடி தொடர்பான குழுவின் தலைவராக எஸ்.டப்லியு.ஆர்.டீ. பண்டார நாயக்கவும் செயலாளராக பேராசிரியர் செனரத் பரண விதானவும் இருந்தனர்.<br>• டி.பீ. ஜாயா, ஜோன் கொத்தலாவல, ஜே.ஆர் ஜயவர்த்தன, லலித ராஜபக்ச, ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆகியோரும் அங்கம் பெற்றனர்.<br>• தேசிய கொடியில் நான்கு மூலைகளிலுமுள்ள அரசிலைகள் (மெத்தா, கருணா, முத்தா, உபேச்சா) என்ற பௌத்தக் கொள்கைகளை வலியுறுத்துகின்றது.<br>• வாளேந்திய சிங்கம் வீரத்தைப் பிரதிபலிக்கிறது.<br>• பொன்நிறம் தமிழர்களையும், பச்சை நிறம் முஸ்லிம்களையும் குறிக்கிறது.<br>• சிவப்பு, மஞ்சள் நிறங்களில் ஒற்றுமை காட்டப்படுகிறது.<br>• தேசியக்கொடியை உருவாக்கியவர்கள் அன்று இலங்கைக் கலைநிறுவனத்தின் தலைவராக இருந்த கலாநிதி ஜே.ஸீ.ஏ. பெரேரா, எஸ்.பி. சாள்ஸ் என்போராவர்.<br>• உருவாக்கப்பட்ட தேசியக்கொடி முதன்முதலாக 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற சுதந்திர தின விழாவில் ஏற்றப்பட்டது. |

(20 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 7.3.2.2 :

- வகுப்பு மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 7.3.2.2, 7.3.2.3 என்பவற்றை வழங்கவும்
- மாணவர்களைக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- நேரம் பற்றி வலியுறுத்துக.

(05 நிமிடங்கள்)

படி 7.3.2.3 :

- குழுத்தேடல்களை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்தவும்.
- பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடலின்போது வெளிக் கொணரமுயற்சிக்கவும்.

| |
|---|
| • இன்றைய தேசியக் கொடி பாவிக்கப்பட முன்னர் வேறு ஒரு தேசியக்கொடி வழக்கிலிருந்தது.<br>• இரண்டுக்குமிடையே சில வேறுபாடுகள் உள்ளன.<br>• புதிய தேசியக்கொடி ஒரு குழு மூலம் ஆக்கப்பட்டது.<br>• தேசியக் கொடியின் இரு நிறக்கோடுகள் சிறுபான்மையினரைக் குறிப்பதாக உள்ளது.<br>• நான்கு மூலைகளில் உள்ள அரச இலைகள், நான்கு பௌத்த போதனைகளைக் குறிக்கிறன. |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தேசியக் கொடியின் நிறங்களும் குறியீடுகளும் எடுத்துக் கூறும் கருத்துக்களை விபரிப்பார்.
- தேசியக்கொடி தேசிய தனித்துவத்தை உறுதிப்படுத்தும் ஒரு குறியீடு என்பதை மதிப்பார்.
- தேசியக் கொடியை உரிய, நிறங்கள், குறியீடுகளுடன் வரைய முற்படுவார்.
- தேசியக் கொடி பற்றி ஏனையவர்களுக்கு எடுத்துக் கூறுவார்.

**பின்தொடர்வேலை**

- தேசியக் கொடியின் படம் ஒன்றைப் பெற்று உங்கள் குறிப்புப் புத்தகத்தில் ஒட்டவும்.
- அதன் குறியீடுகளும், நிறங்களும் குறிக்கும் விடயங்களைக் குறிப்பிடவும்.

## இணைப்பு 7.3.2.1

"1948 பெப்ரவரி 04 இல் முதலாவது சுதந்திர தினத்தின்போது ஏற்றப்பட்ட கொடி இன்று பாவனையில் உள்ள கொடியன்று"

"இலங்கைக்கான புதிய தேசியக் கொடியை வடிவமைக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது"

## இணைப்பு 7.3.2.2

### செயலட்டை

**அறிவுறுத்தல்கள்**

- செயலட்டையை குழுக்களுக்கு வழங்கவும்.
- 7.3.2.3 இணைப்பையும் குழுக்களுக்கு வழங்கவும்.
- இணைப்பு 7.3.2.3 ஐ வாசிக்க வழிப்படுத்தி செயலட்டையிலுள்ள வினாக்களுக்கு விடை எழுத வழிப்படுத்துக.

**1. இடைவெளி நிரப்பவும்.**

1. தேசியக் கொடி குழுவின் தலைவராகக் கடமையாற்றியவர் .................................. ஆவார்.
2. .......................................... அவர்கள் தேசியக்கொடி தெரிவுக் குழுச் செயலாளர் ஆவார்.
3. தேசியக் கொடியை வடிவமைப்புச் செய்த கலைஞர்களில் ஒருவராக ............................... அவர்கள் கருதப்படுகின்றனர்.
4. இன்றைய தேசியக் கொடி முதன் முதலாக ஏற்றப்பட்டது ........................................ ஆண்டு சுதந்திர தினத்திலாகும்.

**2. தேசியகொடி தொடர்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள 'அ' நிரலுக்குப் பொருத்தமான 'ஆ' நிரலின் கூற்றை இணைக்குக.**

| 'அ' நிரல் | 'ஆ' நிரல் |
|---|---|
| பின்னணியில் சிவப்பு, மஞ்சள் நிறங்கள் | தமிழர் |
| பச்சை நிறம் | நான்கு போதனைகள் |
| பொன் நிறம் | வீரம் |
| அரச இலைகள் நான்கும் | ஒற்றுமை |
| வாளேந்திய சிங்கம் | முஸ்லிம்கள் |

**3.** தேசியக்கொடி அமைப்புக் குழுவின் அங்கத்தவர்களின் பெயர்களைக் கூறுக.

## இணைப்பு 7.3.2.3

சுதந்திர இலங்கையின் முதலாவது விழாவின் போது ஏற்றப்பட்ட தேசியக் கொடியின் மத்தியில் வாளேந்திய சிங்கமும் நான்கு மூலைகளிலும் கலை அலங்காரங்களும் இருந்தன. சுதந்திரம் கிடைத்தவுடன் புதியதொரு கொடி அமைக்கும் தேவை ஏற்பட்டது. எனவே அரசாங்கம் அதற்கென ஒரு குழுவை நியமித்தது. அக்குழுவில்,

எஸ்.டப்ளியூ. ஆர்.டீ. பண்டாரநாயக்க - தலைவர்
பேராசிரியர் செனரத் பரண விதான - செயலாளர்
சேர். ஜோன் கொதலாவல
ஜே.ஆர் ஜயவர்த்தன
டி.பீ. ஜாயா
லலித ராஜபக்ச
ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆகியோர் அங்கத்தவராக விளங்கினர்.

புதிய தேசியக்கொடியை வடிவமைத்த கலைஞர்கள் அன்றைய கலை நிறுவனங்களின் தலைவராக இருந்த ஜே.டீ.ஏ.பெரேரா அவர்களும் எஸ்.பீ. சாள்ஸ் அவர்களுமாவர்.

தேசியக் கொடியின் குறியீடுகள் மூலம் பின்பவரும் விடயங்கள் வெளிக் காட்டப்படுகின்றன.

பின்னணியில் உள்ள சிவப்பு, மஞ்சள் நிறங்கள் - ஒற்றுமை
பொன்நிறம் - தமிழர்
பச்சை நிறம் - முஸ்லிம்கள்
வாளேந்திய சிங்கம் - வீரம்
அரச இலைகள் - நான்கு பௌத்த போதனைகள்

## செயற்பாடு 7.3.3

**தேர்ச்சி** : தேசிய தனித்துவம் தொடர்பாகவுள்ள குறியீடுகளைச் சரியாகப் பயன்படுத்தி அவற்றை கௌரவிப்பார்.

**செயற்பாடு 7.3.3** : "தேசிய கீதத்தை முறையாக இசைப்போம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 7.3.3.1
- தேசிய கீதம் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ள ஒலிப்பேழை
- சங்கீத ஆசிரியர்
- சாரணர் ஒருவர்
- தேசியக் கொடியும், கயிறும், கம்பமும்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 7.3.3.1** :

- இணைப்பு 7.3.3.1 இன் படத்தை வகுப்பில் முன்வைக்குக.
- தேசியக்கொடி ஏற்றப்படும் போதும் தேசிய கீதத்தை இசைக்கும் போதும் கவனநிலையில் எழுந்து நிற்க வேண்டிய விதம் பற்றிக் கலந்துரையாடவும்.
- தேசிய கீதம் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேழையைச் செவிமடுக்க ஏற்பாடு செய்யவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - தேசிய கீதத்தை இயற்றியவர் ஆனந்த சமரகோன் ஆவார்.
> - தேசிய கீதம் இசைக்கப்படும் போதும் தேசியக் கொடி ஏற்றும் போதும் அதற்கு கௌரவமளிக்க வேண்டும்.
> - இச்சந்தர்ப்பங்களில் கவனநிலையில் எழுந்து நிற்கவேண்டும்.
> - தேசிய கீதம் மூலம் தேசிய தனித்துவத்துவமும் தேசாபிமானமும் வெளிப்படுத்தப்படுகின்றன.

(15 நிமிடங்கள்)

**படி 7.3.2.2** :

- அனைவரையும் தேசியக்கொடி ஏற்றும் இடத்துக்கு அழைத்துச் செல்லவும்.
- தேசியக்கொடி, கயிறு என்பவற்றை கம்பம் இருக்கும் இடத்துக்கு கொண்டு செல்லவும்.
- சங்கீத ஆசிரியரை கருவிகளுடன் அவ்விடத்துக்கு அழைக்கவும்.
- தேசியக் கொடியை ஏற்ற ஒரு சாரணர் மாணவிகள் அல்லது பொருத்தமான ஒருவரை ஏற்பாடு செய்யவும்.
- மாணவர்களைக் கொடிக்கம்பத்தில் அண்மையில் வரிசையாக நிற்க வழிப்படுத்தவும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- தேசியக் கொடியை ஏற்ற வழிப்படுத்தவும்.
- சங்கீத ஆசிரியரிடம் நெறிப்படுத்தலல் எல்லோரும் தேசிய கீதத்தை இசைக்க வழிப்படுத்தவும்.

(15 நிமிடங்கள்)

படி 7.3.2.2 :

- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் மீட்டாய்வில் ஈடுபடவும்.

| |
|---|
| • தேசிய கொடி ஏற்றப்படும் போதும் தேசிய கீதம் இசைக்கப்படும் போதும் கவன நிலையிலும் நேராகவும் நிற்றல்.<br>• தேசிய கொடி ஏற்றப்படும் போது மங்கலப்பேரிகை முழங்க வேண்டும்.<br>• தேசியக் கொடி ஏற்றப்பட்ட பின்பு தேசிய கீதம் இணைக்கப்பட வேண்டும்.<br>• தேசிய கீதத்தை முறையாக உரிய ஏற்ற இறக்கங்களுடன் இசைக்க வேண்டும். |

(10 நிமிடங்கள்)


**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தேசிய கீதத்தை இயற்றியவர்களைக் கூறுவார்.
- தேசிய கீதம் நாட்டின் தனித்துவத்தைக் காட்டுவதை மதிப்பார்.
- தேசிய கீதத்தை இசைக்கும் போதும் தேசியக் கொடியை ஏற்றும் போதும் நிற்க வேண்டிய சரியான கவன நிலையைப் பழகுவார்.
- தேசிய கீதத்தைச் சரியாக இசைப்பார்.

**பின்தொடர்வேலை**

1. தேசிய கீதத்தைச் சரியாக எழுதவும்.
2. தேசிய கீதத்தின் கருத்தைச் சுருக்கமாக எழுதவும்.
3. தேசிய கீதத்தை இயற்றியவரின் பெயரைக் குறிப்பிடவும்.

## இணைப்பு 7.3.3.1



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# செயற்பாடு 7.3.4

**தேர்ச்சி மட்டம்** : ஒரு நற்பிரசையின் விழுமியங்களை மதிப்பார்.

**செயற்பாடு 7.3.4 :** "விழுமியங்களை மதிக்கும் பிரசைகளாவோம்"

**நேரம்** : 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 7.3.4.1
- இணைப்பு 7.3.4.2
- பெல்ற் பேனை, டிமை கடதாசி, பாடப்புத்தகம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 7.3.4.1** :

- இணைப்பு 7.3.4.1 இலுள்ள விடய ஆய்வை வகுப்பு மாணவர்களுக்கு முன்வைக்குக.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

  - விழுமியங்களைப் பழகுவதன் மூலம் சீரான ஒரு சமூகம் உருவாகும்.
  - தன்னுடன் வாழும் அனைவரதும் ஒத்துழைப்புடன் வாழ வேண்டும்.
  - நட்பு, அன்பு, கருணை என்பவை பிரசைகளிடம் வளர்க்கப்பட வேண்டிய குணப்பண்புகள் ஆகும்.
  - மற்றவர்களின் கருத்தை மதிக்கப்பழக வேண்டும்.
  - சட்டத்துக்குக் கட்டுப்படல், நியாயம், நீதி, பொறுப்பை நிறைவேற்றுதல் என்பவற்றைப் பழகினால் நல்ல ஒரு சமூகம் உருவாகும்.

(10 நிமிடங்கள்)

**படி 7.3.4.2** :

- வகுப்பைப் பொருத்தமாக குழுக்களாக்கவும்.
- இணைப்பு 7.3.4.2 இலுள்ள செயலட்டையை குழுக்களுக்கு வழங்கவும்.
- செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தவும்.
- அவற்றை வகுப்பில் முன்வைக்க ஆயத்தமாக்கவும்
- வலிவு நலிவுகளைச் சுட்டிக்காட்டி விருத்தி செய்யவும்.

(15 நிமிடங்கள்)

**படி 7.3.4.2** :

- குழுத்தேடல்களை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்தவும்.
- பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடலின்போது வெளிக் கொணரமுயற்சிக்கவும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பொறுப்புகளை நிறைவேற்றல், சட்டத்துக்கடிபணிதல், நீதியாக நடந்து கொள்ளல் மூலம் சீரான சமூகம் உருவாகும்.
- பிறர் கருத்தைச் சகித்தல், நடுநிலையாக, கட்டுப்பாடாக கருமமாற்றுவதன் மூலம் சீரான சமூக நிலைப்பாட்டுக்கு உதவ முடியும்.
- பிரசைகள் ஜனநாயக வாழ்ககை முறைக்குப் பழக்கப்பட வேண்டும்.
- சமூகத்திறன்களை விருத்தி செய்து கொள்ள வேண்டும்.
- விழுமியங்களைப் பாதுகாப்பதன் மூலம் சமநிலையான மன எழுச்சி விருத்தியடையும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- ஒரு நற்பிரசையிடமுள்ள விழுமியங்களைக் கூறுவார்.
- விழுமியங்களைப் பாதுகாப்பதன் மூலம் ஒரு சீரான சமூகம் உருவாகும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- சமூகத்தில் ஒரு சீரான வாழ்க்கைக் கோலத்தைக் கட்டியெழுப்பத் தேவையான விழுமியங்களை மேம்படுத்திக் கொள்வார்.
- தருணத்துக்கேற்ப விழுமியங்களைக் கடைப் பிடிப்பார்.

**பின்தொடர்வேலை**

- ஒரு நற்பிரசையிடமுள்ள விழுமியங்களையும் அந்த விழுமியங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் அட்டவணைப்படுத்துக.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 7.3.4.1

## விடய ஆய்வு

சொர்க்கபுரி கனி'ட வித்தியாலயத்தின் தரம் 7 இல் பயிலும் வானதி அதே ஊரைச் சேர்ந்த ஒரு மாணவி, தினமும் பாடசாலைக்கு நடந்து செல்லும் அவள் அருகிலுள்ள சிறுவர்களையும் மிகவும் விருப்பத்துடன் பாடசாலைக்குக் கூட்டிச் செல்வாள். வழி நெடுகிலும் வானதி அக்கா சிறுவர் சிறுமியருக்கு கருத்துக்களை சொல்லவும் தவறுவதில்லை.

பாடசாலை தொடங்க முன்னரே பாடசாலைக்கு வந்தவுடன் வானதி வகுப்பறையைச் சுத்தம் செய்தல், முற்றத்தைக் கூட்டுதல் நேரமிருந்தால் பூஞ்செடிகளுக்கு நீரூற்றுதல் போன்ற வேலைகளைக் கவனிப்பாள்.

ஒரு நாள் வானதி பாடசாலை விட்டுச் செல்லும்போது பாதைக்குக் குறுக்கே கடக்கச் சிரமப்பட்டுக் கொண்டிருந்த ஒரு வயோதிப மாதுவைக் கண்டு சிறுவர்களைப் பாதையோரத்தில் பாதுகாப்பாக நிறுத்தி விட்டு வயோதிபப் பெண்ணுக்கு உதவி செய்வதைக் கண்ட அங்கிருந்தோர் வானதியின் செய்கை குறித்து மெச்சினர்.

## இணைப்பு 7.3.4.2

## செயலட்டை

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஒரு நற்பிரசை என்ற வகையில் நீங்கள் விருத்தி செய்து கொள்ள வேண்டிய விழுமியங்கள் எவை எனப் பட்டியலிடுக.
2. சமூகத்தின் அங்கத்தவர்கள் நல்ல விழுமியங்களுடன் வாழும் போது ஏனையோருக்கு ஏற்படும் நன்மைகள் எவை எனக் குறிப்பிடுக.
3. சமூகத்தின் பிரசைகள் என்ற வகையில் விழுமியங்களைப் பேணுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக.

## செயற்பாடு 7.3.5

**தேர்ச்சி மட்டம் :** தேசிய தனித்துவத்தை வெளிக்காட்டும் குறியீடுகளை சரியாகப் பயன்படுத்துவதுடன் அவற்றுக்கு உரிய கௌரவத்தை வழங்குவார்.

**செயற்பாடு 7.3.5 :** "தேசிய தனித்துவத்தையும் தேசிய ஐக்கியத்தையும் வளர்ப்போம்"

**நேரம் :** 40 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**

- இணைப்பு 7.3.5.1 இலுள்ள தகவற்பத்திரம்
- இணைப்பு 7.3.5.2 இலுள்ள படம்
- இணைப்பு 7.3.5.3
- டிமய் கடதாசி, எழுது கருவி

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படி 7.3.5.1 :**

- இணைப்பு 7.3.5.1 இலுள்ள தகவல்களைச் சேகரித்துவரும்படி ஒரு வாரத்திற்கு முன்னரே மாணவர்களை வழிப்படுத்தவும்.
- இணைப்பு 7.3.5.2 இலுள்ள படத்தை வகுப்பில் முன்வைக்கவும்.
- அதில் காட்டப்பட்டுள்ள இனங்கள் தொடர்பாக விசாரியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

> - எந்த ஒரு நாட்டிலும் மக்கள் பல இனங்களைச் சேர்ந்தவர்களை இருப்பார்.
> - இலங்கையிலும் பல இனத்தவர்கள் வாழ்கின்றனர்.
> - ஒவ்வொரு இனத்துக்குரிய மொழி, வழிபாடுகள், நம்பிக்கைகளுண்டு.
> - அனைத்து இனங்களுக்கும் தம் தனித்துவத்தைப் பேணவே விரும்புவார்.
> - இலங்கையீல் வாழும் இனங்கள் அதைத்தையும் சேர்ந்தவர்களும் இலங்கையர்களே.

(10 நிமிடங்கள்)

**படி 7.3.5.2 :**

- மாணவர்களைக் குழுக்களாக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்குமான தலைப்புகளை சீட்டிழுப்பின் மூலம் வழங்கவும்.
- குழுக்களிடையே தகவல்களைப் பரிமாற அறிவுறுத்தல் வழங்கவும்.
- இணைப்பு 7.3.5.3 இலுள்ள செயலட்டையை குழுக்களுக்கு வழங்கவும்.
- செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்தவும்.

(15 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 7.3.5.3 :

- குழுச் சேகரிப்புகளை முன்வைக்க வழிப்படுத்தவும்.
- வேறு குழுக்களின் தகவல்கள் பற்றிக் கலந்துரையாட வாய்ப்பளிக்கவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

|  |
|---|
| • இலங்கையின் அமைவிடமானது பல்வேறு இனத்தவர் இங்கு வாழுவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.<br>• அனைத்து இனத்தவர்களும் இலங்கையின் சமூக, பொருளாதார, கலாசார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர்.<br>• ஒத்துழைப்புடன் செயற்படுவதன் மூலம் தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முடியும்.<br>• ஒன்றாகக் கருமமாற்றி ஒரு நாடு என்ற வகையில் ஒன்றுபட வேண்டும்.<br>• தேசிய ஐக்கியம் தேசிய அபிவிருத்திக்கு வழிவகுக்கும். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- ஒரு நாடு பல இனங்களைக் கொண்டிருக்கும் எனக் கூறுவார்.
- தேசிய ஐக்கியத்தினால் தேசிய அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்பதை ஏற்பார்.
- தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்த பல்லினப் பிரமுகர்களின் பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பார்.
- தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்வார்.
- குழுவில் ஒற்றுமையுடன் கருமமாற்றுவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 7.3.5.1

பின்வரும் தலைப்புகளின் கீழ் தகவல்களைத் திரட்டவும்.

1. இலங்கையின் இனக்குழுக் கட்டமைப்பு
2. இலங்கை பல்லினங்களைக் கொண்டிருப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள்.
3. இலங்கை சுதந்திரம் பெறப்போராடிய தலைவர்களும் அவர்களின் சேவைகளும்.
4. இன்றைய இலங்கையில் பல்லின மக்கள் இணைந்து செயற்படும் சந்தரப்பங்கள்
   உ-ம்: கலாசார விழாக்கள்
5. இலங்கையின் அபிவிருத்திக்கு பல இனங்களைச் சேர்ந்தவர்களின் பங்களிப்புக் கிடைத்தமைக்கான சான்றுகள்.

## இணைப்பு 7.3.5.2



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு 7.3.5.3

குழு 1
- இலங்கையின் இன ரீதியான சனத்தொகையை வரைபின் மூலம் காட்டுக.

குழு 2
- இலங்கைக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத்தருவதில் பங்களிப்புச் செய்த தலைவர்களையும் அவர்களின் சேவைகளையும் பட்டியற்படுத்துக.

குழு 1
- தற்கால இலங்கையில் பல்வேறு இனக்குழுக்கள் ஒன்றுபட்டுச் செயற்படும் சந்தர்ப்பங்களைப் பட்டியற்படுத்துக.

குழு 1
- இலங்கையின் அபிவிருத்திக்குப் பல்வேறு இனக்குழுக்களினதும் பங்களிப்பைச் சான்றாதாரங்களுடன் முன்வைக்குக.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# கணிப்பீடும் மதிப்பீடும்

# கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் ஊடாக எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை மாணவர்கள் அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காகவும், மாணவர்கள் அடைந்து கொண்ட பாண்டித்திய மட்டங்களை இனங்காணவும் வகுப்பறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தக் கூடிய இடைத் தொடர்புடன் கூடிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களாக கணிப்பீடும், மதிப்பீடும் காணப்படுகின்றன. கணிப்பீடு சரியான முறையில் நிறைவேற்றப்படின் வகுப்பறையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் உரிய தேர்ச்சியின் அண்ணளவு பாண்டித்திய மட்டத்தையேனும் அடைந்து கொள்வது சிரமமாக இருக்காது. மாணவர்கள் அடைந்துள்ள பாண்டித்திய மட்டம் எதுவென்பதை அளவிடுவதே மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் தாம் மாணவர்களுக்கு இரு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அத்தகைய வழிகாட்டல் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back) முன்னூட்டல் (Feed Forward) என்பவையாகும். மாணவர்களின் நலிவுகளையும், பலவீனங்களையும் கண்டறிந்து கொள்ளும் போது அவர்களின் கற்றற் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்குப் பின்னூட்டல்களையும் மாணவர்களின் ஆற்றல்களையும் வலிவுகளையும் இனங்காணும் போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டல்களையும் வழங்க வேண்டும்.

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் வெற்றிக்காக பாடநெறியின் தேர்ச்சிகளில் எந்தத் தேர்ச்சியை எந்த மட்டத்திற்கு அடையப் பெற்றுள்ளது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள் மாணவரின் வெற்றிகரமான மட்டங்களின் ஊடே மாணவர் அண்மித்த தேர்ச்சி மட்டத்தை இனங்காணுதல், இதன் மூலம் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதுடன் மாணவரும் ஆசிரியரும் உட்பட வேறு சம்பந்தப்பட்ட பகுதியினருக்கு மாணவரின் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைதல் வேண்டும்.

உங்கள்முன் வைக்கப்படும் இப்பாடநெறி மாணவர் மைய (Student centered) தேர்ச்சி அடிப்படையிலான செயற்பாட்டை அடிப்படையாக் கொண்ட (Activity Orievted) அணுகுமுறையைக் கொண்டிருக்கும். வாழ்க்கையை அர்த்தமுடையதாக ஆக்கிக் கொள்வதற்காக செயலின் மூலம் கற்றல் ஆசிரியரின் நிலைமாற்று வகிபங்கின் (Transformation Role) உள்ளார்த்தமுமாகும்.

ஆரம்பத்தில் விருத்தி செய்யப்பட்ட செயற்பாட்டுத் தொடரின் ஊடே செயற்படுத்தப்படும் இப்பாடநெறியில் கற்றல் - கற்பித்தலை கணிப்பீடு - மதிப்பீட்டுடன் ஒன்றிணைக்க முயற்சி செய்யப்பட்டு உள்ளது. அந்தந்த செயற்பாடுகளின் இரண்டாம் படிமுறையில் மாணவக் குழுக்கள் ஆய்வில் ஈடுபடும் போது அவர்களைக் கணிப்பீடு செய்யவும் செயற்பாடுகளில் மூன்றாம் படிமுறையின் போது மாணவர் சுய கண்டறிதலைச் சமர்ப்பிக்கவும் விவரணம் செய்யவும் முனையும் போது அவர்களை மதிப்பீடு செய்ய முடியும். மாணவர்கள் ஆய்வில் ஈடுபடும் போது மாணவரிடையே நடமாடியவாறு அவர்கள் ஆற்றும் பணிகளை அவதானிக்கலாம். வகுப்பறையில் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இங்கு கலந்துரையாடித் தீர்த்து வைக்கலாம்.
கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இலகுவாக நிறைவேற்றும் வகையில் ஐந்து நியதிகள் முன்மொழியப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் மூன்று நியதிகளும் அவ்வத் தேர்ச்சிகளைக்

கட்டியெழுப்புவதில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவு, மனப்பாங்கு, திறனை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும். இறுதி இரண்டு நியதிகள் வாழ்க்கையில் பயன்படும் பண்புகள் இரண்டை விருத்தி செய்வதற்காக உதவுகின்றன. இந்நியதிகளுடன் தொடர்பான நடத்தை மாற்றங்களை ஐந்தையும் மாணவர்களின் செயற்பாட்டின் போது இனங்கண்டு கொள்ள ஆசிரியர்கள் முயற்சிப்பதுடன், கணிப்பீட்டின் கீழ் அத்தகைய நடத்தைகள் உருவாவதை உறுதிப்படுத்தவும் மதிப்பீட்டின் கீழ் உருவாக்கப்பட்ட நடத்தைகளை அளவிடவும் ஆசிரியர் முன்வர வேண்டும்.

மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதால் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை வரிவாக்கலாம். அதற்கென செயற்பாட்டுத் தொடர்ச்சி (ACTIVITY CONTINUM) ஊடாக மதிப்பீட்டு வாய்ப்புக்கள் பலவற்றை ஏற்படுத்த ஆசிரியருக்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன. மதிப்பீட்டுப் புள்ளிகளை (EVALUATION POINT) இனங்காண்பதற்கு இலவுகான வகையில் செயற்பாட்டுத் தொகுப்புக்கள் (ACTIVITY CLUSTER) பலவற்றுக்கு வேறாக்குவதன் மூலம் மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அர்த்தமுடையதாக ஆக்கலாம். எல்லாச் செயற்பாட்டுத் தொகுப்பின் ஆரம்பத்திலும் அவ்வந்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு கருவிகள் யாவை என மாணவருக்கு அறிவித்தல் அவசியமாகும்.

மதிப்பீட்டு வகைகளைத் தெரிவு செய்யும் போது மாணவரின் கற்றலின் தூண்டல் விரிவாக்கும் சுறுசுறுப்பான செயற்பாடுகளைப் பயன்படுத்தல் முக்கியமாகும். இதற்குரிய செயற்பாடுகளின் பட்டியல் அட்டவணை பின்வருமாறு.

எண்ணக்கரு படங்கள்
சுவர்ப்பத்திரிகை
வினாவிடை நூல்கள்
வினாவிடை நிகழ்ச்சி
மாணவர் செயலாற்றற் கோவை
மாணவர் கண்காட்சிகள்
விவாதங்கள்
உரையாடல் மன்றங்கள்
கருத்தரங்குகள்
திடீர் உரைகள்
நடிபங்குகள்
இலக்கிய மீளாய்வுச் சமர்ப்பணம்
களப்புத்தகம் (இயற்கை கற்கை நாளேடு)
செய்முறைச் சோதனைகள்

பாடநெறியின் மூன்றாம் பகுதியில் உத்தேச மதிப்பீட்டுப் புள்ளியாகவும் அதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுக் கருவிகளும் இனங்காண்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக செயற்பாட்டின் மூலமும் அவற்றிடையேயும் மதிப்பீட்டையும் இருவிதமாக செய்வதனால் கற்றல் - கற்பித்தல் செயல் ஒழுங்கை மேலும் விரிவாக்கக்கூடியதுடன் உற்சாகமாக கற்றலில் ஈடுபடவும் மாணவர்களுக்கு இயலுமாகும்.
மாணவர்களுக்கான அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குகளை நீடிக்கும் உபகரணங்களைத் தயார் செய்வது அடுத்த படிமுறையாக

இருப்பதுடன் ஒவ்வொரு செயற்பாட்டினதும் ஆரம்பத்தில் இவ்வுபகரணங்கள் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தலும் ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் பணியாகும். இதன்படி கற்றலையும் கற்பித்தலையும் நீடிப்பதற்காக ஓர் ஆசிரியர் பயன்படுத்தக் கூடிய சில வகைகள் பின்வருமாறு:-

- எண்ணக்கருப் படம் (Concept Maps)
- சுவர்ப் பத்திரிகை (Wall News Papers)
- அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயலடைவுக் கோவை (Portfolios)
- மாணவர் ஆக்கங்களின் கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- உடன் பேச்சு
- வகிபாகமேற்றல் (Role Plays)
- இலக்கிய விமர்ச்சனம் (Presentation of Literature Reviews)
- களநூல், இயற்கை நாளேடு, பயிற்சிப் புத்தகம் (FieldBooks/ Nature Diaries)
- செய்முறைப் பரீட்சை (Practical Tests)

பாடத்திட்டத்தின் மூன்றாவது பகுதி கற்றல்-கற்பித்தல் நீடிப்புச் சந்தர்ப்பங்கள், அதற்காக தெரிவு செய்யக் கூடிய உபகரணங்கள் என்பவற்றை அறிமுகம் செய்வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு செயற்பாட்டின் உள்ளேயும், அவற்றுக்கிடையையும் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இரண்டு வழிகளிலும் மேற்கொள்வதன் மூலம் கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கு மேலும் விரிவடைவதுடன், ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் கற்றலில் ஈடுபடுவதற்கு மாணவர்களுக்கு முடியுமாகும்.

# கணிப்பீடும் மதிப்பீடும் (வாழ்க்கைத் தேர்ச்சிகள்)

## 1. சுய கணிப்பீடு

பாடத்துடன் தொடர்புடைய தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு சுய கணிப்பீடொன்றை திட்டமிடல், குறித்த பாடத்தைக் கற்பிப்பதற்கு முன்பதாக மாணவர் அது தொடர்பாக் கொண்டுள்ள கருத்து, கொள்கைகள், மனப்பாங்குகள் ஆகியவற்றை பாடத்தின் அல்லது தவணையின் இறுதியில் குறித்த தலைப்புக்கள் தொடர்பில் ஒப்பிட்டு கணிப்பிட முடியும். தமது பலங்களையும் பலவீனங்களையும் இத்தகைய சுய கணிப்பீட்டின் மூலம் விளங்கிக் கொள்ள வேண்டமென எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலையிலுள்ள மனிதப் பௌதிக வளங்களைக் கவனத்திற்கொண்டு ஆசிரியரின் விருப்பிற்கேற்ப கணிப்பிடுவதற்கும் மதிப்பிடுவதற்கும் ஏற்ற நியதிகளை இனங்காணலாம்.

## 2. சகபாடிகளின் கணிப்பீடு

வேலையொன்றை ஒவ்வொரு குழுவிற்கும் ஒப்படைத்த பின்னர் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்ற மாணவர் காட்டும் (பங்களிப்பை, ஒழுங்கமைப்பை, ஆளிடைத் தொடர்புகளை திட்டமிடல்) ஆகிய பல்வேறு நியதிகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகளை செய்ய முடியும். செயற்பாட்டினிறுதியில் குறித்த குழுக்களுக்கு மீள வலியுறுத்துதல் வழங்குவதற்காகப் பாராட்டுகள், பரிசுகள் ஆகியவற்றை வழங்குதல் முக்கியமாகும்.

## 3. செயல் அடைவுக் கோவையைப் பேணல்

- தவணையின் ஆரம்பத்திலேயே செயல் அடைவுக்கோவைகளைத் தயாரிப்பது பற்றிய தேவையான அறிவுறுத்தல்களை வழங்கல்.
- தவணையின் மத்தியில் குறித்த வேலைகளை பரிசோதித்து மீளூட்டங்களை வழங்கல்
- இறுதி மதிப்பீட்டுக்காக பின்வரும் நியதிகளை உபயோகித்தல் பொருத்தமானது
    - அறிவுரைகளைப் பின்பற்றல்
    - ஒழுங்கு முறைமை
    - ஆக்கபூர்வமான தன்மை
- குறித்த ண்ணக்கரு, தேர்ச்சி ஆகியவற்றை விளங்கிக் கொண்டள்ளனரா என்பதையும் இறுதியில் காட்சிப்படுத்தப்படுகின்றதா என்பதையும் தீர்மானித்தல்.

## 4. செயற்றிட்டத்தை மதிப்பிடல்

- தவணை முடிவில் சிறிய செயற்றிட்டமொன்றை தனியாகவோ குழுவாகவோ செயற்படுத்தல். இதற்கான நியதிகளை விருப்பமானவாறு தயாரிக்கலாம்.

## 5. முறைசார் மதிப்பீடு

வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள், கருத்துக்களை வினாக்கேட்டல் மூலம் பரீட்சிக்க வேண்டும். இவ்வினாக்கள் மூலம் அறிவு, திறன், எண்ணக்கரு பிரயோகம் ஆகியன தொடர்பாக பரீட்சித்தல் வேண்டும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# கற்றல் கற்பித்தல் செயலொழுங்கை நீடிக்கும் உபகரணங்கள்.

**தரம் : 07**

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் - தவணை 01**

**2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**

**பகுதி I**

1.1 தனித்துவத்தை உறுதிப்படுத்திக் கொண்டு சுய விளக்கத்தை விருத்தி செய்வார்.
1.2 வாழ்வின் வெற்றிக்குத் தேவையான சக்திகளை உரியவாறு பயன்படுத்திக் கொள்வார்.
1.3 சரியான வாழ்க்கை நோக்கங்களை நோக்கி தனது செயற்பாடுகளை மேற் கொள்வார்.
2.1 செயற்பாடு அல்லது வினோதம் போன்றவற்றில் ஈடுபடுவார்.
2.2 அழகியல் சார் செயற்பாடுகளினூடாக சமநிலையான ஆளுமையை வளர்த்துக் கொள்வார்.
3.1 வெற்றிகரமான வாழ்க்கைக்காக விழுமியங்களைப் பயன்படுத்துவார்.
4.1 வாழ்வின் சவால்களையும் சந்தர்ப்பங்களையும் ஆக்கப்பூர்வமான சிந்தனையுடன் அணுகுவார்.
5.1 வெற்றிகரமான வாழ்க்கைக்காக சிறந்த ஆளிடைத்தொடர்புகளைப் பயன் படுத்துவார்.

**பகுதி II**

- குடும்பத்தினருடனும் அயலவருடனும் அன்னியோன்னியமான தொடர்புகளைப் பேணி ஒற்றுமையுடன் வாழப் பழகுவார்.
- தமது கலாசாரததைப் பேணுவதுடன் ஏனையோரின் கலாசாரத்துக்கும் மதிப்பளிப்பார்.
- தேசிய தனித்துவத்தை வெளிப்படுத்தும் குறியீடுகளை முறையாகப் பயன்படுத்திக் கௌரவமளிப்பார்.

**3.0 பாட உள்ளடக்கம்**

- சுய விளக்கத்தை மேம்படுத்தல்
- வாழ்வின் வெற்றிக்குத் தேவையான சக்திகளைப் பயன்படுத்தல்.
- உரிய முறையில் வாழ்வின் இலக்கணத்தைக் கட்டியெழுப்புதல்
- விளையாட்டு, அழகியற்செயற்பாடுகளில் ஈடுபடல்
- வாழ்வின் சவால்கள், சந்தர்ப்பங்களின் போது ஆக்கபூர்வமான சிந்தனையுடன் செயற்படல்.
- சிறந்த ஆளிடைத் தொடர்பைப் பேணல்
- ஒற்றுமையாக வாழுதல்
- தமது கலாசாரத்தைப் போன்று ஏனைய கலாசாரங்களுக்கும் மதிப்பளித்தல்.
- தேசிய தனித்துவத்தைக் கட்டியெழுப்புதல்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 4.0 உபகரணத்தின் இயல்பு - வாழ்க்கைத் தேர்ச்சிகள்

- வாழ்க்கைத்தேர்ச்சிகளில் பல்வேறு நிகழ்வுகளையும் ஒழுங்கமைப்புச் செய்வதற்கு தவணை ஆரம்பத்திலேயே தயாராகவும்.
- நிகழ்வுகளைத் திட்டமிடல்
  - நாடகம்
  - கவிதை
  - பாடல்
  - விவாதம்
  - நடனம்
  - சித்திரக்கண்காட்சி
  - பேச்சுப்போட்டி

  போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். மேற்படி நிகழ்வுகளிலும் 7 ஆந் தரத்திற்குரிய வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் பாடத்தலைப்புகளை வெளிப்படுத்தும் விதமாகவும் தேர்ச்சிகளை மேம்படுத்துவதாகவும் அமைதல் வேண்டும்.
- ஒழுங்கமைக்கப்புக்காக அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் குழாம், பெற்றோர், பழைய மாணவர் போன்றோரின் ஒத்துழைப்புப்பைப் பெறவும்.
- மேற்படி நிகழ்வுகளின்போது தரம் 7 இலுள்ள அனைத்து மாணவரையும் பங்கு பற்றச் செய்தல் முக்கியமானதாகும்.
- மேலதிக நேரத்திற்காக அதிபரின் முறையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
- நிகழவுக்காக வசதியான தினத்தை ஒதுக்கிக் கொள்ளவும். முதலாந்தவணை இறுதித்தினமும் உகந்தது.
- நிகழ்வுகளில் பங்குபற்றும் மாணவனுக்குச் சான்றிதழ்களையும் வழங்க முடியும்.
- பல்வேறு நிகழ்வுகளுக்கான கருப்பொருள்கள் நல்வாழ்விற்கு உகந்த சக்திகளை நெருக்கமாகக்கிக்கொள்ளுதலும் தீய சக்திகளை விலக்குதலும்
- சரியான வாழ்வின் இலக்கைக் கட்டியெழுப்புதல்
- விழுமியத்துடனான வாழ்க்கை
- வாழ்வின் சவால்கள், சந்தர்ப்பங்க்ளின்போது ஆக்கப்பூர்வமான சிந்தனையுடன் செயற்படல்.
- சிறந்த ஆளிடைத்தொடர்பைப் பேணுவதன் பொருட்டு தமது கலாசாரத்தைப் போன்று ஏனைய கலாசாரங்களுக்கும் மதிப்பளித்தல்.
- தேசிய தனித்துவத்தைக் கட்டியெழுப்புதல்.

பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்கமைத்தல்

- இதன்போது மாணவரின் பங்களிப்புடனான ஆக்கங்கள், படைப்புகளை முன்னிலைப்படுத்தல்
- ஆக்கங்களைப் படைக்கும்போது ஆசிரியர், விசேட ஆலோசகரின் ஒத்துழைப்பு அவசியம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 7.0 மதிப்பீடு

| மாணவர்களின் பெயர்கள் | முன்வைப்பு | ஆக்கபூர்வமான தன்மை | ஒத்துழைப்புடன் கருமமாற்றல் | ஒழுங்கமைப்பு | ஆலோசனைகளைப் பின்பற்றல் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

A - மிக நன்று
B - நன்று
C - சாதாரணம்
D - விருத்தி செய்யப்பட வேண்டும்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# கற்றல் கற்பித்தல் செயலொழுங்கை நீடிக்கும் உபகரணங்கள்.

**தரம் : 07**

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் - தவணை 02**

**2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**

- சமூகத்தில் நிலவும் இடைத்தொடர்பை ஆராய்வார்.
- உரிமைகளுடன் இணைந்த கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றுவார்.

**3.0 பாட உள்ளடக்கம்**

- சமூகத்தில் நிலவும் இடைத்தொடர்புகள்
- சமூகம் தொடர்பிலான எமது கடமைகளும் பொறுப்புக்களும்

**4.0 உபகரணத்தின் இயல்பு**

சிரமதானம்

**5.0 உபகரணத்தின் நோக்கம்**

- மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் இடைத்தொடர்புகளைப் பேணல்.
- உழைப்பின் மீது அபிமானத்தை ஏற்படுத்தல்

**6.0 உபகரணத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

**பொது அறிவுறுத்தல்கள்**

- இரண்டாம் தவணையின் முதல் வாரத்தில் ஒரு சிரமதானம் நடைபெற இருப்பதாக மாணவர்களுக்கு அறிவிக்கவும்.
- ஏற்பாட்டு வேலைகளுக்கான அதிபர் உட்பட ஆசிரியர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளவும்.
- செயற்பாட்டினூடாக மாணவர்களை உரிய இலக்கு நோக்கி வழிப்படுத்தவும்.
- தேவையான இடங்களில் பின்னூட்டலை வழங்கவும்
- எல்லா மாணவர்களினதும் பங்கு பற்றலைப் பெறவும்.
- சிரமதானத்துக்கான இடத்தையும் செய்ய வேண்டிய வேலைகளையும் திட்டமிட்டுக் கொள்ளவும்.
- பெற்றோர் பங்கு பற்றலின் அவசியத்தை மாணவர்களுடாக அறிவிக்கவும்.
- மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.
- வேலைத்திட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை தேவையான விதத்தில் திட்டமிட்டுக் கொள்ளவும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

### ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்கள்

**முன்னாயத்தம்**

- பாடசாலையில் அல்லது பாடசாலை அமைந்துள்ள கிராமத்தில் அல்லது அண்மிய ஒரு சமய நிறுவனத்தில் மாணவர் பங்கு பற்றலுடன் ஓர் இடத்தை அவதானித்து அந்த இடத்தில் மாணவர் பங்கு பற்றலுடன் சிரமதானம் மூலம் நிறைவேற்றக் கூடிய வேலைகளைத் தீர்மரினித்துக் கொள்ளவும். (மாணவர்களின் வயது மட்டத்துக்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்)
- சிரமதானம் நடைபெறும் தினங்களைத் தீர்மானிக்கவும்.
- இவ்வேலைத்திட்டம், அதன் நோக்கம், மாணவர்கள் அத்தகைய பணியில் ஈடுபடுவதன் முக்கியத்துவம் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளிக்கவும்.
- தேவையான உபகரணங்களை ஏற்பாடு செய்து கொள்ளவும். விவசாய ஆசிரியரின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும்.
- சிரமதான தினத்தில் பெற்றோர், மாணவர்களுடன் குறிப்பிட்ட இடத்தில் ஒன்று சேர்ந்து பொருத்தமான முறையில் குழுக்களாக்கி வேலைகளைப் பகிர்ந்தளிக்கவும்.
- தேவையான உபகரணங்களை வழங்கவும்.
- மாணவர்களின் பாதுகாப்பு பற்றிக் கவனம் செலுத்தவும்.
- சிரமதான முடிவில் செய்த வேலையை மதித்து ஒரு சிற்றுரை ஆற்றுக.

### மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

- ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களின் படி ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் உங்களுக்கு வழங்கப்படும் பணியை நிறைவு செய்யவும்.

## 7.0 மதிப்பீடு

| மாணவர்களின் பெயர்கள் | ஒத்துழைப்புடன் கருமமாற்றுவார் | ஒப்படைத்த பணியை நிறைவேற்றுவார். | உரிய நேரத் தில் கருமமாற் றுவார். | அறிவுறுத்தல்க ளைக் கடைப் பிடிப்பார். | வளங்களைப் பகிர்ந்து கொள்வார் | மகிழ்ச்சியாகக் கருமமாற்றுவார். |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

A - மிக நன்று B - நன்று

C - சாதாரணம் D - விருத்தி செய்யப்பட வேண்டும்

## கற்றல் கற்பித்தல் செயன்முறை விரிவுபடுத்தற் கருவிகள்

## தரம் : 07

**1.0 மதிப்பீட்டுச் சந்தர்ப்பம்** தவணை 03

**2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**

- சமூகத்தில் நிலவும் இடைத்தொடர்புகளை ஆராய்வார்.
- உரிமைகளுடன் இணைந்த கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றுவார்.

**3.0 பாட உள்ளடக்கம்**

7.2.2 சமூகத்தில் நிலவும் இடைத் தொடர்புகள்

7.2.3 சமூகம் தொடர்பான எமது கடமைகளும் பொறுப்புகளும்

**4.0 உபகரணத்தின் தன்மை**

- தமது பிரதேசத்தில் உள்ள சங்கங்கள்/ கழகங்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கையிடல்

**5.0 உபகரணத்தின் நோக்கம்**

- தம் பிரதேசத்திலுள்ள தொண்டர்கள் அமைப்புக்களை இனங்காணல்
- அவ்வமைப்புகள் சமூக மேம்பாட்டுக்கு உதவும் விதம் பற்றிய விளக்கம் பெறல்.
- அவ்வமைப்புக்கள் தொடர்பான அங்கத்தவர்களின் உரிமைகள், கடமைகளை இனங்கண்டு கொள்ள வாய்ப்புவழங்குதல்.

**6.0 உபகரணத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்.**

- ஒரு பிரதேசத்தில் காணப்படும் தொண்டர் அமைப்புக்கள் சிலவற்றைக் குறிப்பிடவும்.
- அவ்வமைப்புகள் தொடர்பான சுருக்கமான அறிமுகத்தைச் செய்யவும்.
- அவற்றுள் தாம் விரும்பிய இரண்டைத் தெரிவு செய்து கொள்ள மாணவர்களை வழிப்படுத்தவும்.
- தெரிவு செய்த அமைப்பின் உத்தியோகத்தர் ஒருவரைச் சந்தித்துப் பின்வரும் தகவல்களைப் பெற அறிவுறுத்தவும்.
- அத்தகவல்களைத் தொகுத்து அமைப்புகள் இரண்டு பற்றி அறிக்கைகளைத் தனித்தனியே தயாரிக்க வழிப்படுத்தவும்.
- இரண்டு அமைப்புகள் தொடர்பாகப் பின்வரும் உபதலைப்புகளில் தகவல்திரட்ட அறிவுறுத்தவும்.
  - பெயர்
  - ஆரம்பம்
  - நோக்கங்கள்
  - அங்கத்தவர் எண்ணிக்கை
  - நிறைவேற்றியுள்ள பணிகள்

**மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- நீங்கள் விரும்பிய தொண்டர் அமைப்புகள் பற்றிக் கண்டறிக.
- அவற்றின் உத்தியோகத்தர் ஒருவரைச் சந்தித்து மேலே கூறிய அறிவுறுத்தல்களின் படி தகவல்களைத் திரட்டி அறிக்கையிடவும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**பின்வரும் நியதிகளின்படி அறிக்கைகளை மதிப்பீடு செய்யவும்.**

- தகவல்களின் உண்மை நிலை
- பொருத்தப்பாடு
- தகவல்களின் அளவு
- மொத்த நிறைவு
- தகவல் சேகரிப்பிற்கான ஆர்வம்

A - மிக நன்று
B - நன்று
C - சாதாரணம்
D - விருத்தி செய்யப்பட வேண்டும்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.